₹10

fmpb

அறைகூவல்

Volume 52 Issue 4 April 2022

அவர் தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

(எபிரெயர் 12:2)





இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே,
அவருடைய மரண நாளைப்
புனித வெள்ளியாக்கிற்று!
தங்களுக்கு எமது
ஆசீர்வாதமான புனித வெள்ளி மற்றும்
மகிழ்ச்சியான ஈஸ்டர் நல்வாழ்த்துக்கள்!

சிலுவையல்லாது கிரீடமா!



ஆரம்ப வரிகள்...

வேதாகம சத்தியத்தின் முக்கியக் கூறுகளாகிய, சிலுவை மற்றும் கிரீடத்திற்குமிடையே பெரும்பாலும் ஒரு நெருக்க மான பிணைப்பு இல்லாதிருப்பதைக் கிறிஸ்தவ வரலாற்றில் காணலாம். சிலுவை, இயேசுகிறிஸ்துவின் மனித பிறப்பின் நோக்கத்தையும், சிலுவை மரணத்தையும் குறிக்கிறது; அதே சமயம் கிரீடம் அவரது உயிர்த்தெழுதலையும், அவர் ராஜாதி ராஜாவாக, கர்த்தாதி கர்த்தாவாக முடிசூட்டப்பட்டிருப்பதையும் குறிப்பிடுகிறது. இவ்விரு விசுவாச சத்தியங்களும் ஒன்றுக்கொன்று பிரிக்க முடியாதவைகளாகும்.

இயேசுகிறிஸ்து, தமது இவ்வுலக வாழ்விலும் ஊழியத்திலும், உடல்ரீதியான துன்பம் நிறைந்த பலப் போராட்டங்களையும், உளரீதியான நிராகரிப்பையும் சந்தித்தார். அதாவது, அவருக்கு 'சொந்தமானவர்களோ' (யோ.7:3-5) அவரது தலைமைத்துவத்தை விரும்பவில்லை. அவரது சொந்த ஊரிலுள்ள மக்கள் அவரையோ, அவருடைய ஊழியத்தையோ அங்கீகரிக்கவில்லை (மாற்கு 3:1-6). அவரைப் பின்பற்றியவர்கள் அநேகர் அவரை விட்டு விலகினார்கள் (யோ.6:60-71). அவர் தேவாலயத் தலைவர்களாலும், பிறராலும் எள்ளி நகையாடப்பட்டார் (மத்.27). அவர், தமது சொந்த சீஷனாலேயே காட்டிக்கொடுக்கப்பட்டார் (மத்.26:14). அவர் நியாயமற்ற முறையில் கண்டனத்திற்கும், கஷ்டத்திற்கும் உட்படுத்தப்பட்டார். (மாற்.14:50; மத்.26:69-74).

மேலும் சிலுவையற்ற கிரீடத்தைப் புறக்கணிக்க இயேசு மூன்று பெரிய சோதனைகளை எதிர்கொண்டார் (மத். 4:1-11).

முதலாவதாக, இயேசுகிறிஸ்து, 'கல்லை அப்பமாக்கி' தமது உடல் வேட்கையைத் தீர்க்க சாத்தானால் ஊக்குவிக்கப்பட்டபோது, தேவவார்த்தையினால் தம்மைத் தேற்றிக்கொண்டு, தமது வல்லமையைத் தவறாகப் பயன்படுத்தி சிலுவை இல்லாத கிரீடத்தை அவர் பெறவிரும்பவில்லை எனக் காண்கிறோம்.

இரண்டாவதாக, இயேசுவை, தேவாலயத்தின் உப்பரிகையின் மேலிருந்து தாழக்குதிக்க சாத்தான் கேட்டுக்கொண்டபோது, அவர் அவ்வாறு தேவனைச் சோதிக்க மறுத்ததின் மூலம், சிலுவையற்ற கிரீடத்தைப் பெற அவர் வாஞ்சிக்கவில்லை என்பதை அறிகிறோம்.

மூன்றாவதாக, இயேசுவுக்கு, சாத்தான் ஒரு மலைஉச்சியிலிருந்து உலகத்தின் எல்லா ராஜ்யங்களையும் காட்டி, ஒருகணம் அவர் தன்னைக் குனிந்து வணங்கினால், இவ்வுலகத்தின் அனைத்து ஆசாபாசங்களையும் அவருக்கு அளிப்பதாகக் கூறவே, அவர் அவனைக் கடிந்துக்கொண்டு, தேவனுக்கு மட்டுமே ஆராதனை செய்ய வேண்டுமென அறுதியிட்டுக்கூறி, சிலுவையற்ற கிரீடத்தை ஏற்கவில்லை எனப் பார்க்கிறோம்.

இன்றும் அநேக கிறிஸ்தவர்கள் இவ்வுலகில் இம்மாதிரியான சோதனைகளை எதிர்கொள்கிறார்கள். பலர் அரைகுறையான அர்ப்பணிப்புடன் ஜீவகிரீடத்தைப் பெற விரும்புகிறார்கள்; பரலோகத்தின் பாக்கியத்தைச் சிலுவையைச் சுமக்காமலேயே அடைய முயலுகிறார்கள்; சிலுவையில்லாத கிறிஸ்தவ ஜீவியம் செய்து எப்படியாவது ஜீவகிரீடத்தைப் பெற்றுவிட வேண்டுமென கனவு காண்கிறார்கள். "சிலுவையில்லாத மலிவான கிறிஸ்தவ ஜீவியம், இறுதியில் கிரீடம் இல்லாத ஒரு பயனற்ற வாழ்வைத்தான் நல்கும்" என்று ஆவிக்குரிய எழுத்தாளரான ஜே.சி.ரைல் கூறுகிறார்.

ஆம், வேதாகம சத்தியத்தின் மையக் கருப்பொருட்களாகிய 'சிலுவையும் கிரீடமும்' நம் வாழ்வில் ஒருங்கே இடம்பெற்றால், நமது சீஷத்துவம் மிகவும் இன்றியமையாததாகவும், நம்மிலிருந்து இயற்கையாகவே வெளிப்படுவதுமாகவும் இருக்குமே தவிர, சிலுவையற்ற ஒரு கிறிஸ்தவ ஜீவியத்தை நோக்கி அது நாடி ஓடாது. இந்தத் தவசு காலத்தில், இயேசுகிறிஸ்து நம் ஒவ்வொருவரையும் அளவற்ற அத்தகைய தம் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினால் அலங்கரிக்க வாஞ்சிப்பதால், அதற்கு நாம் ஜீவகிரீடத்தைப் பெற வழிவகுக்கும் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு அவரைப் பின்பற்ற வேண்டும் என்பதை, நமக்கு ஓர் தொடர்ச்சியான நினைவூட்டலாகக் கொண்டு வாழலாமே!

- **J.J. ஹாரிஸ்** *(தகவல் தொடர்புத்துறை)*

அவர் மரணத்தை ஜெயமாக விழுங்குவார்; கர்த்தராகிய தேவன் எல்லா முகங்களிலுமிருந்து கண்ணீரைத் துடைத்து, தமது ஜனத்தின் நிந்தையை பூமியிலிராதபடிக்கு முற்றிலும் நீக்கிவிடுவார்; கர்த்தரே இதைச் சொன்னார். (ஏசாயா 25:8)

"சிலுவையைத் தோல்வியாகவும், உயிர்த்தெழுதலை வெற்றியாகவும் நாம் கருதமுடியாது. மாறாக, சிலுவை வென்று-பெற்ற வெற்றியாகும்; உயிர்த்தெழுதல், அச்சிலுவை வெற்றியை அங்கீகரித்தது, அறிவித்தது மற்றும் நிரூபித்தது." (ஜான் ஆர். ட்பிள்யூ.ஸ்டாட்)



கர்த்தராகிய இயேசுவை உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவாய். (ரோமர் 10:9)

பூமியிலே சிலுவை சுமக்காதவர்களுக்குப் பரலோகில் ஜீவகிரீடம் சூட்டப்படுவதில்லை." – சார்லஸ் ஸ்பர்ஜன்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

நமது தரிசனம்:

சந்திக்கப்படாத இந்தியர்களை இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தால் சந்திப்பது.

நமது ஊழியம்:

தேசமக்களுக்கு இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கூறவும், சமுதாயத்தை மறுரூபப்படுத்த உதவி செய்யவும் இந்தியத் திருச்சபைகளை அதிக அளவில் ஈடுபட வைப்பதற்கான நோக்கத்தைப் பகிர்ந்து கொள்வது.

இந்தியத் திருச்சபையின் மனமொத்த ஆதரவுடன் இது தனது சேவைப்பணியை நாடெங்கும் தொடர்கிறது. சபைகள், நிறுவனங்கள், குடும்பங்கள், தனி நபர்கள் ஆகிய இவர்களின் ஜெபமும், ஈடுபாடும், தியாகமான ஈகையும் இவ்வியக்கத்தின் பணிச்சக்கரத்தைச் சுழலச்செய்யும் அச்சாணிகள்.

இதில் நீங்கள் இணைவதோடு பிறரும் இணைய அறிமுகம் செய்யுங்கள்.

feedbackfmpb@fmpb.org

உங்கள் மேலான ஆலோசனைகளை இந்த மின்னஞ்சலில் அனுப்பலாம்.

அறைகூவல்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மாதம் ஒருமுறை மலரும் சத்தியப்பு,

ஆசிரியர்: S. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்

தனிப் பிரதி ரூ.10/-	வெளிநாடு
ஆண்டு சந்தா ரூ.48/-	ஆண்டு சந்தா ரூ.480/-
ஆயுள் சந்தா ரூ.500/-	ஆயுள் சந்தா ரூ.5000/-

தொடர்பு மற்றும் நிதி உதவிக்கு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு

29, உயர்நிலைப்பள்ளி சாலை, அம்பத்தூர், சென்னை - 53. தொலைபேசி: 044-26570404

பேக்ஸ்: 044-26573353 கைபேசி: 9444394342

மின்னஞ்சல்: *info@fmpb.org*

வலைதளம்: *www.fmpb.co.in*



பொதுச்செயலாளரிடமிருந்து...

உன்னத திட்டத்தை நோக்கிப் பயணிக்கும் அருமையான உடன் பங்காளர்களே,

நாம் ஒரு புதிய நிதியாண்டில் பிரவேசித்துள்ளோம்; இந்நிதியாண்டில் நமக்கென்று என்ன வைக்கப்பட்டிருக்கிறது என்பதும், இந்நிதியாண்டு எப்படியிருக்கும் என்பதும் நமக்குத் தெரியாது. அதைப்பற்றி நாம் அறிந்திருக்க வேண்டிய அவசியமுமில்லை. ஏனெனில், சேனைகளின் கர்த்தர் இந்நிதியாண்டில் நம்மோடேகூட இருக்கிறார் என்பதே நாம் அறியவேண்டிய மெய்ச்செய்தியாகும். அவர் நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும், நமது இயக்கத்திலும் அவரது உன்னத திட்டத்தை நிறைவேற்றுவார். எரேமியா 29:11-ன்படி, அவர் நமக்காகக் கொண்டுள்ள உன்னத திட்டங்கள் 'தீமைக்கல்ல, சமாதானத்துக்கேதுவான நினைவுகளே' என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். நமது இரட்சகர் ஜீவிப்பதால், வருங்காலங்களை நாம் நம்பிக்கையுடனும், தைரியத்துடனும் எதிர்கொள்ள வேண்டும். சங்கீதம் 18:30-ல் 'தேவனுடைய வழி உத்தமமானது; கர்த்தருடைய வசனம் புடமிடப்பட்டது; தம்மை நம்புகிற அனைவருக்கும் அவர் கேடகமாயிருக்கிறார்' என்று சங்கீதக்காரன் கூறுகிறார். நமது பாதுகாப்பு மற்றும் எதிர்காலம் குறித்து நமது கர்த்தரைத் தவிர வேறு யாரால் இத்தகைய நிச்சயத்தை அளிக்க முடியும். தேவன் நம் பக்கத்தில் இருப்பதால், நாம் கீழ்ப்படிதலுடனும், பரிசுத்தத்துடனும், துணிவுடனும் உன்னத திட்டங்களை நோக்கிப் பயணிக்கலாம். ஏனெனில், சுவிசேஷத்தை அறியாத மக்களுக்கு அதை எடுத்துச்செல்ல தேவன் நமது இயக்கத்தைப் பணித்திருக்கிறாரே.

செயற்குழு கூட்டம்:

209-வது செயற்குழு கூட்டம் 2022 பிப்ரவரி 13 மற்றும் 14 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. நமது தேசத்தில் நற்செய்தியை முன்னெடுத்துச் செல்வதற்காக ஆலோசித்து நல் முடிவுகளை எடுக்க, தேவனின் வழிநடத்தும் கரம் நமது செயற்குழு அங்கத்தினர்கள் அனைவரின் மீதும் அக்கூட்டத்தில் அதிகமாக இருந்ததை உணர முடிந்தது. மேலும் புதிதாக நிர்வாகக்குழு, நிதி மேலாண்மைக்குழு மற்றும் சொத்து துணைக்குழு ஆகியவைகள் அச்செயற்குழுவில் அமைக்கப்பட்டன.

புதிய பொறுப்பு நியமனங்கள்:

நமது இயக்கத்தின் விதிமுறைகளின்படி, மண்டல மற்றும் அதற்கு மேலாக உள்ள பொறுப்புகளுக்கு நமது மூத்த மிஷனெரிகள் பொறுப்பாளர்களாக, 209-ம் செயற்குழுவால் நியமனம் செய்யப்பட்டனர். இப்புதிய பொறுப்பாளர்களில் சிலர், தங்களது முந்தைய பொறுப்புக்காலங்களை முடித்தவர்களாகவும், சிலர் அதை முடிக்கும் காலக்கட்டத்தில் இருப்பவர்களாகவும் உள்ளனர். அவர்களின் பெயர்களும், பொறுப்புகளும், நியமன தேதியும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன –

பெயர்	பொறுப்பு	நியமன தேதி
அருள்திரு. அகஸ்டஸ் புஷ்பராஜ்	ஸ்கேன் ஊழியம்	01.03.2022
அருள்திரு. டேனியல் அருள்மணி	வாலிபர் பிரிவு	01.03.2022
திருமதி. மணிசெல்வி	பெண்கள் பிரிவு	01.04.2022
அருள்திரு. டேவிட் பாண்டிங்	தலைமை செயலகம்	01.05.2022
அருள்திரு. அறிவர். J.J. ஹாரிஸ்	மனிதவள மேம்பாட்டுத்துறை	01.08.2022
திருமதி. மெர்சி தெபோரா	தகவல் தொடர்புத்துறை	01.08.2022
அருள்திரு. P. பால்ராஜ்	வடகிழக்கு மண்டல பணித்தளப்பணி	01.04.2022
அருள்திரு. டேனியல் தாமஸ்	மேற்கு தமிழ்நாடு விரிவுப்பணி	01.03.2022

மேற்கண்ட அனைத்து மிஷனெரிப் பொறுப்பாளர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர்களின் மீதும் தேவனின் கரம் இருந்து, அவர்கள் தேவசித்தத்தைச் செய்வதற்கு வழிநடத்த, தங்கள் ஜெபங்களில் அவர்களைத் தவறாமல் நினைத்துக் கொள்ளும்படி பட்சமுடன் கேட்டுக்கொள்கிறேன்.

CSI மத்திய - கர்நாடகா பேராயரோடு சந்திப்பு:

2022 பிப்ரவரி 18-ம் தேதி தென்னிந்திய விரிவுப்பணி செயலர் மற்றும் தமிழ்நாடு மண்டலச் செயலரோடு இணைந்து நானும், மத்திய - கர்நாடகா பேராயர் மாமறைதிரு. அறிவர். பிரசன்ன குமார் சாமுவேல் அவர்களை பெங்களூருவிலுள்ள அவர்களது அலுவலகத்தில் வைத்து சந்தித்து நமது ஊழிய உறவுகளைக் குறித்து பேசும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது.

CSI திருச்சி-தஞ்சை பேராயத் தலைவர்களின் பணித்தள சந்திப்பு:

திருச்சி-தஞ்சை பேராயர் மாமறைதிரு. அறிவர். D. சந்திரசேகரன் அவர்கள், தங்களது பேராய முக்கியத் தலைவர்களோடு சேர்ந்து நமது சந்தால் மற்றும் மால்தோ பணித்தளங்களை விஜயம் செய்தார்கள். நமது இயக்கத்தின் முழுநேர மற்றும் கௌரவப் பொறுப்பாளர்களும் அவ்விஜயத்தின்போது உடனிருந்தனர். தேவன் இப்பணித்தள கூடுகையை ஆசீர்வதித்ததுடன், அனைவரும் நமது பணித்தளங்களில் தேவன் அருளிய ஆத்தும கனிகளைக் கண்டு மிகவும் ஊக்கமடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவாஞ்சலிக்கல் யூனியன் தலைவர்களோடு சந்திப்பு:

இந்திய நற்செய்தி மாணவர் மன்றத்தின் தலைவர்கள், நமது இயக்கத்துடனான உறவைப் புதுப்பிப்பது தொடர்பான ஆலோசனைகளை மேற்கொள்ள நமது தலைமை செயலகத்திற்கு வருகை தந்தனர். அந்தச் சந்திப்பின்போது இவ்விரு இயக்கங்களுக்கிடையே ஊழிய கூட்டாண்மையை வலுப்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து ஆலோசித்து அதற்கான செயல் திட்டங்கள் வகுக்கப்பட்டன.

பவானி கன்வென்ஷன் கூட்டம்:

பவானியிலுள்ள CSI கிறிஸ்து நாதர் தேவாலயத்தின் குருவானவருடைய அழைப்பிற்கிணங்க, கடந்த 2022 மார்ச் 12 மற்றும் 13-ம் தேதிகளில் நடைபெற்ற ஆவிக்குரிய கூடுகைகளில் செய்தியளிக்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டியது. மேலும், அப்பகுதியிலுள்ள நமது கௌரவ விரிவுப்பணி செயலர்கள் மற்றும் ஜெபக்குழுத்தலைவர்களின் குடும்பங்களைச் சந்திக்கும்போது, அவர்களுடைய அர்ப்பணிப்பு, ஆத்தும பாரம் மற்றும் ஊழியச்செயல்பாடுகளைக் கண்டுணர்ந்தது, எனக்கு மிகவும் ஊக்கமளிக்கும் அனுபவமாகக் காணப்பட்டது.


தேசிய மிஷனெரிப்பயிற்சி மையம்:

ஜான்சியிலுள்ள நமது தேசிய மிஷனெரிப்பயிற்சி மையத்தில் வைத்து இந்தத் தலையங்கத்தை நான் எழுதுகிறேன். இங்கு மொத்தம் 25 பயிற்சி மிஷனெரிகள் தேவனுடைய ஊழியத்திற்கென பயிற்றுவிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த இளம் மிஷனெரிகளின் எதிர்கால ஊழிங்களுக்காகத் தாங்கள் ஜெபிக்க வேண்டியது மிகவும் அவசியமானதாகும். கர்த்தருக்குச் சித்தமானால் அடுத்த மிஷனெரி நேர்காணல் தேர்ச்சியை வருகிற ஜூன் மாதம் நடத்த இருக்கிறோம். அறுவடை நாயகர் தமது திராட்சைத் தோட்டத்திற்குத் தேவையான வேலையாட்களை அதிக எண்ணிக்கையில் அனுப்பும்படி தொடர்ந்து வேண்டிக்கொள்ளுங்கள்.

தமிழ்நாடு மாநில முகாம் - 2022:

மே மாதம் மூன்றாம் வாரத்தில் நடைபெற இருந்த தமிழ்நாடு மாநில முகாம், வருகிற 2022 ஜூன் 2 முதல் 5-ம் தேதிகளில் சேலம், டேனிஷ்பேட்டையிலுள்ள பெத்தேல் வளாகத்தில் வைத்து நடைபெற இருக்கிறது. மே 10,11 மற்றும் 12-ம் தேதிகளில் பள்ளித் தேர்வுகள் நடைபெற இருப்பதால், நமது மாநில முகாமின் தேதிகளில் இம்மாற்றத்தைச் செய்துள்ளோம். கொரோனா தொற்று நோய்ப்பாதிப்பால் 2 ஆண்டுகளுக்குப் பிறகு, இம்மாநில முகாம் நடைபெற உள்ளதால், நமது தேசத்தைச் சுவிசேஷத்தால் சந்திக்கும் உன்னத நோக்கத்திற்காக, திரளான ஜனங்கள் இம்முகாமில் வந்து கலந்து கொள்வதற்குத் திட்டமிட்டுச் செயல்படும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தேவஊழியத்தில் தங்கள் சக ஊழியன்,



அருள்திரு. S. ஜாண் பெர்லின்

கிறிஸ்துவின் சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் மூல உபதேசங்களை நோக்கி...



இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களைத் தாமே சுமந்து பாதாளத்தில் இறங்கினார்; பின்னர் தமது உயிர்த்தெழுதல் மூலமாக அவைகளின் மேல் வெற்றி சிறந்து, நமது பாவங்களை நீக்கி, நம்மைப் புது சிருஷ்டிகளாக மாற்றியுள்ளார். இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்தை அடிப்படையாகக் கொண்ட ஏழு மூல உபதேசங்களைக் கிறிஸ்தவ அடிப்படை சித்தாதங்களில் மிகவும் தெளிவாகக் காணலாம். அவைகளைச் சிந்திக்கும்போதுதான் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பாடு, மரணம் மற்றும் உயிர்த்தெழுதலால் நாம் எவ்வளவு பாக்கியம் பெற்றுள்ளோம் என்பதை அறிய முடிகிறது.

1. பதிலாக கிறிஸ்து!

'ஏனெனில், கிறிஸ்துவும் நம்மை தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார்; அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார்' (1 பேதுரு 3:18). இதைதான் யோவான் தனது நிருபத்தில் 'அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்தார்' (1 யோ.3:16) என்று குறிப்பிடுகிறார். 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்பது மாறாத திருமறை சட்டம். அப்படியென்றால், எள்ளளவும் பாவமறியா இயேசுகிறிஸ்து ஏன் மரணத்தைத் தழுவ வேண்டும்? என்பதன் பொருள் என்னவெனில், அவர் பாவிகளாகிய நமது ஸ்தானத்தில் நின்று மரணத் தண்டனையைத் தாமே ஏற்றுக்கொண்டார். இதனால் நாம் அவருடைய பேரன்பின் மகத்துவத்தை அனுபவிக்கும் பாக்கியம் பெற்றுள்ளோம்.

2. பரிகாரமாக கிறிஸ்து!

'பரிகாரம்' என்கிற பதத்தின் பொருள் 'நிவாரணம்' ஆகும். நமது பாவங்களுக்கு நிவாரணமாக கிறிஸ்து பரிகாரம் செலுத்தினார். இங்கு குற்றவாளியாகிய நம்மையும், குற்றம் சுமத்துகிறவராகிய பிதாவையும், கிறிஸ்து தமது மரணத்தின் மூலம் பரிகாரம் செலுத்தி இணைக்கிறார். 'நாம் தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்புகூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது.' (1 யோ.4:10). இவ்வாறு கிறிஸ்து நம்மீது வைத்த அன்பைக் காட்டுவதற்காக, பாவத்திற்குப் பரிகாரம் செய்வதற்கான விலையைக் காட்டுவதற்காக, 'என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்' என்று கதறக்கூடிய அளவிற்கு பிதாவினால் கைவிடப்படுகிற நிலைக்குக்கூட தள்ளப்பட்டார் (மத்.27.46). நாம் அவருக்குள் தேவனுடைய நீதியாகும்படிக்கு, பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார் (2 கொரி.5:21).

3. மீட்கும் தொகையாக கிறிஸ்து!

'அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்க' (மாற்கு 10:45) வந்ததாக இயேசு கூறினார். அவருடைய சிலுவை மரணம் இன்றியமையாத மீட்கும் பொருளாக அமைந்தது. இதனால் பிதாவின் நீதியாகிய 'பாவத்தின் சம்பளம் மரணம்' என்கிற கரு திருப்தி செய்யப்பட, பாவிகளின் ஸ்தானத்தில் கிறிஸ்து நின்று, மனுக்குலத் திற்குப் பாவத்திலிருந்து விடுதலையை நல்கினார் என்பதை அறிகிறோம்.

4. மீட்பராக கிறிஸ்து!

மீட்கும் தொகை செலுத்தப்பட்டால் பொதுவாக சிறைபிடிக்கப்பட்டவர்களை மீட்கலாம். இங்கு கிறிஸ்து அனைத்து ஜனங்களுக்காகவும் தமது ஜீவனையே மீட்கும் தொகையாகக் கொடுத்து அவர்களை விடுவித்துள்ளார். 'கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப் பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்க லாக்கி மீட்டுக்கொண்டார்' (கலா.3:13). நிர்கதியான பாவிகளாகிய நமக்கு மீட்பைக் கொண்டுவருவதற்கான மீட்கும் விலை அவருடைய மரணத்தைவிட குறைவானது அல்ல என்பதை அறிந்து, அவர் அதைத் தமது மரணத்தின் மூலமாக முழுமையாகச் செலுத்தி, பாவிகளை மீட்டு பாவமில்லாமல் தேவனை மகிமைப்படுத்தும் வாழ்வு வாழ வழிவகுத்தார்.

5. பாவமன்னிப்பருள்பவராக கிறிஸ்து!

இயேசு நமக்காக மரித்ததால், 'அவருடைய இரத்தத்தினாலே மீட்பு' மட்டுமல்ல 'பாவ மன்னிப்பையும்' பெற்றிருக்கிறோம் (எபே.1:7). இயேசுவின் மரணத்தினால் விசுவாசி களாகிய நாம் குற்ற உணர்விலிருந்தும், பாவக் கடன்களிலிருந்தும் விடுவிக்கப் பட்டதோடு, முழுமையான மன்னிப்பையும் பெற்றுக்கொள்கிறோம்.

6. ஒப்புரவாக்குகிறவராக கிறிஸ்து!

நாம் இயற்கையாகவும், நமது சுயசித்தத் தினாலும் பிதாவிடமிருந்து பிரிக்கப் பட்டுள்ளோம். ஏனெனில், கிறிஸ்துவின் மரணத்தின் வாயிலாக, தேவன் பாவத் தைத் தண்டிப்பது மட்டுமல்லாமல், அவருடைய சொந்த நீதியான சட்டத்தையும் உறுதிப்படுத்தினார். மேலும், அவர் பாவிகளிடமிருந்து தம்மைப் பிரிக்கும் தடுப்புச்சுவரை விலக்கினார். அதனால்தான் அப்போஸ்தலனாகிய பவுல் இதை 'நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே' (ரோ.5:10) என்றும் 'முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சமீபமானீர்கள்' (எபே.2:13) என்றும் குறிப்பிடுகிறார்.

7. நீதிமான்களாக்குகிறவராக கிறிஸ்து!

இயேசுகிறிஸ்துவின் பூரண பரிசுத்த வாழ்க்கை தேவநீதியின் எல்லா கோரிக்கை களையும் பூர்த்தி செய்தது. அவர் 'பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாத வரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிற இவ்விதமான பிரதான ஆசாரியரே நமக்கு ஏற்றவராயிருக்கிறார்' (எபி.7:26). இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம் (ரோ.5:1). நீதிமான் களாக்கப்பட்ட பாவி தேவனின் தயவிற்கும், அவருடைய பரிசுத்த குடும்பத்திற்கும் கொண்டுவரப்பட்டு, தேவனுடைய நியதியை முழுவதுமாக நிறைவேற்றியவர்கள் போல

பிதாவினால் ஏற்றுக்கொள்ளப்படுகிறார். இந்த நியாயத்தீர்ப்பு மூலம் நீதிமான்களாக்கப்படுவது, இக்காலத்திற்கும் நித்தியத்திற்கும் உரித்ததாகிறது.

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் தனித்துவச் சிறப்பு:

உயிர்த்தெழுந்த ஆண்டவர் தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு வெவ்வேறு வழிகளில் காட்சியளித்ததைக் காண்கிறோம். இது அவர்களின் சூழலின்மீது காட்டிய அக்கறையை வெளிப்படுத்துகிறது (லூக். 24:36-49, யோ.10:2-6, 20, 21). இன்றும் அவர் பலவிதங்களில் மக்களோடு கூட இடைபடுகிறதை அறியலாம். ''உயிர்த்தெழுந்த ஆண்டவர் நம்மிடம் நமது துன்பங்கள், பயங்கள், சந்தேகங்கள், நிலைபாடுகள் மற்றும் செயல்பாடுகளினூடே இடைபடுகிறார்'' என்று ஜான் விட்டே என்கிற தேவமனிதர் கூறுகிறார்.

கிறிஸ்தவர்களாகிய நாம், அநேக வேளைகளில் இயேசுவின் சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை எளிதாக எடுத்துக்கொள்கிறோம். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் இல்லாமல் கிறிஸ்தவமே இருக்க முடியாது; ஏனென்றால், அதுதான் இயேசுவைப் பிதாவின் சுதன் என்பதை உறுதிப்படுத்துகிறது. இயேசுவின் கூற்றுப்படி, அவருடைய உயிர்த்தெழுதல் – அவருடைய ஊழியத்தை அங்கீகரித்து 'வானத்திலிருந்து தோன்றிய அடையாளம்' (மத். 16:1-4) ஆகும். இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், நூற்றுக்கணக்கான சாட்சிகளால் சான்றளிக்கப்பட்டு (1 கொரி.15:3-8)), 'அவர் உலக ரட்சகர்' என்பதற்கு மறுக்க முடியாத ஆதாரத்தை வழங்குகிறது.

இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் முக்கியமானது என்பதற்கு மற்றுமொரு காரணம், அது அவருடைய பாவமற்ற பரிசுத்த தன்மையையும், தெய்வீக தன்மையையும் நிரூபிக்கிறது. தேவனின் 'பரிசுத்தம்' ஒருபோதும் அழிவைக் காண்பதில்லை (சங்.16:10), இயேசு இறந்தப் பிறகும் அழிவைக் கண்டதில்லை (அப்.13:32-37) என்று வேதாகமம் கூறுகிறது. எனவே, கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் அடிப்படையில்தான் பவுல், 'இவர் மூலமாய் உங்களுக்குப் பாவமன்னிப்பு உண்டாகும் என்று அறிவிக்கப்படுகிறதென்றும்,... விசுவாசிக்கிறவன் எவனும் அவைகளினின்று இவராலே விடுதலையாகி நீதிமானாக்கப்படுகிறான் என்றும் உங்களுக்குத் தெரிந்திருக்கக்கடவது' (அப்.13:38-39) என்று பிரசங்கித்துள்ளதைக் காணலாம்.

எனவே, 'இயேசுகிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்' என்பது அவரது தெய்வீகத்தை உறுதிப்படுத்துவது மட்டுமல்ல, அது இயேசுவின் பாடு, சிலுவை மரணம் மற்றும் உயிர்த்தெழுதலை முன்னறிவித்த பழைய ஏற்பாட்டு தீர்க்கத்தரிசனங்களையும் உறுதிப்படுத்துகிறது (அப்.17:2-3). கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல், அவர் மூன்றாம் நாளில் உயிர்த்தெழுப்பப்படுவார் என்ற அவரது சொந்த கூற்றுகளையும் அங்கீகரித்துள்ளது (மாற்கு.8:31, 9:31, 10:34). இயேசுகிறிஸ்து உயிர்த்தெழாவிட்டால், நாம் உயிர்த்தெழுவோம் என்பதற்கு எவ்வித நம்பிக்கையும் கிடையாது. மெய்யாகவே, உயிர்த்தெழுந்த கிறிஸ்துவைத் தவிர நமக்கு வேறே இரட்சகர் இல்லை, இரட்சிப்பு இல்லை, நித்திய வாழ்வின் நம்பிக்கையும் இல்லை. பவுல் கூறுவதுபோல, நமது பாவங்கள் மன்னிக்கப்படாமல், நமது விசுவாசம் வீணாயிருக்கும், நமது மிஷனெரிப்பணியும் முற்றிலும் வல்லமையற்றதாக இருந்திருக்கும் (1கொரி.15:14-19). ஆம், கிறிஸ்துவின் சிலுவை மரணமும், உயிர்த்தெழுதலும் நமது மிஷனெரிப்பணிக்கு அச்சாரமாக இருக்கிறதன்றோ!

– அருள்திரு. ஹூட்டோய் அச்சுமி
FMPB, விரிவுப்பணி பிராந்தியச் செயலாளர்
– திமாப்பூர் – நாகலாந்து

கிறிஸ்துவுடைய மரணத்தின் தனித்துவம்!



"ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை" (யோவான் 15:13).

நமது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து 'அன்பு' என்கிற வார்த்தைக்குத் தனித்துவ மான இலக்கணம் வகுத்தவர். கிறிஸ்துவின் சிலுவை-மரணம் அவரது அன்பின் சிகர மாகும். 'ஆண்டவரே, நீர் எங்ஙனம் என்னை நேசிக்கிறீர்' என்று பக்தன் ஒருவன் கேட்டபோது, இயேசு சிலுவையில் தமது கைகளை நீட்டி, உயிரைவிட்டு, 'இவ்வளவு உன்னை நேசிக்கிறேன்' என்று கூறப்பட்டது போன்று எழுதப்பட்ட வாசகங்களை நாம் பார்த்திருக்கலாம். பொதுவாக, அன்பு செயலில் காட்டப்பட வேண்டும், இல்லை யேல் அது வெறும் அனுதாபமாகிவிடும். 'இவைகளை எல்லாம் நீ கொண்டுள்ள தால் நான் உன்னை நேசிக்கிறேன் என்பதைவிட, இவைகள் ஒன்றும் இல்லா திருந்தும் நான் உன்னை நேசிக்கிறேன்' என்பதுதான் தெய்வீக அன்பு' என்று ஒரு தேவனுடைய மனிதன் குறிப்பிடுகிறார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தமது சரீர துன்பங்களினூடாக தமது சிலுவை மரணத்தின் மூலமாக அவர் நம்மேல் கொண்டுள்ள அன்பை உறுதிப்படுத்தியுள்ளார். இதைதான் புனித யோவான், 'அவர் தம்முடைய ஜீவனை நமக்காகக் கொடுத்ததினாலே அன்பு இன்னதென்று அறிந்திருக்கிறோம் (1 யோவான் 3:16) என்று குறிப்பிடுகிறார். 'நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த அவர் தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்' (ரோமர் 5:8) என்று இது தொடர்பாக புனித பவுலும் கூறியிருப்பதைக் காணலாம்.

இயேசுகிறிஸ்து தம்முடைய இவ்வுலக வாழ்வின்போது, ஏழைகள் மற்றும் இல்லாமையிலுள்ளவர்களோடு தன்னை அடையாளப்படுத்திக் கொள்வது, சாமானி யர்களின் பெலவீனங்களை மென்மை யாகக் கையாளுவது, அற்புதங்களைச் செய்வது போன்ற பல வழிகளில் தம்மைச் சுற்றியுள்ள மக்களிடம் தமது அன்பை வெளிப்படுத்தினார். அவருடைய சிலுவை-மரணத்தில் அவருடைய அன்பு பூரணமாக வெளிப்படுகிறது. பொதுவாக, உயிரைத் தியாகம் செய்வது என்பது தன்னிடம் உள்ள அனைத்தையும் தியாகம் செய்வதற்கு ஈடாகும். ஆம், இயேசுவே ஒட்டுமொத்த அன்பு; அவரே அன்பின் தலைசிறந்த சிகரம் என்பதை அவர் தமது சிலுவை மரணத்தின் மூலம் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளதை அறியலாம்.

கிறிஸ்துவின் மரணம், மற்றவர்கள் தங்களுக்கு அருமையானவர்களுக் காகவும் பொது நன்மைகளுக்காகவும் தியாகத்தோடு செய்கிற மரணத்தைவிட முற்றிலும் வேறுபட்டது என்பதைக் கீழ்காணும் பத்திகளில் காணலாம்.

1. சாவாமையுடையவர் மரித்தார்:

ஒருவன் தன் நண்பர்களுக்காகவோ, தேசத்திற்காகவோ அல்லது பொது நன்மை களுக்காகவோ தன் இன்னுயிரைத் தியாகம்

செய்யலாம். ஆயினும், அவன் அழியாத ஒரு உயிரை ஒன்றும் கொடுக்கவில்லை; அவன் தான் இயற்கையாக மரணிக்கும் நாட்களுக்குச் சற்று முன்னதாக தனது உயிரைக் கொடுக்கிறான் அவ்வளவுதான். ஆனால், கிறிஸ்துவின் மரணம் அப்படிப் பட்ட உயிர்த்தியாகம் அல்ல. அவர் சாவாமையுடையவர்; நித்தியமானவர்; பூரண பரிசுத்தமானவர். வேதாகமத்தின்படி பாவம் செய்கிற ஆத்துமாதான் சாக வேண்டும் (எசே.18:20). ஆனால், இயேசு அப்பழுக்கற்ற பரிசுத்தர். அவர் கூறுகிறார் – 'ஒருவனும் அதை என்னிடத்திலிருந்து எடுத்துக்கொள்ளமாட்டான்; நானே அதைக் கொடுக்கிறேன், அதைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு, அதை மறுபடியும் எடுத்துக்கொள்ளவும் எனக்கு அதிகாரம் உண்டு. இந்தக் கட்டளையை என் பிதாவினிடத்தில் பெற்றுக்கொண்டேன் என்றார்' (யோவான் 10:18). மனிதனுக்கு இறப்பதற்கு மட்டுமே அதிகாரம் உள்ளது; ஆனால், இயேசுவுக்கு நித்தியகாலமாக வாழ வல்லமையுள்ளது; அவர் மட்டுமே அழியாமையை உடையவர். அத்தகைய அவர் நமக்காகத் தமது அழியாத வாழ்வைத் துறந்து, தம்மை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்து நம்மேல் அவர் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தியது, அவருடைய மரணத்தின் தனித்துவமாகும்.

2. நிகரில்லாதவர் மரித்தார்:

பொதுவாக, ஒரு தலைவனுக்குப் பதிலாக ஒரு தொண்டன் மரிக்கலாம்; ஒரு குறிப்பிட்ட காரியத்திற்காக யார் வேண்டுமானாலும் மரிக்கலாம். இப்படி மரிக்க முயற்சி செய்பவர்கள் கூட கடைசி நிமிடத்துளிகளில் தங்களை யாராவது காப்பாற்றக்கூடும் என எதிர்பார்க்கலாம். ஆனால், இங்கு கிறிஸ்துவுக்கு நிகர் எவருமே கிடையாது. அவர் மரிக்காவிடில் நாம் மரித்து விடுவோம். அவர் தம்முடைய மரணத்தில்தான் மனுக்குலத்திற்கான இரட்சிப்பு உள்ளது என்பதை நிச்சயித் திருந்தார். நமது மரண ஆக்கினைக்கு மாற்று வழி இயேசு ஒருவரே என்பதன் மூலம் அவருடைய மரணத்தின் தனித்துவத்தை நாம் நன்கு அறியலாம்.

3. எவருக்கும் கடன் பட்டிராதவர் மரித்தார்:

பொதுவாக, மனிதர்கள் தங்கள் எஜமானுக்குத் தங்களது விசுவாசத்தைக் காட்ட அல்லது சமுதாயத்தில் உயர்ந்த வர்களுக்காக உயிர் துறப்பதைக் காணலாம். ஆனால், இங்கு இயேசு கீழ்ப்படியாதவர்களுக்காகவும், தம்மை விட மிகவும் தாழ்ந்தவர்களுக்காகவும், மன்னிப்புக் கேட்காதவர்களுக்காகவும், நன்றியிவில்லாதவர்களுக்காகவும், இவ்வாறு எவ்விதத்திலும் எவருக்கும் கடன்பட்டிராத தாம், அவர்களுக்காக மரித்ததை அறிகிறோம். ஆம்! கிறிஸ்துவின் மரணத்தில் எவ்வித உள்நோக்கமும் இல்லை; அவர் நம்மை நேசித்ததால், தமது ஜீவனையே நமக்காகக் கொடுத்தது, அவருடைய மரணத்தின் தனித்துவமாகும்.

4. அன்பற்றவர்களையும் நேசித்தவர் மரித்தார்:

பொதுவாக, யாரும் தங்கள் குடும்ப அங்கத்தினர்களுக்காக அல்லது தாங்கள் நேசிக்கும் ஒருவருக்காகத்தான் மரிக்க முன்வருவர். ஆனால், இங்கு இயேசுவின் அன்புதான் முதலாவது அவரிடமிருந்து நம்மேல் வெளிப்பட்டது; நாம் அவரை நேசிக்கவில்லை. 'மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்' (ஏசா.53:4). அன்பு காட்டாத நமக்காக அவர் அன்பு செலுத்தும் வண்ணமாக தமது ஜீவனையே தந்தது, அவருடைய மரணத்தின் தனித்துவமாகும்.

5. நம்மால் பாதிக்கப்பட்டவர் மரித்தார்:

பொதுவாக, 'அனைத்து குற்றவாளிகளும் தப்பினாலும், ஒரு நிரபராதிகூட தண்டிக்கப் படக்கூடாது' என்பதுதான் பொது நியதி. நமது பாவங்களால் பாதிக்கப்பட்ட இயேசு நமக்குப் பதிலாக தம்மைத் தாமே அப்பாதிப்பிற்குட்படுத்தி மரணத்தை ஏற்பதை அறிந்திருக்கிறோம். நாம் பாவம் செய்யாதிருந்தால் அவர் பாதிக்கப்பட்டிருக்க மாட்டார். உண்மையிலேயே, பாவம் செய்து அவருக்குப் பாதிப்பை உருவாக்கிய நம்மை அவர் நேசித்து மரணத்தை ஏற்றுக் கொண்டது, அவருடைய மரணத்தின் தனித்துவமாகும்.

6. பரிசுத்தரானவர் மரித்தார்:

பொதுவாக, ஒருவர் பிறருடைய மற்ற காரணங்களுக்காக மரிக்கலாம்; ஆனால், கிறிஸ்துவைத் தவிர வேறு எவரும் 'பாவங்களுக்காக' மரிக்க முடியாது; ஏனெனில், அவர் ஒருவரே பரிசுத்தர். இவரது மரணம் மட்டுமே மனுக்குலத்திற்கு இரட்சிப்பைக் கொண்டு வந்தது. 'மரத்திலே தூக்கப்பட்ட எவனும் சபிக்கப்பட்டவன் என்று எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து நமக்காகச் சாபமாகி, நியாயப்பிரமாணத்தின் சாபத்திற்கு நம்மை நீங்கலாக்கி மீட்டுக்கொண்டார்' (கலா.3:13). ஆம், பரிசுத்தமான அவர் அசுத்தமான நமது பாவங்களுக்காக மரித்து, நமக்கு மகா பெரிய மீட்பை நல்கியது அவருடைய மரணத்தின் தனித்துவமாகும்.

7. கொடூரமான சாவை ஏற்று, அவர் மரித்தார்:

பொதுவாக, பிறருக்காக அல்லது பிற காரணங்களுக்காக இறக்கிறவர்கள், சில நேரங்களில் எளிதான சாவுமுறைகளை ஏற்றுக்கொள்வதைக் காணலாம். மரணத் தண்டனை பெற்றவர்கள் கூட, சித்தர வதைக்குட்படுத்தப்படாமல், ஒரு வினாடியில் கொல்லப்படுவதைக் காணலாம். அநேக பரிசுத்தவான்கள் இரத்த சாட்சியாக மரிக்கும் தருவாயில், பரலோகத்தின் பாக்கியத்தைக் கண்ணாரக் கண்டு களிகூர்ந்து மரித்ததை அறிகிறோம். பெரும்பாலான பரிசுத்த வான்கள் தங்கள் மரணத்தின்போது, தங்களை நேசித்தவர்கள் மற்றும் தங்களது அனுதாபிகள் சூழ நிற்க மரித்ததைக் காணலாம். ஆனால், கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டபோது, அவரது வலியைப் போக்க போர்ச்சேவகர்கள் காடியைக் குடிக்கக் கொடுத்தபோது அவர் அதை ஏற்கவில்லை. அதிகம் எதிரிகளால் மாத்திரமே சூழப்பட்டிருந்த அவர், நமது பாவங்களுக்காக, தமது பிதாவின் முகங்கூட தமக்கு ஒருகணம் மறைக்கப்பட தம்மை ஒப்புக்கொடுத்தது, அவருடைய மரணத்தின் தனித்துவமாகும். ஆம் அருள்திரு. அறிவர். சாம் கமலேசன் அவர்கள் கூற்றுப்போல, "பரலோகம் இயேசுவை நிராகரித்தது – பூமியும் அவரை நிராகரித்தது. ஆனால் இயேசுகிறிஸ்து பிதாவின் சித்தத்தை நிறைவேற்றினார்."

ஆம், கிறிஸ்துவின் சிலுவை–மரணத்தின் தனித்தன்மையே, அவர் நம்மை நேசிப் பதற்கும், நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை மீட்டெடுப்பதற்கும் மட்டுமே; அதுதான் நம்மை அவரை முழு மன தோடும், முழு ஆத்துமாவோடும், முழு பெலத்தோடும் நேசிக்க அழைப்பதோடு, பிறரையும் நேசிக்க வழிநடத்துகிறது. இந்தத் தவசு காலங்களில், அவருடைய சிலுவை மரணத்தினால் வெளிப்பட்ட தனித்துவமான அன்பு, நம்மை அவரது மிஷனெரிப்பணியில் மேலும் தீவிரமாக ஈடுபட அறைகூவல் விடுக்கிறதன்றோ!

பணித்தள விஜயம்

CSI, திருச்சி – தஞ்சை திருமண்டலத் தலைவர்கள்





தென்னிந்திய திருச்சபை, திருச்சி – தஞ்சை திருமண்டலத்தின் தலைவர்களான பேராயர் மாமறைதிரு. அறிவர். D. சந்திர சேகரன், பேராயர் அம்மா, குருத்துவச் செயலர், இறைமக்கள் செயலர், மறை மாவட்டத் தலைவர்கள், அருள்பணி இளைஞர், சிறுவர் பணி இயக்குநர்களுமான 13 நபர்கள், நண்பர் சுவிசேஷக் ஜெபக்குழுவின் பொறுப்பாளர்களுடன் பிப்ரவரி 24-ம் தேதி இரவு ஜார்க்கண்டிலுள்ள பர்ஹர்வா பணித்தளத்திற்கு சென்றடைந்தோம்.

25-ம் தேதி காலை, கடி என்ற இடத்திலுள்ள சமுதாயக் கல்லூரிக்குச் சென்று மால்தோ இன மக்கள் மத்தியில் ஊழியம் செய்யும் மிஷனெரிகளைச் சந்திக்கும் கூட்டத்தில் பங்கு பெற்றோம். இக்கூட்டம் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பொதுக்காரியதரிசி அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்களின் தலைமையில் நடந்தது. பேராயர் மிஷனெரிகளின் மத்தியில் உரையாற்றினார். மேலும், அங்கு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சார்பாக மால்தோ இன மக்களின் மத்தியில் நடைபெறும் பணிகளைக் குறித்து, படக்காட்சி மூலமாக விளக்கினார்கள். பிறகு அருகிலுள்ள நமது மிஷனெரிகளின் கல்லறைக்குச் சென்று பார்வையிட்டோம். இந்த மிஷனெரிகளின் வாழ்க்கை, ஊழியம், தியாகம் போன்றவை உண்மையாகவே இன்றைக்கு நடைபெறும் ஊழியங்களுக்கு அஸ்திபாரமாக அமைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. விதைக்கப்பட்ட மிஷனெரிகளுக்காக கல்லறையில் நின்று கர்த்தருக்கு நன்றி சொன்னோம்.

பின்னர் கங்குபாடா என்ற இல்லத்திலுள்ள சிறுமியர் இல்லத்திற்கு சென்றோம். குழந்தைகள் சீருடையில் தங்களுடைய பாரம்பரியத்தின்படி நடனமாடி, பாடல் பாடி எங்களை மகிழ்வித்தார்கள். அக்கூட்டத்தில் பேராயர் அம்மா அவர்கள் செய்தி வழங்கினார்கள். பிள்ளைகளைப் பார்த்து பேராயர் அம்மா எதிர்காலத்தில் நீங்கள் என்ன பணி செய்ய விரும்புகிறீர்கள் என்று கேட்டார்கள். பெரும் எண்ணிக்கையில் மாணவியர்கள் எழுந்து நின்று நாங்கள் மிஷனெரிகளாவோம் என்று சொன்னது உண்மையாகவே அவர்கள் ஆண்டவரை எவ்வளவு நேசிக்கின்றார்கள் என்பது தெரிய வந்தது.

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் சார்பாக நடத்தப்படும் பள்ளிகளை சென்று பார்வையிட்டோம். பந்தேனி பகுதியில் நடத்தப்படும் பள்ளி மற்றும் விடுதியை பார்வையிட்டோம். அதைத் தொடர்ந்து காடுகளுக்குள்ளே மிகவும் வசதி குறைவான இடமாகிய பெடோ

போக்கிரியா என்ற மலை கிராமப் பள்ளியின் மாணவ, மாணவிகளைப் பார்த்தோம். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவும் கல்விப் பணியை செய்து வருவது மிகவும் பாராட்டுதலுக்குரியதாகும்.

சாண்டிகோலா என்ற கிராமத்தில் உள்ள FMPB மருத்துவமனையை பார்வையிட்டோம். மிகப் பிரமாண்டமான கட்டிடத்தில் இம்மருத்துவமனை இயங்கி வருகிறது. டாக்டர். V. வில்செட் கிறிஸ் அவர்கள் மருத்துவமனையின் பொறுப்பு மருத்துவராக பணியாற்றி வருகின்றார். அங்கு போதுமான செவிலியர்களோ இல்லை. சரியான சாலை வசதியோ இல்லை. மலை கிராமங்களில் பழங்குடி மக்களுக்கு ஆண்டவரின் குணமாக்கும் வல்லமையை, மருத்துவப் பணியின் மூலமாக நிறைவேற்றி வருவதைக் கண்டு நாங்கள் கண்ணீருடன் தேவனுக்கு நன்றி சொன்னோம்.

26-ம் தேதி பெல்டியா கிராமத்தில் நடந்த சந்தால் மேளா மற்றும் 27-ம் தேதி சாஹர்ஜுடி கிராமத்தில் நடைபெற்ற தும்கா பிராந்திய சந்தால் மேளாவிலும் கலந்து கொண்டோம். மேளாவில் மக்கள் ஆயிரக்கணக்கில் உற்சாகமாக கலந்து கொண்டார்கள். பாடல்களைப் பாடி, தேவனை மகிமைப்படுத்தினதையும், பாரம்பரியப்படி எங்களை வரவேற்றதையும் நாங்கள் ஒரு போதும் மறக்க முடியாது. பாரம்பரிய கிறிஸ்தவர்களைக் காட்டிலும் பழங்குடி இனத்தைச் சார்ந்த விசுவாசிகளிடம் காணப்படும் தெய்வ நம்பிக்கை என்பது முழுக்க முழுக்க பரிசுத்த ஆவியானவரின் கிரியை என்று உணர்ந்து கொண்டோம். இரண்டு மேளாக்களிலும் பேராயர் ஐயா நற்செய்தி வழங்கினார்கள். பின்பு வாலிபர்கள், குழந்தைகளுக்காக தனித்தனி கூட்டங்கள் நடைபெற்றது.

எமது திருமண்டலத்தின் தலைவர்கள் அனைவரும் கலந்து கொள்ளும் மிஷனெரி பயணம் என்பது இதுவே முதல் முறையாகும். திருச்சபைக்கும், மிஷனெரிகள் இயக்கங்களுக்கும் நல்லுறவு, ஜெப உதவி, பொருளாதார உதவி, மனித வள பகிர்வு போன்றவை இக்காலக் கட்டத்தில் மிஷனெரிப் பணிக்கு மிகவும் இன்றியமையாததாகும். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் ஊழியங்களுக்காக நாங்கள் தேவனைப் போற்றுகிறோம். எங்களை அன்புடன் அழைத்து, உபசரித்து, ஊழியங்களில் பயன்படுத்தின அனைத்து நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவர்களுக்கும் சிறப்பாக பொதுக் காரியதரிசி அருள்திரு. ஜாண் பெர்லின் அவர்களுக்கும் திருமண்டலத்தின் சார்பாக மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். இந்த மிஷனெரி பயணம் நடைபெறுவதற்கு மிக முக்கிய காரணமாக இருந்த திருச்சியைச் சார்ந்த நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவர்களுக்கு திருமண்டலத்தின் சார்பாக நன்றியினை தெரிவித்துக் கொள்கிறோம். இப்பயணம் எங்களுக்கு ஒரு புதிய அனுபவத்தையும், ஒப்படைப்பையும் ஏற்படுத்தியிருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. கர்த்தருக்கே மகிமை உண்டாவதாக!

அருள்திரு. சுதர்சன், குருத்துவ செயலர்
CSI, திருச்சி - தஞ்சை திருமண்டலம்

மிஷனெரி பிரதிஷ்டை



கோவில்பட்டி பரி. பவுல் தேவாலையத்தில் வைத்து 20.02.2022 ஞாயிறு ஆராதனையில் சேகர உதவி குருவானவர் அருள்திரு. ரூபன் தனசிங் தன்னார்வ குரு முற்றும் அருள்திரு. இம்மானுவேல் அவர்களால் நமது மிஷனெரி திரு. க்ருபா ரக்ஷ்னா பரே (பஞ்சாப் புத்லாடா பிராந்தியம்) அவர்கள் மிஷனெரியாக பிரதிஷ்டை செய்யப்பட்டார்கள் ஜெபித்து, தாங்குகிற குடும்பங்களுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.

நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



திருமதி. மனோரமா துரைசிங்

(22.04.1944 - 22.02.2022)

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் முன்னாள் இணை பொதுச்செயலாளரான காலஞ்சென்ற திரு. T. துரைசிங் அவர்களின் மனைவி திருமதி. மனோரமா துரைசிங் அவர்கள் கடந்த 2022 பிப்ரவரி 22-ம் தேதி யன்று தேவ மகிமைக்குள் பிரவேசித்தார்கள். இவர் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள இடையன்குடி என்கிற கிறிஸ்தவ கிராமத்தில் 1944 ஏப்ரல் 22-ம் தேதி பிறந்தார். இவர் புகழ்பெற்ற சாரா டக்கர் உயர்நிலைப்பள்ளி மற்றும் சாரா டக்கர் கல்லூரியிலும் பயின்றார். தனது இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பையும், ஆசிரியர் பயிற்சியையும் முடித்துவிட்டு, முதலாவது இவர் பண்டாரம் செட்டிவிளையிலுள்ள கிறிஸ்தவ பெண்கள் மேல்நிலைப்பள்ளியிலும் பின்னர் சாரா டக்கர் மேல்நிலைப்பள்ளியிலும் ஆசிரியராகப் பணியாற்றி, பள்ளி நிர்வாகத்திடமிருந்து பாராட்டுகளும், தமிழக அரசிடமிருந்து நல்லாசிரியர் விருதையும் பெற்றார்.

சகோதரி. மனோரமா அவர்கள், 1968 மே 16-ம் தேதி திரு. துரைசிங் அவர்களைத் திருமணம் செய்தார். தேவன் இவர்களுக்கு ஜோசப் என்ற மகனைக் கொடுத்து ஆசீர்வதித்தார். திருமதி. மனோரமா துரைசிங் அவர்கள், தனது ஆசிரியைப்பணியோடு தனது மாணவிகளுக்கு கிறிஸ்தவ பண்பு களையும் கற்றுக்கொடுத்தார். அதோடு அம்மாணவிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், மிஷனெரிப்பணி குறித்து அறிந்து கொள்ளவும் இவர் பலவிதங்களில் உதவினார். இவரது பெரு முயற்சியால் அநேகர் சமுதாயத்தில் உயர்நிலையை அடையவும், ஊழியங்களுக்காக ஜெபிக்கவும், மிஷனெரிகளாகப் புறப்பட்டுச் செல்லவும் முடிந்தது. தனது மாணவர்கள் மற்றும் ஊழியர்களின் தேவைகளைச் சந்திப்பதிலும் இவரது பங்கு பெரிதும் காணப்பட்டது. தனது சொந்த சகோதரர் ஜேசுதாஸை மிஷனெரியாக இந்திய மிஷனெரிச் சங்கத்திற்கு மகிழ்வுடன் அனுப்பி வைத்தார்.

இதற்கிடையில், பாளையங்கோட்டை புனித ஜான்ஸ் மேல்நிலைப்பள்ளியில் ஆசிரிய ராகவும், நமது இயக்கத்தின் திருநெல்வேலி மாவட்ட கௌரவப் பொறுப்பாளராகவும் பணியாற்றி வந்த இவரது கணவர் திரு. துரைசிங் அவர்கள், தேவனுடைய அழைப்பிற்குக் கீழ்ப்படிந்து 1975 ஜூன் 2-ம் தேதி தனது ஆசிரியர் வேலையை ராஜினாமா செய்துவிட்டு, நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் முழுநேர ஊழியராக இணைந்து, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தில் விரிவுப்பணி செயலாளராகப் பணியாற்றினார். அவர் 1981-ம் ஆண்டிலிருந்து தமிழ்நாடு, கேரளா மாநிலங்களின் விரிவுப்பணி பொறுப்பாளராகவும், பின்னர் தேசிய விரிவுப்பணி முன்னோடிச் செயலாளராகவும் செயல்பட்டு வந்தார். அவரது காலத்தில் நமது இயக்கத்தின் ஊழியங்கள் அனைத்து

திசைகளிலும் விரிந்து பரவிற்று. மேலும், அவர் இணை பொதுச்செயலாளராகவும் செயலாக்கம் செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. திரு. துரைசிங் அவர்களின் ஊழிய வளர்ச்சிக்கு அவரது மனைவி திருமதி. மனோரமா அவர்கள் பெரிதும் உதவினார். மேலும், இவர் புதன்கிழமை உபவாச கூடுகையில் குறிப்பாக, கிறிஸ்துமஸ் காணிக்கைகளைச் சேகரித்து கிரமமாக ஊழியத்திற்கு அனுப்பியும் வந்தார். ஆனால், துரதிஷ்டவசமாக 2002 ஜூன் 5-ம் தேதி, இவர்களது ஒரே மகன் திரு. ஜோசப் நோயின் காரணமாக மரித்துப் போனார்.

இவரது கணவர் திரு. துரைசிங் அவர்கள், 2005 மே 21-ம் தேதி நமது இயக்கத்திலிருந்து ஓய்வுப்பெற்று, 2014 ஏப்ரல் 4-ம் தேதி தேவ மகிமைக்குள் பிரவேசித்தார். தனது அன்பு மகனையும், கணவரையும் இழந்த பிறகும், திருமதி. மனோரமா அவர்கள் ஜெபக்குழுக்களை நடத்துவதிலும், பெண்கள் கூடுகைகளை ஒழுங்குச் செய்வதிலும், இளம் பெண்களைக் கர்த்தருக்குள் வழிநடத்தி ஆலோசனை அளிப்பதிலும் மிகச்சிறப்பாக தொடர்ந்து செயல்பட்டு வந்தார்கள். இக்கால கட்டங்களில் இவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு, அதற்கு சிகிட்சை பெற்று வந்தார். பின்னர் இவர் அந்நோயின் கொடூரத்தினால் 2022 பிப்ரவரி 22-ம் தேதியன்று இவ்வுலக ஓட்டத்தை இனிதே முடித்து நித்தியத்திற்குள் பிரவேசித்தார். இவரது சரீரம் உயிர்த்தெழுதலின் நம்பிக்கையோடு பாளையங்கோட்டை கிறிஸ்தவ கல்லறைத்தோட்டத்தில் நல்ல டக்கம் செய்யப்பட்டது.

இவர்கள் மருமகள் திருமதி. அனி பாக்கியா மற்றும் இரு பேரக்குழந்தைகளான ஜூலியட் கிரேசி மற்றும் ஜானி வெஸ்லி ஆகியோரை நமது ஜெபங்களில் தாங்கிக்கொள்வோம்.

- அருள்திரு. அறிவர். E. ராஜன்

மகிமைக்குள் பிரவேசித்தார்கள்



நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மதுரை மேற்கு, ஆரப்பாளையம் ஜெபக்குழுத்தலைவராக இருந்த திரு. A. ஆல்வின் மனுயெல் ஜேக்கப் (வயது-74) அவர்கள் 07.01.2022 அன்று சுகவீனத்தினிமித்தம், கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். கடந்த 15 வருடங்களாக காணிக்கை சேகரிப்பதிலும், ஊழியத் தேவைகளை சந்திப்பதிலும் முன்மாதிரியாகத் திகழ்ந்தார்கள். அவர்களின் மனைவி திருமதி. சந்திரா ஆல்வின், மகன் திரு. A. ஆஸ்லின் ஜஷ்டின் பிரகாஷ் மற்றும் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக, அவர்கள் நிறைவேற்றி வந்த ஊழியப் பணியினை தொடர்ந்து செய்ய தலைமுறைகள் எழும்ப ஜெபிப்போம்.



சகோ. வேத இரத்தினம் அவர்கள் (வயது-59), பவானியில் நமது ஸ்கேன் ஊழியத்தின் பொறுப்பாளராகச் செயல்பட்டு வந்தார். இவர் கடந்த 2022 பிப்ரவரி 21-ம் தேதி கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்கள். இவருடைய மனைவி திருமதி. சமாதானம் வேத இரத்தினம் மற்றும் மகள் திருமதி. ஜெமிமா குடும்பத்தாரை நமது ஜெபங்களில் தாங்கிக்கொள்வோம்.

மறக்க முடியாத மாமனிதர்கள்



சகோ. கோகணி பிரவின்பாய் & சகோதரி. கோகணி பாருபேன்

இளமைப்பருவம்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவால் குஜராத் மாநிலம் – டாங்ஸ் மாவட்டத்தில் 1976-ம் ஆண்டு குக்னா மக்கள் மத்தியில் வகைய், ஹல்மூடி போன்ற பணித்தளங்கள் திறக்கப்பட்டு, அங்கே திருச்சபை நாட்டும் பணி ஆரம்பிக்கப்பட்டது. அந்த ஊழியத்தின் வாயிலாக ஆயிரமாயிரமான குக்னா மக்கள் ஆண்டவரை ஏற்று, திருச்சபைகளாக மலர்ந்தனர். அவர்கள் மத்தியில் இருந்து மிஷனெரிகளாகப் பல வாலிபர்கள் எழும்பியுள்ளார்கள். அப்படி ஊழியத்திற்கு வந்த ஒரு மிஷனெரிக்கனிதான், சகோ. கோகணி பிரவின்பாய். இவர் குஜராத் மாநிலம், வியாரா தாலுகாவிலுள்ள குயிலிபாடா கிராமத்தில் கிறிஸ்துவை அறியாத ஒரு குடும்பத்தில் 1979-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ம் தேதி பிறந்தார்.

சகோ. பிரவின்பாயின் தகப்பனார் பெயர் திரு. லட்சுபாய்; தாயார் பெயர் திருமதி. சாத்ராபேன். சகோ. பிரவின்பாய் சிறுவனாக இருக்கும்போதே இவருடைய தந்தை திரு. லட்சுபாய் மரித்துப்போனார். எனவே இவருடைய தாயார் இவரை வளர்த்தார்கள். இவருக்கு ஒரு தம்பி உண்டு. அவர் பெயர் கிரிஷ்பாய்.

இரட்சிப்பின் அனுபவம்

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் பணியின் வழியாக கிறிஸ்துவின் நற்செய்தியைத் திருமதி. சாத்ராபேன் அறிந்து கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டார்கள். அந்தப் பகுதியில் அநேக திருச்சபைகள் மலர்ந்தபடியால், நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு வருங்கால சந்ததியாகிய சிறுவர் சிறுமிகளுக்குக் கல்வி கொடுக்கத் தீர்மானித்து, சிறுவர் விடுதி அமைத்தது. நவ ஜீவன் சேவா மண்டல் வாயிலாக நடத்தப்பட்ட சிறுவர் விடுதியில் சகோ. பிரவின்பாய் சேர்ந்து படித்து வந்தார். 1-ம் வகுப்பு முதல் 9-ம் வகுப்பு வரை கல்வி அறிவோடு பரிசுத்த வேதத்தைப் பற்றியும், கிறிஸ்தேசுவைப் பற்றியும் அறிந்து வந்தார். விடுதி மாணவர்களுக்கு 1994-ம் ஆண்டு நடத்தப்பட்ட விசேஷித்த ஆவிக்குரிய கூடுகையொன்றில் இவர் தன்னை முழுமையாகக் கிறிஸ்துவிற்கு அர்ப்பணித்து ஆண்டவரை ஏற்றுக்கொண்டார்.

ஊழியத்திற்கு அழைப்பு

சகோ. பிரவின்பாய் இரட்சிக்கப்பட்டபின், இவருடைய சொந்த பந்தங்கள், மற்றும் இனத்தார் கிறிஸ்துவை அறியவேண்டும் என்ற வாஞ்சை இவருடைய உள்ளத்தில் அனலாய்ப் பற்றியெரிந்து கொண்டிருந்தது. தன் இனமக்களுக்கு 'தானே பொறுப்பாளி!' என்று வேதத்தின் வாயிலாக கற்றுக் கொண்டார். அதன்படி ஜெபித்து வந்த சகோ. பிரவின் ஒரு ஆவிக்குரிய கூடுகையின்போது, வந்திருந்த செய்தியாளர் ஏசா 6:8-ன் அடிப்படையில் கொடுத்த இறைச்செய்தியால் தொடப்பட்டு, தன்னை ஊழியத்திற்கென அர்ப்பணம் செய்தார்.

இவர் குஜராத் வேதாகமக்கல்லூரியில் இணைந்து, இறையியல் இளநிலைப் பட்டப்படிப்பை 2001-ல் முடித்தார். நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு மூலம் தன்னுடைய குடும்பம் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டதால், இந்த இயக்கத்தின் வழியாக ஊழியம் செய்ய விரும்பி, அதில் இணைந்தார். 2002-ம் ஆண்டு நேர்முகத் தேர்வில் தேர்வு செய்யப்பட்டு, கட்சுவாவில் உள்ள மிஷனெரிப்பயிற்சி நிலையத்தில் ஓராண்டு பயிற்சியை 2003-ம் ஆண்டு வெற்றியாக முடித்தார். அதன் பின்பு சத்தீஸ்கட் மாநிலத்தில் ஒராவன் மக்கள் மத்தியில் பணியாற்ற அனுப்பி வைக்கப்பட்டார். அங்கு தபுக்காரா பணித்தளத்தை மைய மாக வைத்துப் பணியாற்றி வந்தார்.

திருமதி. கோகனி பாருபேன்

சகோதரி. பாருபேன், குஜராத் மாநிலம்-வியாரா தாலுகாவிலுள்ள பார்டிபாடா கிராமத்தில் 1976-ம் ஆண்டு செப்டம்பர் 1-ம் தேதி பிறந்தார். இவருடைய தந்தை திரு. சித்ராபாய்; தாயார் திருமதி. இதுபேன். இவருடன் பிறந்தவர்கள் 3 சகோதரிகள் மற்றும் ஒரு சகோதரர் ஆவர். இவருடைய பெற்றோர்கள் நமது மிஷனெரிகளின் வாயிலாகக் கிறிஸ்துவை அறிந்து அவரை ஏற்றுக்கொண்டார்கள். மிகவும் சுகவீன மாக இருந்த இவருடைய தகப்பன் திரு. சித்ராபாயை, சுவிசேஷத்தை அந்தப் பகுதி யில் அறிவிக்க வந்த மிஷனெரிகளான திரு. இஸ்ரவேல் தேவதாஸ் மற்றும் திரு. ஜான்சன் பர்னபாஸ் அவர்களிடம் ஜெபத் திற்காகக் கொண்டு வந்தனர். ஊழியர்களின் ஊக்கமான ஜெபத்தைக் கேட்ட ஆண்டவர், உடனே திரு. சித்ராபாயிற்கு நல்ல சுகத்தைக் கொடுத்ததால், அவர் குடும்பமாக ஆண்டவரை ஏற்றுக்கொண்டு பழைய வழிபாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

இளமைப்பருவமும் இரட்சிப்பின் அனுபவமும்

சகோதரி. பாருபேன் படிப்பிற்காக வியாராவி லுள்ள பெத்தேல் விடுதியில் சேர்க்கப்பட்டு, அங்கிருந்து இயேசுவின் அன்பைப் பற்றியும் மற்றும் வேதத்தைப் பற்றியும் நன்கறிந்து ஜெபிக்கக் கற்றுகொண்டதோடு. பாவம், நரகம், மோட்சம், ஆண்டவர் தரும் விடுதலை போன்ற காரியங்களையும் அங்கே கற்றுக்கொண்டார். 1996-ம் ஆண்டு வாலிபர்களுக்கென நடத்தப்பட்ட முகாமில் பெத்தேல் தலைவர்கள் மற்றும் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் தலைவர்கள் தேவனுடைய செய்தியைப் பகர்ந்து கொண்டார்கள். கிறிஸ்துவை நன்கு அறிந்திருந்தாலும், அந்தக் கூடுகையில் இச்சகோதரி தன்னுடைய பாவங்களை அறிக்கை செய்து, தேவனுடைய மன்னிப் பையும் இரட்சிப்பின் நிச்சயத்தையும் பெற்று தேவனுடைய பிள்ளையாக ஒரு புது வாழ்வைத் தொடங்கினார்.

ஊழியத்திற்காக அழைப்பு

1997-ம் ஆண்டு ஒரு இளைஞர் கூடுகையில் இவர் பங்குப்பெற்று, அங்கே தேவப்பணி செய்யும் ஊழியர்களின் பகிர்ந்து கொள்ளுதலால் தொடப்பட்டுத் தானும் அப்படிப்பட்ட ஊழியத்தைச் செய்ய வேண்டும் என்றும், கிறிஸ்துவை அறிந்திராத மக்கள் குறிப்பாக தன்னு டைய இனமக்கள் இரட்சிக்கப்பட வேண்டும் என்ற பாரத்தையும் பெற்றார். 2003-ம் ஆண்டு நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு நடத்திய நேர்முகத் தேர்வில் இவர் பங்குப்பெற்று மிஷனெரியாகச் செல்ல தெரிந்தெடுக்கப்பட்டார். மிஷனெரிப்பயிற்சிக்குப் பின், ஹரியானா மாநிலத்தில் பெண்கள் மத்தியில் மிஷனெரியாகப் பணியாற்றி வந்தார்.

திருமண வாழ்வு

நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவின் மிஷனெரியாக ஹரியானா மாநிலத்தி லுள்ள ரத்தியா பணித்தளத்தில் பணியாற்றி வந்த சகோதரி. பாருபேனிற்கு சகோ.

பிரவின்பாயுடன் திருமண ஏற்பாட்டைப் பெற்றோர்கள் மேற்கொண்டனர். தேவ தூய நியமப்படி சகோ. பிரவின் மற்றும் சகோதரி. பாருபேனின் திருமணம் குயிலிபாடா ஆலயத்தில் வைத்து 2005 மே மாதம் 14-ம் தேதி வெகுச்சிறப்பாக நடைபெற்றது. திருமண வரவேற்பு நிகழ்ச்சிகள் யாவும் பெண்ணின் ஊராகிய பார்டிபாடாவில் வைத்து நடைபெற்றன. இவர்களது திருமண வாழ்வை தேவன் ஆசீர்வதித்து, 2006-ம் ஆண்டு மே மாதம் 24-ம் தேதி ஒரு பெண் குழந்தையைக் கொடுத்தார். அவளுக்குப் 'பிரசன்ஷா' என்று பெயரிட்டனர். பின்பு 2009-ம் ஆண்டு ஏப்ரல் 20-ம் தேதி ஒரு ஆண் மகவை தேவன் இவர்களுக்குக் கட்டளையிட்டார். அவனுக்குப் 'பிரின்ஸ்' என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

திருச்சபை நாட்டும் பணியில்

திருமணத்திற்குப்பின் இருவரும் சத்தீஸ்கட் மாநிலம்-தபுக்காரா பணித்தளத்தை மைய மாக வைத்துப் பணிசெய்து வந்தார்கள். இவர்களது ஊழியத்தின் வாயிலாக அநேகர் கிறிஸ்துவை ஏற்று, ஆராதித்து வந்தனர்; 7 திருச்சபைகள் உருவாக்கப்பட்டன; 239 மக்கள் திருமுழுக்கு வழியாகக் கிறிஸ்துவை அறிக்கை செய்தனர்; 3 இடங்களில் இரவுக்கூடுகைகள் தொடர்ந்து நடத்தப்பட்டு ஆராதனை குழுக்கள் உருவாகும் வாய்ப்பும் இருந்தது. இவர்கள் ஒராவன் மொழியை நன்குக் கற்று, அந்த மொழியில் நற் செய்தியை மிகுந்த திறமையுடன் அறிவித்து தேவப்பணியாற்றி வந்தனர்.

இறுதி நாட்கள்

2010-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் தேதி பார்த்தோபாரா கிராம விசுவாசிகளுக்கு ஆவிக்குரிய கூட்டம் நடத்த கன்சாபெல்லில் இருந்து இரு சக்கர மோட்டார் சைக்கிளில் சகோ. பிரவின்பாய், தன் மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் சென்று கொண்டிருந்தார். சுமார் 2 கி.மீ தொலைவு சென்றபோது, ஒரு சிறு குறுகலான பாலத்தை இவர்கள் கடக்க வேண்டியதாக இருந்தது. எதிரே ஒரு சிறிய பஸ் வந்து கொண்டிருந்தது. அதைக் கண்டவுடன் 100 அடிக்கு முன்னே சகோ. பிரவின்பாய் தன்னுடைய வாகனத்தை நிறுத்தி நின்றுகொண்டிருந்தார். இவருடைய மனைவி சகோதரி. பாருபேன் தன் சிறு குழந்தையுடன் வண்டியிலிருந்து இறங்கி, பஸ் கடந்து செல்லக் காத்திருந்தனர். வேகமாக வந்த பஸ் கட்டுப்பாட்டை இழந்து, சாலை அருகே நின்றுக்கொண்டிருந்த இந்தக் குடும்பத்தின் மீது மோதியது. சகோதரி. பாருபேன் மற்றும் சிறு மகன் பிரின்ஸ் மீது பஸ் சக்கரம் ஏறியபடியால், அந்த இடத்திலேயே அவர்களது உயிர் பிரிந்தது. அந்த விபத்தில் தூக்கியெறியப்பட்ட சகோ. பிரவின் தன் சுயநினைவை இழந்தவராகக் காணப்பட்டார். மகள் பிரசன்ஸா சிறு காயங்களுடன் உயிர் தப்பினார். அங்கிருந்தவர்கள் உடனே இவர்கள் இருவரையும் அருகிலுள்ள கன்சாபெல் அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றனர். மருத்துவமனையில் கொடுத்த சிகிச்சை பலன் கொடுக்காமல் அன்றே 2010-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் தேதி சகோ. பிரவின்பாயும் தேவ ராஜ்யம் சென்றடைந்தார். செய்தியைக் கேள்விப்பட்டு அருகிலுள்ள அனைத்து மிஷனெரிகளும் அங்கு வந்து தேவையான அனைத்துக் காரியங்களையும் செய்தனர். சகோ. பிரவின்பாயின் குறுகிய கால ஆயுள்நாளில் அவர்கள் குடும்பமாகச் செய்த கடினமான மிஷனெரிப்பணிக்காக ஆண்டவரைத் துதிப்போம். அவர்களுடைய மகள் பிரசன்ஸா டோனாவூர் சந்தோஷ வித்யாலயாவில் 8-ம் வகுப்பு படித்து வருகிறார். இம்மகளின் எதிர்கால வாழ்விற்காக ஜெபிப்போம். இந்தக் குடும்பத்திற்காக தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

– அருள்திரு. அறிவர். இ. ராஜன்

நிலத்திலே விழுந்த கோதுமை மணி!



திருமதி. கமலா ஜிம்சன்

(03.08.1948 - 08.02.2022)

நமது மூத்த மிஷனெரி திரு. ஜிம்சன் அவர்களின் மனைவி திருமதி. கமலா ஜிம்சன் அவர்கள், கடந்த 2022 பிப்ரவரி 8-ம் தேதி கர்த்தருக்குள் நித்திரை யடைந்தார்கள். இவர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பிலாவிளையில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் 1948 ஆகஸ்டு 3-ம் தேதி பிறந்தார். இவர்கள், நமது இயக்கத்தில் 1973 பிப்ரவரி 3-ம் தேதி இணைந்து, மிகவும் வாஞ்சையுடன் ஊழியம் செய்து வந்த சகோ. ஜிம்சன் அவர்களை 1976 பிப்ரவரி 11-ம் தேதி திருமணம் செய்தார். திருமணத்திற்குப் பிறகு இவர்கள் குடும்பமாகப் பீஹாரி லுள்ள கயா என்கிற இடத்திற்கு மிஷனெரியாக அனுப்பப்பட்டார்கள். பின்னர் பஞ்சாபிலுள்ள பட்டிண்டா என்கிற இடத்தை மையமாக வைத்து சில காலம் ஊழியம் செய்தார்கள். ஹரியானா மாநிலத்திலும் இவர்கள் ஊழியம் செய்தது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு 14 ஆண்டுகள் வடஇந்தியா வில் மிஷனெரிப்பணி ஆற்றிய பிறகு இவர்கள் தருமபுரி மாவட்டத்திலுள்ள சூளகிரி என்கிற இடத்தை மையமாக வைத்து ஊழியம் செய்தனர். பின்னர், இவர்கள் சென்னை புறநகர் பகுதியி லுள்ள குடிசைவாழ் மக்கள் மத்தியில் ஊழியம் செய்தார்கள். 2010-ம் ஆண்டி லிருந்து சகோ. ஜிம்சன் அவர்கள் சென்னை தலைமையகத்தில் சிறுவர் பிரிவு ஊழியத்தில் ஊழியம் செய்து ஓய்வுப் பெற்றார்கள்.

தேவன் இவர்களை ஜிம் சாமுவேல் மற்றும் பென் சாமுவேல் ஆகிய இரு பிள்ளைகளால் ஆசீர்வதித்தார். இவர்களது இரு பிள்ளைகளும் தற்போது திருமணம் முடிந்து சென்னையில் வாழ்ந்து வருகிறார்கள். சகோ. ஜிம்சன் அவர்கள் 2015 ஜூலை 11-ம் தேதி இவ்வுலக ஓட்டத்தை இனிதே முடிக்கவே, திருமதி. கமலா ஜிம்சன் அவர்கள் தங்களது இளைய மகன் திரு. பென் சாமுவேல் அவர்களின் குடும்பத்தோடு சென்னை - மன்னிவாக்கத்தில் தங்கியிருந்தார்கள். இவர்கள் கடந்த 2022 பிப்ரவரி 8-ம் தேதி தேவ மகிமைக்குள் பிரவேசித்தார். இவர் விட்டுச்சென்றுள்ள இருபிள்ளைகளின் குடும்பத்தினரையும் நமது ஜெபங்களில் தாங்கிக்கொள்வோம்.

- அருள்திரு. அறிவர். E. ராஜன்



மகிமைக்குள் பிரவேசித்தார்கள்

குமரி மாவட்டம், தென்தாமரைகுளம் பகுதியைச் சார்ந்த ஓய்வுபெற்ற CSI சேகரத்துப்போதகர் அருட்திரு. ஆ. ஜான் சகாயதாஸ் (வயது-82) அவர்கள், கடந்த 29.01.2022 அன்று தனது உலக ஓட்டத்தை முடித்தார்கள். இவர் தனது ஊழியக்காலத்தில் மலையன்விளை, லீபுரம், பூவன்கோடு போன்ற திருச்சபைகளில் நண்பர் சுவிசேஷ ஜெபக்குழு ஊழியங்களை அறிமுகப்படுத்தி, இதற்காக ஜெபிக்கிற, உழைக்கிற மற்றும் கொடுக்கிற மக்களை எழுப்பித் தந்தார். இவர் தான் ஓய்வுபெற்றப் பின்னரும் மிஷனெரிப்பணிகளை நேசித்து, மிஷனெரிகளைச் சந்தித்து உற்சாகப்படுத்தினார். போதகரின் மறைவு ஓர் இழப்பு. இவர் விட்டுச்சென்றுள்ள இவரது மூன்று பிள்ளைகளின் குடும்பங்களுக்குக் கர்த்தர் ஆறுதலையும் சமாதானத்தையும் தந்தருள ஜெபிப்போம்.



ஈரோடு மாவட்டம், பெருந்துறையைச் சேர்ந்த நமது ஜெபக்குழுத்தலைவர் திரு. சமாதானராஜ் (வயது - 74) அவர்கள், கடந்த 30.01.2022 அன்று தேவனுடைய இளைப்பாறுதலுக்குள் பிரவேசித்தார்கள். இவர் கடந்த 22 வருடங்கள் நமது ஊழியத்தில் அதிக ஈடுபாடு கொண்டவராக ஜெபக்குழு நடத்துவதிலும், அநேகரை மிஷனெரிப்பணியில் ஊக்குவிப்பதிலும் சிறப்பாகச் செயல்பட்டு வந்தார். இவரது முதல் மகள் திருமதி. பின்னி ஞானம் தினேஷ் அவர்கள் நமது இயக்கத்தில் ஜார்க்கண்ட் மிஷனெரியாகவும், இரண்டாவது மகள் திருமதி. பிச்சு ஞானம் ஆன்ட்ரூ IEM-லும், மூன்றாவது மகள் திருமதி. பிரசங்கி சாம் ரக்சாலிலுள்ள டங்கான் மிஷனெரிப்பள்ளியிலும் முழுநேர ஊழியர்களாக இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவரது மனைவி திருமதி. ராஜாத்தி சமாதானராஜ் அவர்களையும், இவர்களது மகள்களுடைய குடும்பங்களையும் நமது ஜெபத்தில் தாங்குவோம்.



கன்னியாகுமரி மாவட்டம் நெய்யூர் திருச்சபையைச் சார்ந்த Dr. சைமன் அவர்கள் ஆதி நாட்களிலிருந்தே மிஷனெரிப் பணியில் மிகுந்த நாட்டமுள்ளவர்கள். இவர்கள் நமது நண்பர் சுவிசேஷ ஜெபக்குழுவில் மிஷனெரி ஆதரவாளராகவும் ஜெபப் பங்காளராகவும் செயல்பட்டவர்கள். இவர்கள் கடந்த 02.02.2022 அன்று தனது 91-வது வயதில், இவ்வுலக ஓட்டத்தை இனிதே முடித்து தேவ ராஜ்யம் சென்றடைந்தார்கள். இவர்கள் விட்டுச்சென்றுள்ள மிஷனெரி தரிசனத்தை அவர்களின் அன்புப் புதல்வன் வழக்கறிஞர். ரஜூலின் அவர்கள் தொடர்ந்து நிறைவேற்றி வருவது மகிழ்ச்சி. வழக்கறிஞர் அவர்களுடைய துணைவியார் Dr. ரீனா ரஜூலின் அவர்களும் நமது இயக்கத்தின் குழந்தை ஆதரவாளர் என்பது நினைவு கூரத்தக்கது. இந்தக் குடும்பத்தின் மக்கள் தெய்வீக ஆறுதலையும், மிஷனெரிப் பணியின் ஆசீர்வாதங்களையும் பெற்று வாழ தொடர்ந்து ஜெபிப்போம்.

FMPB, நெய்யூர் பணி மாவட்ட செயலாளர்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ராபர்ட் ராஜலிங்கம், திரு. தௌஜபாவ் குயிட்டே
திரு. சுங்லென்லால் சிங்சிட்
திருமதி. மன்னா ராஜ வித்யா அகஸ்டியன்
திருமதி. மெலொடி டிம்சன்டிங் வய்ஃபெய்
திரு. ஸியான்லுன்தாங்க் ஸௌ T.

ஜம்மு

ஆர். எஸ். புரா & அக்னூர்:

டேவிட் அய்யனார் & மன்பிரீத் கௌர்

துதிக்க: மூன்று நபர்கள் இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொண்டுள்ளனர்; 3 கிராமங்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப் பட்டுள்ளது; பனோட்டா கிராமத்தில் 2 குடும்பங்கள் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டுகின்றனர். கோட் பல்லால் கிராமத்திலுள்ள அன்வார் என்பவருக்கு நீண்டகாலமாக இருக்கும் கால் வலியி லிருந்தும், ஆக்ரா சக் மற்றும் ஜானிபூர் கிராமத்திலுள்ள நமது இளம் விசுவாசி ரித்திக்காவுக்கு தேவன் தந்த துணைக் காகவும், இப்பணித்தள வெளிப்புற சந்திப்புப் பணியில் விசுவாசிகளும், மூப்பர்களும் பணிபுரிவதற்காகவும் தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஆக்ரா சக் பகுதியிலுள்ள நம் எதிர்ப்பாளர்கள் மனம்மாற; சபைகளில் பொறுப்பேற்றிருக்கின்ற மூப்பர்கள் உண்மையுடன் பணி புரிய; பால்மிக்கி, பகத், பட்லால் மக்கள் கூட்டத்தில், சுவிசேஷம் அறிவிக்க தேவன் தந்த திறந்த வாசலுக்காக; ரத்திடண்டா கிராமத்தை சேர்ந்த காஞ்சனா கழுத்து சம்பந்த மான பிரச்சனையிலிருந்தும், பட்யால் கிராமத்தைச் சேர்ந்த பூஜா இழுப்பு நோயிலிருந்தும், ஆக்ராசக் கிராமத்தி லுள்ள ஸ்பிலால் கோவிட்-19னால் ஏற்பட்ட பெலவீனத்திலிருந்தும் சுகம் பெற; பின்வாங்கிய விசுவாசிகள் மறுபடியும் விசுவாசத்தில் நிலைத்திருக்க ஜெபிப்போம்.

நரோத்: ஜீவர் ஜோஸ்வா & ஷேத்ரிமயூம் பிரியா தேவி

துதிக்க: சாயத்பூர் கிராமத்தில் ஞாயிறு ஆராதனையை மறுபடியும் ஆரம்பிக்க தேவன் தந்த கிருபைக்காக; நமது புதிய விசுவாசிகள் ஞாயிறு ஆராதனையில் கலந்து கொள்ள ஆரம்பித்ததினால் பெற்ற ஆசீர்வாதத்திற்காக; நமது விசுவாசி ஷில்பாவிற்கு அரசாங்கக் கல்லூரியில் ஆசிரியைப் பணி கிடைத்தமைக்காக; விசுவாசத்தில் பின்வாங்கிய டாலோர் கிராமத்தைச் சேர்ந்த பில்லு குடும்பம் மறுபடியும் விசுவாசத்தில் பெலப்பட்ட தற்காக; சுனினா தேவி மனசோர்வி லிருந்து சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: எதிர்ப்பு மறைந்ததால் நாகிரி கிராமத்தில் ஆலய ஆராதனை மீண்டும் ஆரம்பிக்கப்பட; எதிர்ப்பின் மத்தியிலும் விசுவாசிகள் ஸ்திரமாக நிற்க; மாஷா மக்கள் கூட்டத்தின் மத்தியில் சுவிசேஷ வாசல்கள் திறக்கப்பட; கார்காரா கிராமத்தி லுள்ள கரன் குடும்பம் ஆவிக்குரிய வாழ்வில் வளம்பெற; சாய்த்பூர் கிராமத் தைச் சேர்ந்த சன்தோக் பக்கவாதத்தி லிருந்தும், தர்சாம் கட்டியிலிருந்தும், தராலா கிராமத்தில் தானியா வெள்ளைப் படையிலிருந்தும், தான்டா, மரணப் படுக்கையிலிருந்தும் சுகமடைய; நமது விசுவாசி மனிஷாவிற்கு தகுதியான மணமகன் அமைய ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ராஜதுரை P., திரு. ஜெபராஜ் S.
திருமதி. ஆலிவ் ஜெனிஃபர் நத்தானியேல் எட்வர்ட்
திரு. செந்தில் முருகன் V., திரு. ரபீந்திர மூர்மு

ஹிமாச்சலப் பிரதேசம்

ரிகாங்பியோ:

பப்லு பரசேத் &
கல்பனா மாலிக்

துதிக்க: புதிதாக 5 கிராமங்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டுள்ளன. ரிபா, பௌவாரி கிராமங்களைச் சேர்ந்த நிர்மல், மனீஷ், ரமேஷ் ஆகியோர் சுவிசேஷத்தில் ஆர்வம் காட்டுகின்றனர். கோவிந், ராம்குமார், சன்டேலி, ஷாந்தி, சுக்மாயா, வாங்மோ ஆகியோர் அசுத்த ஆவியின் சக்தியிலிருந்து விடுபட; நமது விசுவாசி ஜகத் என்பவரின் மகள் கோவிட்-19 இலிருந்து ஜெபத்தின் விளைவாக சுகம் பெற்றார். நமது விசுவாசி ரூபன் அவர்களின் மகளுக்கு மருத்துவக் கல்லூரியில் படிக்க இடம் கிடைத்துள்ளது. ஸஸ்லா, ஷோங் ஆகிய சபைகளில் நடைபெற்ற உபவாச ஜெபங்கள் ஆசீர்வாதமாக அமைந்த தற்காகத் தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பகவான் தாஸ் அவரின் வீட்டின் அருகாமையில் வசிக்கும் மக்களின் இரட்சிப்பிற்காக; கவிராஜ், நம்ஜியால், ஜக்தீஸ், முன்னா, மஹேஷ்லர் என்ற எதிர்ப்பாளர்கள் மனம்மாற; தேர்வு எழுத ஆயத்தமாகின்ற நமது விசுவாசிகளின் பிள்ளைகளுக்காக; பணித்தளத்திலுள்ள 7 சபைகளிலும், ஆவிக்குரிய மறு மலர்ச்சி நடைபெற ஜெபிப்போம்.

கர்சோக்:

சுமித் குமார் தரியானி &
துங்சிபெனி

துதிக்க: புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷ வசனங்கள் மூலம் நற்செய்தி பகரப்பட்டுள்ளது. சிறிய ஜெபக்குழுக்கள் கிரமமாக நடைபெறுவதின் மூலம் அநேக விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்பட்டு வருகின்றனர். பாஹா கிராமத்தில் ஆராதனைக்குழு ஆரம்பிக்கப்பட்டது. பலத்த மழை மற்றும் பனிப் பொழிவுகளுக்கு மத்தியில் இரவுக் கூட்டங்களையும், வேதாகம வகுப்புகளையும் நடத்த தேவன் கிருபை செய்தார். பூனம் பஹான் என்ற ஊனமுற்ற விசுவாசி ஒருவர் சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொண்டு பலரை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தி வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பாஹா, ஜலாடி, நியாரா, புரல், மும்மெயில் ஆகிய கிராமங்களில் சிறு ஜெபக்குழுக்கள் தவறாமல் நடைபெற; நைனா தேவி, ஹிட்டேந்தர், யசோதா ஆகியோரின் ஆவிக்குரிய வளர்ச்சிக்காக; நமது விசுவாசி ஜெய்ராமிற்கு இருக்கும் கடனை விரைவில் அடைக்க தேவன் உதவிச் செய்ய ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. மரியம்மாள் பால் சாலமோன்
திரு. ஜசக் R., திரு. டாவுட் டுடு
திருமதி. பியூலா முரளிதரன்
திருமதி. ஜெய சௌந்தரி ஜெபராஜ் சாமுவேல்

ஜியோரி:

ஜம்கோன்காம் ஹயோகிப் & ஜரின் லெட்தென்மாங்

துதிக்க: புதிதாக 15 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. ஜீப் ஊழியத்தின் மூலம் முதன் முறையாக அநேகம் பேர் கிறிஸ்துவை அறிந்து கொண்டனர். ஜியான் தேவி தீராத இருமல் நோயிலிருந்தும், பாஞ்சா கிராமத்தைச் சேர்ந்த ஹரிதாஸ் மரணப்படுக்கையிலிருந்தும் சுகம் பெற தேவன் கிருபை செய்ததற்காகத் தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பிசாசின் பிடியிலிருந்து ஜெய்காந்தி விடுதலைப் பெற; நமது விசுவாசி கொண்டா தேவியின் சொத்துப் பிரச்சனையில் நீதிமன்றத்தின் மூலம் நீதி கிடைக்க; பதால் கிராமத்தைச் சார்ந்த உமா குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவ; ஒரு கிராமத்தில் சரிதா மற்றும் அவளது குழந்தையை தனியாக விட்டு விட்டு கணவர் மற்றும் கிராமத்தைச் சேர்ந்த அனைத்து கிராம மக்களும் அவர்களின் வாழ்வாதாரத்திற்காக வெளி மாநிலம் சென்றிருக்கின்றனர். தனியாக இருக்கும் சரிதா மற்றும் குழந்தையின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.

பஞ்சாப்

புத்லாடா:

சஞ்ஜீப் ஆனந்த் & பிரஸ்துதா

துதிக்க: புதிதாக 3 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் வந்துள்ளனர். டோலோவால், கடெயில் ஆகிய கிராமங்களில் முதன் முறையாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. தொகானா கிராமத்தைச் சார்ந்த விட்டு சிங் கல்லீரல் தொற்றிலிருந்து சுகம் பெற்றார். விசுவாசத்தில் பின்மாற்ற மடைந்த சரண் ஜீத் கௌர் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளார். நமது விசுவாசி பிரிநாகா ராணி, இங்கா ஆகியோர் மழலைச் செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர்.

ஜெபிக்க: புத்லாடா ஆலயத்தின் வாலிப விசுவாசிகள் தேவப் பணிக்கென்று தங்களை அர்ப்பணிக்க; சாட்னம் சிங் மரணப்படுக்கையிலிருந்தும், ஹர்பான்சா புற்று நோயிலிருந்தும், மன்பிரீத் மஞ்சள் காமாலை நோயிலிருந்தும், ஜிலா கண் தொற்றுப் பிரச்சனையிலிருந்தும், ஹர்பிரீத் கௌர், ஹரம்ஜீத் கௌர் ஆகியோர் மனநோயிலிருந்தும், பரேட்டா கிராமத்தைச் சார்ந்த கங்தீப் கல்லீரல் தொற்றுப் பிரச்சனையிலிருந்தும் அற்புத சுகம் பெற; குல்தீப் சிங், ஹிண்டி, காலா சிங் ஆகியோர் குடும்பங்களில் தேவ சமாதானம் நிலவ ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கிரேஸி ஸ்டான்லி ஜார்ஜ்
திருமதி. கௌரம்மா @ சுவேதா அமரேந்திரன்
திருமதி. அன்னா ரோஸ்லின் ஜசக் ஆபேல்

அஹ்மத்கட் மண்டி: சௌதரி ராஜேஷ் தவ்லேபாய் & சரிதா பால்

துதிக்க: வெளிப்புற சந்திப்பு ஊழியத்தில் விசுவாசிகளை ஈடுபடுத்துவதற்காக ஜகேதா சாலையில் ஒரு வெளிப்புற சந்திப்புக்குழு ஒன்றை உருவாக்க தேவன் உதவிச் செய்தார். மினி சோப்பர் கிராமத்தைச் சார்ந்த சப்னா ராணி, ஜகேதா சாலையைச் சார்ந்த நேகா கௌர் ஆகியோர் ஜெபத்தின் மூலம் குழந்தைச் செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். சன்னா கிராமத்தைச் சார்ந்த சிமா கௌர் புற்று நோயிலிருந்து சுகம் பெற்றார். கோகாலாப் பகுதியைச் சார்ந்த குடிகாரன் சோட்டா லால், ஆலய ஆராதனையில் கலந்து கொண்ட பின் மது அருந்தும் பழக்கத்தைக் கைவிட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வெளிப்புற சந்திப்புக் குழு ஊழியத்தின் மூலம் அநேகர் கிறிஸ்துவின் மந்தையில் இணைய; கோசாலா கிராமத்தைச் சார்ந்த அசோக் குமார் மன நோயிலிருந்தும், ரிஹிடா கிராமத்தில் பரம்ஜீத் கௌருக்கு காலில் ஏற்பட்டக் காயம் மாறவும், தலிஜ் ரோட்டைச் சார்ந்த விஜய் குமார் பொது பெலவீனத்திலிருந்தும் அற்புதமாக சுகத்தைப் பெற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

பர்னாலா: பிதான் ஹன்ஸ்தா

துதிக்க: புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவைத் தங்களது இரட்சகராக விசுவாசிக்க ஆரம்பித்துள்ளனர். நமது விசுவாசி ஹாகனின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி நடந்தேறியது. கரினா கௌர் டெங்கு காய்ச்சலிலிருந்தும், ஜஸ்வந்த் கௌர் சிறுநீரகப் பிரச்சனையிலிருந்தும் சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மகேந்திரனை இழந்து தவிக்கும் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; ஜெய் சிங் புற்று நோயிலிருந்தும், தர்சேம் சிங் மஞ்சள்காமாலை நோயிலிருந்தும், கோட்துனா கிராமத்தைச் சார்ந்த மகேந்தர் சிங் கழுத்திலிருக்கும் கட்டியிலிருந்தும், பாலேட் ஹே சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்தும் சுகம் கிடைக்க தேவனை நோக்கி மன்றாடுவோம்.

பனைமரத்தின் கள் காய்ச்சு நின்றது

மகாராஷ்டிரா 'தஹானு' பணித்தளத்தில் பாரிபாடா கிராமத்தைச் சேர்ந்த ரமேஷ்பாய் தனது தோட்டத்தில் அநேக பனை மரங்களை வைத்துள்ளார். அதிலிருந்து கள் காய்த்து முழு கிராமத்திற்கும் வழங்கி வந்துள்ளார். கிறிஸ்தேசுவை ஏற்று கொண்டபின் அந்த தொழிலை விட்டு விட்டார். எனவே நமது ஊழியத்திற்கும் அந்த விசுவாசிக்கும் எதிராக மக்கள் வந்தனர். இரவுக் கூட்டங்களில் பங்கம் விளைவிக்க முற்பட்டனர். தேவ கிருபையினால் இதுவரை ஒன்றும் செய்ய இயலவில்லை. மது குடிக்கும் நபர்களின் எண்ணிக்கையும் குறைந்து கொண்டே வந்தது. ரமேஷ்பாயுடைய சாட்சியின் ஜீவியத்திற்காக நன்றி செலுத்துவோம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ராம கிருஷ்ணா அகிபாடா
திரு. பாலாஜி நெட்டாலம், திரு. அமரேந்திரன்
திருமதி. ஜெபா கிரேஸ் டேவிட்
திரு. ஜோதி ரஞ்சன் பர்தன்
திரு. லுங்மின்தாங் பய்ட்டே

பட்டிண்டா:

பிரதாப் ரஹாங் & ரேஷ்மி

துதிக்க: புதிதாக 2 நபர்கள் கிறிஸ்துவின் விசுவாச மந்தைக்குள் பிரவேசித்துள்ளனர். புதிதாக 5 கிராமங்களில் கிறிஸ்துவின் நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. விசுவாசத்தில் பின்தங்கியிருந்த லாபா சிங் குடும்பத்தினர் மீண்டும் விசுவாசத்திற்குள் அடியெடுத்து வைத்துள்ளனர். ஜெபத்திற்குப் பின் மது அருந்தும் பழக்கத்தை கைவிட்ட லாபாவின் குடும்பத்தில் தேவ சமாதானம் நிலவி வருகிறதற்காக; பல சிரமங்களுக்குப் பிறகு நமது விசுவாசிகளான பாண்டா சிங், சோனி சிங் ஆகியோர் துபாயிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பி வந்துள்ளதற்காக; ஜெபத்திற்குப் பின் இக்குபால் சிங் குடலிறக்கப் பிரச்சனையிலிருந்து சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுவிசேஷத்திற்கு செவிமடுக்கும் நான்கு குடும்பத்தினர் கிறிஸ்துவின் அன்பை அறிந்துக் கொள்ள; ஊழியத்தில் உதவி செய்து வரும் ராஜா சிங் நீரிழிவுப் பிரச்சனையிலிருந்து சுகம் பெற; எதிர்ப்புக்களின் மத்தியிலும் அமன் கௌர் விசுவாசத்தில் நிலைத்திருக்க; ரஜனி கௌர் கல்லீரல் வீக்கத்திலிருந்து சுகம் பெற தேவனிடம் கெஞ்சுவோம்.

லேஹ்ரகாகா: ஐசக் ஆபேல் & அன்னாள் ரோஸ்லின்

துதிக்க: ஜீவர் வாலா, பரியாஸ் ஆகிய கிராமங்களில் இயேசுவின் அன்பு நற்செய்தியாகப் பறைசாற்றப்பட்டுள்ளது. சாஹர் கிராமத்தில் புதியதோர் குடும்பம் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். கோவிந்த் மது அருந்தும் பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பால்ரன், சாஹர், அலாலர், செக்கு வாங் ஆகிய கிராமங்களில் நடைபெறவிருக்கும் திரைப்பட நிகழ்ச்சிகளுக்காக; பீஷோர், காடிலால் ஆகிய கிராமங்களில் ஜெபக்குழுக்கள் உருவாக்கப்பட; புதிய தொடர்பாளர்களான குர்மீத்; பிகர்வால் கிராமத்தைச் சார்ந்த காலாசிங் ஆகியோர் ஆவிக்குரிய வாழ்வில் வளர ஜெபிப்போம்.

ஆபத்துகாலத்தில் துணை

ராஜஸ்தானிலுள்ள ஸ்ரீ நகர் பணித்தளத்தில் நமது ஊழியர் இரவுநேரத்தில் அதிகமான Traffic மத்தியில் தன் வீடு திரும்பும்போது தவறுதலாக மற்றொரு இரு சக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார். இரு தரப்பு நபர்களிடமும் தவறுதல் இருந்தும், மற்ற நபர் நம் ஊழியர் உள்ளூரை சேர்ந்தவரல்ல என்பதை அறிந்து ரூ.5000/- தருமாறு வற்புறுத்தியுள்ளார். கிறிஸ்தேசுவின் பெரிதான கிருபையால் அருகாமையில் நின்ற மனிதர் இடைப்பட்டு ஒரு ரூபாய்கூட கொடுக்கவிடாமல் சுமூகமாக முடித்து தந்தார். ஆபத்துகாலத்தில் அனுகூலமான துணையானவர் நமது தேவனன்றோ!



உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. சுதர்சன் தாமஸ் ஜெயராஜ்
திரு. ஃபிராங்ளின் M.Y. பாதம் A.S.
திருமதி. சூர்ஜ்யகாந்தி உதிப்தகுமார் பாக்
திரு. காடிசெலா பிரவீன்

மான்சா:

தெப்ரத்தோ பிஸ்வாஸ் & மன்னா சிங்

துதிக்க: புதிதாக 2 நபர்கள் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். கோர்விந்தர் கௌரின் குழந்தைப் பேற்றின் போது குழந்தை இறந்து விட்ட நிலையிலும் தேவன் அவரின் உயிரைப் பாதுகாத்தார். குர்பிரீத் சிங்கின் அனைத்துத் திருமண தேவைகளும் ஜெபத்திற்குப் பின் சந்திக்கப்பட்டது. பற்பல வியாதியிலிருந்து குருசாரன் கௌர், ஜஸ்வீர் கௌர், குர்பிரீத் சிங், கைலாஷ் கௌர், அம்மானி கௌர் ஆகியோர் சுகமாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கச்சா சிங்கை இழந்து தவிக்கும் குடும்பத்தினரின் ஆறுதலுக்காக; ராமானடி, புரேலா ஆகிய கிராமங்களில் சிறு ஜெபக்குழுக்கள் ஆரம்பிக்கப்பட; மஹவாலா கிராமத்தைச் சார்ந்த சுராஜ் சிங் நெஞ்சு வலியிலிருந்தும், மார்பில் கட்டியினால் கஷ்டப்படும் குலாப் சிங் ஆகியோரும் அற்புத சுகத்தைப் பெற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

சங்ரூர்:

ஹமோம் நாபா சிங் & துலந்தி ரியாங்

துதிக்க: அனஞ் மண்டியில் முதன் முறையாக லோகர் இன மக்கள் மத்தியில் பெண்கள் கூடுகை நடத்தப் பட்டதில் அநேகர் பங்குப் பெற்று ஆசீர்வதிக்கப்பட்டுள்ளனர். முதுகு தண்டு வடப் பிரச்சனையிலிருந்து சீத்தல் ராயும், கால் பெலவீனத்தினால் கஷ்டப்பட்ட பிரேமும் சுகம் பெற்றுள்ளதற்காக; குடிப்பழக்கத்திலிருந்து சோனி ஜெபத்தின் மூலம் கைவிட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நாற்பது நாட்கள் நடை பெற்று வரும் உபவாச ஜெபம் ஆசீர் வாதமாக நடந்தேற; சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்து கங்கா தீப், பாமி சிங், நம்தா கௌர் ஆகியோர் சுகம் பெற; தொண்டையில் கட்டியினால் அவதியுறும் சந்தீப்பும், மஞ்சள்காமாலை நோயிலிருந்து ரீனுவும் சுகத்தைப் பெற்றுக் கொள்ள; சுக்செயின், மகிமா ஆகியோர் குடும்பத்தில் தேவ சமாதானம் அருளிச் செய்ய ஜெபிப்போம்.

ஃபாசில்கா: ஜெருயேல் பானி & ஜியோட்ஸ்னா ராணி

துதிக்க: முதல்முறையாக வெளிப்புற சந்திப்பு நிகழ்ச்சியின் மூலம் இரண்டு கிராமங்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப் பட்டுள்ளது. ராம் நரேஷ் பெரும் வியாதி யிலிருந்து ஜெபத்தின் மூலம் சுகத்தைப் பெற்றுள்ளார். காட்டூஸின் மனைவி பிசாசின் பிடியிலிருந்து விடுதலைப் பெற்றுள்ளார். சுபாஷ் என்பவர் சுவிசேஷத் திற்கு செவிமடுத்து வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அதிக தடைகளின் மத்தி யிலும் புதிய தொடர்பாளரான ராம் நரேஷ் கிறிஸ்துவின் அன்பை அறிந்துக் கொள்ள. பூஜா ராணி கர்ப்பத்தின் கனியால் ஆசீர்வதிக்கப்பட; சரீரம் முழுவதும் வீக்கத்தினால் கஷ்டப்படும் தர்சன் சிங்கிற்கு தேவன் சுகத்தைக் கட்டளையிட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜாண் டேவிட் ராஜ்
திரு. பவன் குமார், திரு. அல்போன்ஸ் J.

ஹரியானா

தோஷம்: ஜாண் டேவிட்சன் செல்வராஜ் & எஸ்தர்

துதிக்க: மூன்று நபர்கள் கிறிஸ்தேசுவை அறிந்து கொண்டனர். புதியதோர் கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டது. சுபூர் கிராமத்தில் சுவிசேஷத்திற்கு தேவன் வாசலை திறந்துள்ளார். தூப்சிங் ஜெபத்தின் பலனாக, நிமோனியா விலிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புகையிலை கட்டிலிருந்து, பிவானி, மஹேந்திகர்க், நர்நால், சர்கிதாதரி, ரெவாரி மாவட்டங்களிலுள்ள மக்கள் விடுதலை அடைய; ஸாய்ஸி மக்கள் கூட்டத்தினரின் இரட்சிப்பிற்காக; திருமணமாகி 7 ஆண்டுகளுக்கு பின்னர் கருவுற்றிருக்கும் சுமித்திராவிற்காக ஜெபிப்போம்.

பர்வாலா: பாபுபாய் & சரஸ்வதி

துதிக்க: புதிதாக 11 நபர்கள் கிறிஸ்தவ விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர். 7 கிராமங்களில் நற்செய்தி பகிரப்பட்டுள்ளது. ஜீப் குழு ஊழியத்தின் மூலம் முதன் முறையாக அநேக கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவிச் செய்தார். சாணியானா கிராமத்தில் ஆலயம் கட்டுவதற்கென்று ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. கட்டியிலிருந்து அணுபேன் சுகமாக்கப்பட்டுள்ளார். கைபிபூர் கிராமத்தைச் சார்ந்த போலிபேன், பார்வதிபேன் ஆகியோர் பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கைபிபூர் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலய சுற்று சுவர் விரைவில் கட்டி முடிக்கப்பட; பப்லிபாய், சுபாஷ் பாய் ஆகியோர் தவறாமல் ஆலய ஆராதனையில் கலந்து கொண்டு விசுவாசத்தில் பெலப்படுத்தப்பட; ஷாகி, சாணியானா, சாமர்கேடா; உக்லானா, சமீன், போபுவா, கார்காடா, சைன்ஹார், புகானா, கொரக்பூர் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் உருவாக; சகானி கிராமத்தைச் சார்ந்த அம்ருத்லால் மாரடைப்பிலிருந்து சுகம் பெற; பொபுலா கிராமத்தைச் சார்ந்த கவிதா பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட ஜெபிப்போம்.

கலான்வாலி:

விஜயகுமார் & ஜெபலா

துதிக்க: புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷம் பகிரப்பட்டுள்ளது. தகாட்மால் ரோட்டில் வாலிபர் கூடுகை, சத்சங் நிகழ்ச்சி ஆகியவை ஆசீர்வாதமாக நடந்தேறியது. ஒதான் கிராமத்தைச் சார்ந்த அக்பிரீத் கௌர் ஜெபத்தின் மூலம் சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: முதன்முறையாக சுவிசேஷத் தைக் கேட்டவர்கள் கிறிஸ்துவை அறிக்கை யிட; ஜீப் குழு ஊழியத்தை தேவன் ஆசீர்வதித்துத் தர; இந்த லெந்து காலங்களில் விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் மறுமலர்ச்சிப் பெற; ஒதான் கிராமத்தைச் சார்ந்த பீம் கௌர், கரம்ஜீத் கௌர் ஆகியோரும், கலான்வாலி கிராம ராகேஷ் குமார் தீய சக்தியினிடமிருந்தும் விடுதலை பெற தேவனை நோக்கி மன்றாடுவோம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. இம்மானுவேல் ரஞ்சித்சிங் S.
திரு. சாலமோன் ஜெபராஜ் J.
திருமதி. பின்னி ஞானம் ஜாண் தினேஷ்
திருமதி. அனியா ஜோஸ்ஃபின் வெங்கடேசன்
திருமதி. ரேணு அருண் காந்தா
திருமதி. சாரா மால்தோ மர்க்வஸ்

உத்தரகாண்ட்

பஸ்பூர்:

கிறிஸ்டியன் பிரகாஷ் & கோகனி சுமித்ராபேன்

துதிக்க: புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் விதைக்கப்பட்டுள்ளது. நமது விசுவாசி சோட்டலால் குடும்பத்திலிருந்த நிலப்பிரச்சனை ஜெபத்தின் மூலம் சுமூகமாக தீர்க்கப்பட்டது. இப்பகுதியில் புதிய தொடர்பாளர் சாமிங் என்பவர் கிடைக்கப் பெற்றுள்ளார். அணில் காசநோயிலிருந்தும், முக்காராம் சிங் பக்கவாதத்திலிருந்தும், விர்வாட்டி இரத்தத் தொற்றிலிருந்தும் சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அசுத்த ஆவியின் பிடியிலிருந்து ஷாம் சிங் பயால் மற்றும் குர்மேஜ் சிங் விடுவிக்கப்பட; ஹரிஸ் சிங்கும், காச நோயிலிருந்து ராணியும், நெஞ்சுவலியிலிருந்து சுபாசும், புற்றுநோயிலிருந்து அணிலும் அற்புத சுகம் பெற தேவனை நோக்கி மன்றாடுவோம்.

நானக்மட்டா:

சிவகுமார் & சுசிலா மராக்

துதிக்க: புதிதாக 9 கிராமங்களில் கிறிஸ்துவின் சுவிசேஷம் பகிரப்பட்டுள்ளது. 75 நபர்கள் முதன் முறையாக இயேசுவின் அன்பை அறிந்து கொண்டனர். பாஸ்கர் கிராமத்தில் முதல் விசுவாசியான சர்ஜீத் கௌர் தனது வியாபாரத்திற்கென்று ஜெபத்தின் மூலம் ஒரு டிராக்டர் வாங்க தேவன் கிருபை புரிந்தார். தோயாரி கிராம சட்விந்தர் சரும வியாதியிலிருந்தும், ரத்னா ஃபாரம் கிராம விமலா கௌர் கோவிட்-19 அறிகுறியிலிருந்தும் சுகமாக்கப்பட்டதற்காக தேவனைத் துதிபோம்.

ஜெபிக்க: காட்டிமா கிராமத்தைச் சார்ந்த ராஜு ரணா கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ள; தேயாரி கிராமத்தில் நமது விசுவாசி பல்ஜிந்தர் சிங் என்பவருக்கு மருத்துவ கடை திறக்க நல்லதொரு இடம் கிடைக்க; ஹர்ரையா கிராமத்தைச் சார்ந்த குர்ணாம் சிங் பக்கவாத நோயிலிருந்தும், ஜெஸ்விந்தர் கௌர் சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்தும், பாஸ்கர் கிராம மல்கிர் சிங் என்பவருக்கு விபத்தினால் ஏற்பட்ட காயம் நீங்கவும் தேவன் உதவிச் செய்ய; இஸ்லாம் நகர் அர்ஜீத் கௌர் என்பவருக்கு தீய சக்தியிடமிருந்து விடுதலை கிடைக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கோல்டன் J. இன்பராஜ்

மல்தன்சோர்:

ஷிஷு பால் & அனிதா

துதிக்க: ஒன்பது பேர் விசுவாச வாழ்விற்குள் வந்துள்ளனர். புதிதாக ஏழு கிராமங்களில் சுவிசேஷம் உரைக்கப் பட்டுள்ளது. மோகன் நகரில் நடத்தப்பட்ட ஆத்தும ஆதாயப்பயிற்சி ஆசீர்வாதமாக நடைபெற தேவன் உதவினார். வட்ரம்பூர், குலாஹார் ஆகியப் பகுதிகளில் ஒருசில புதிய தொடர்பாளர்கள் கிடைக்க உதவிச் செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: குலாகார் பகுதியில் ஊழி யங்கள் ஆரம்பிக்கப்பட; தாரி பகுதியில் ஆவிக்குரிய எழுப்புதல் உருவாக; நமது புதிய தொடர்பாளர்களான தர்ஷன், ராகேஷ், அம்ரிவா, யோகேஷ், ஜோதி, பரமேஸ், மணிஷ் ஆகியோர் ஆவிக்குரிய வாழ்வில் வளர; ராம் நகர் பகுதியில் ஊழியம் விரிவாக்கப்பட தேவன் உதவி செய்ய வேண்டுமென்று ஜெபிப்போம்.

ராஜஸ்தான்

ஹனுமான்கட்:

செல்வம் தவமணி & ஹெப்சி;
ராஜு நாயக் & ஜான்சிபாய்

துதிக்க: நமது விசுவாசி ராஜு ஜான்சி தம்பதியருக்கு தேவன் குழந்தை பாக்கியம் தந்தார். நமது விசுவாசிகள் ஹகன் அரசாங்க உதவியுடன் தனது வீடு கட்டுவதற்கும், டாப்லு கிராமத்தைச் சேர்ந்த குமேய்ல் தனது வியாபாரத்தை நடத்துவதற்கு ஒரு ட்ராக்டர் வாங்கவும் தேவன் உதவி செய்தார். சரம்ஸர் கிராமத்தைச் சேர்ந்த லக்வீர் சிங் ஜெபத் திற்கு பின் மலேரியா நோயிலிருந்து சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது சுதேச ஊழியர் தர்சன்சிஸின் தாயார் இறந்ததினால் அக்குடும்பத்தின் ஆறுதலுக்காக; நமது விசுவாசிகள் தங்களது விசுவாசத்தை தைரியமாக அறிக்கையிட; நரம்பு பிரச்சனையிலிருந்து ரீனா சுகம்பெற; சூரத் தர்ஜ் கிராமத்தைச் சேர்ந்த சுக்தேவ், ஜரோதேவி, சரோஜ் மனரீதியான நோயிலிருந்து விடுதலைபெற; உர்மிளா, அறியப்படாத நோயிலிருந்து சுகம் பெற; குஞ்சன் கிராமத்தைச் சேர்ந்த குர்பீத் கௌர் தீராத மூட்டு வலியிலிருந்து சுகம் பெற ஜெபிப்போம்.

ஸ்ரீ கங்காநகர்: V. குமார் & பெட்ரிஷியா தமிழ்ச்செல்வி

துதிக்க: இரண்டு நபர்கள் மாஜ்வாலா கிராமத்தில் கிறிஸ்துவை ஏற்று கொண்டுள்ளனர். புதியதோர் கிராமம் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டது. 48F கிராமத்தில் முக்தாயார் சிங், கல்தீப் சிங் ஆகிய இருவரும் புதிய தொடர்பாளர்களாக நமக்கு கிடைக்கப் பெற்றனர். ஷெர்சிங் குடும்பம் கிறிஸ்துவுக்குள் வளர்ந்து வருகின்றனர். அமன்தீப், சந்தீப் ஆகிய இருவரும் கிறிஸ்தேசுவின் மேலுள்ள விசுவாசத்தை அறிக்கையிட; ஜகதீஸ், துர்கா ஆகியோர் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: 16S கிராமத்திலுள்ள ஹனு மான் மற்றும் சாந்தம் தங்களது கெட்டப் பழக்கங்களிலிருந்து மனந்திரும்ப ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஆபிரகாம் G.
திரு. சன்னமல்லப்பா அங்காடி
திருமதி. ஜெயந்தி ஃபிரான்சிஸ்

பாவோட்டா:

சத்திய பிரகாஷ் & அஞ்சனா மஸிஹ்

துதிக்க: புதியதோர் கிராமத்தில் கிறிஸ்துவின் நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. வேதபாட வகுப்புகள் நடத்தப்படுவதின் மூலம் விசுவாசிகள் கிறிஸ்துவில் வளருவதற்கு உறுதுணையாக இருக்கின்றது. அசுத்த ஆவியின் பிடியிலிருந்து கோட்புட்லி கிராம ராஜேந்திரா என்பவர் ஜெபத்தின் மூலம் விடுதலை பெற தேவன் கிருபை பாராட்டினார். தோல் தொற்றினால் அவதிப்பட்ட சுமித்திரா சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுவிசேஷத்தைக் கேட்ட அனைவரும் கிறிஸ்துவே தேவன் என்று அறிக்கையிட; வாலிப விசுவாசிகளுக்கு தேவன் நல்ல வாழ்க்கைத் துணைகளை அமைத்துதர; விசுவாசத்தில் பின்வாங்கிப் போன விசுவாசிகள் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ள; அணில் மற்றும் ரிங்கு குடும்பத்திற்கு குழந்தைப் பாக்கியத்தை தேவன் தந்து ஆசீர்வதிக்க ஜெபிப்போம்.

அனுப்கார்: போடார் அம்ருத் பாய் & சுவேரா மார்த்தா

துதிக்க: புதிதாக 5 கிராமங்களில் சுவிசேஷத்தை முன்னெடுத்துச் சென்றுள்ளனர். SSB மற்றும் 4A கிராமங்களில் சத்சங் நிகழ்ச்சி நடத்த தேவன் உதவினார். 5 கிராமங்களில் அநேக மக்கள் சுவிசேஷ கைப்பிரதியை உற்சாகத்துடன் பெற்றுக் கொண்டனர். சரீரத்தில் காணப்படும் பொதுவான பெலவீனத்திலிருந்து நமது சுதேச ஊழியர் ராஜேந்திரா சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: இப்பணித்தளத்தில் ஊழியம் அதிகளவில் வளர்ச்சி பெற; நமது புதிய தொடர்பாளர்களான மலாக்கிட் சிங், குல்விந்தர் சிங், சுர்ஜீத், கிக்ராம், காகு, மற்றும் பிரவின் குடும்பம் கிறிஸ்துவை முழு மனதோடு ஏற்றுக்கொள்ள; அனைத்துக் கிராமங்களிலும் சிறு குழுக்கள் செயல்படுத்தப்பட; குடிக்கு அடிமைப்படுத்தப்பட்டிருக்கும் வினோத், பாபு ஆகியோர் விடுதலை பெற தேவன் அநுக்கிரகம் செய்ய ஜெபிப்போம்.

புறக்கணிக்காத தேவன்!

ஹிமாச்சல் பிரதேசம் ராம்பூர் பணித்தளத் திலுள்ள ஜாக்ரி கிராமத்தைச் சேர்ந்த நமது விசுவாசி ராதா, தனது கணவனால் புறக்கணிக்கப்பட்டிருந்தார். ஹிமாச்சல கலாச்சாரத்தில் அப்படிப்பட்ட பெண் தனிமையாக வாழ்வது வழக்கமல்ல. எனினும் அந்த பெண் தனது மகளை வளர்த்து கல்லூரியில் சேர்க்கும் நிலை வந்த போது, ஒரு சான்றிதழ் பெறுவது அவசியமானது. உதவியற்ற நிலைமையில் ஜெபம் செய்த பின்னர் அறிமுகமான சில நபர்களின் ஆலோசனையின் பேரில் மூன்றே நாட்களில் சான்றிதழ் பெற கர்த்தர் உதவி செய்தார். நன்றி கடனாக தனது ஒருநாள் வருமானத்தை ஆண்டவருக்கு காணிக்கையாகப் படைத்தாள்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. பெரில் சிரோமணி ஏகலைவன்
திரு. பீட்டர் பிரபாகரன்

உத்தரப் பிரதேசம்

புந்தேல்கண்ட் பிராந்தியம்:

N. ராஜதுரை & பிரேமா

துதிக்க: புதிதாக 12 நபர்கள் தேவனது மந்தையில் இணைந்ததற்காக; உதாய் புரி ஆலயத்தில் நமது சுதேச ஊழியர் பனாச்சியாவும், சபை மக்களும் எதிர்ப் பின் மத்தியிலும் உறுதியாக நின்ற மைக்காக; பிண்ட் பணித்தளத்தில் நமது ஆலய மூப்பர் சத்யராமின் புதல்வி மகிமா டிவாரியா, ஜான்ஸியை சேர்ந்த அபிஷேக் அவர்களின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்றமைக்காக; சம்ரானிய பணித்தளத்திலுள்ள நமது விசுவாசிகளின் வீடுகளின் கூரைகளை தேவன் பலத்த காற்றழுத்தத்தின்போது காப்பாற்றியதற்காக; தவறுதலான செய்தி யின் நிமித்தமாக பல வருடங்களாக நடைபெறாத ஆராதனை மறுபடியும் ஆரம்பிக்கப்பட தேவன் உதவி செய்த தற்காக; பிண்ட் பணித்தளத்திலுள்ள ஆகாஷ் விசுவாசத்தில் பலப்பட்டு சில மாத இடைவெளிக்குப் பின்னர் ஆராதனை ஆரம்பிக்கப்பட்டதற்காக; மீட்மான்டி கிராமத்தைச் சேர்ந்த ஜஸ்வந்தி, பிரியங் காவும், குரார் கிராமத்தைச் சேர்ந்த சாதுராம், மஹேந்திரா ஆகியோரும் சுவி சேஷத்திற்கு ஆர்வம் காட்டுவதற்காக; டாப்ரா தேவனிடம் நெருங்கி வருகின்றார். 2 இடங்களில் இயேசு திரைப்படமும், இரவுக் கூட்டங்களும் நடைபெற்ற மைக்காக; மோத் பணித்தளத்திலுள்ள பரால் கிராமத்தில் ஒரு சிறிய வேத பாட வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதற்காக; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவித்த ஒரு குழுவினரால் ஏற்பட்டப் பிரச்சனை யினால் சிறு சிறு காயங்களுடன் தப்பிக்க செய்த ஜாம்ரேகி கிராமத்தை சேர்ந்த மான்சிங் மூப்பருக்கு தேவன் தந்த பாதுகாப்பிற்காக; ஜல்பூரி, விஷ்ணுபுரா ஆகிய கிராமங்களில் செய்யப்பட்ட வெளிப்புற சந்திப்புப் பணி பலருக்கு ஆசீர்வாதமாக அமைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது சுதேச ஊழியர்களும், தன்னார்வ பணியாளர்களும் அரசியல் காரியங்களில் ஈடுபடாமலிருக்க; ஜாக்கா, ஜட்டெளலி, டிக்கெளளி, சுட்ரி சாக் பாகிராத், ஜல்புரி, விஷ்னுபுரா, பரால், மஹேலுவா ஆகிய கிராம மக்களின் இரட்சிப்பிற்காக; மில்கான் கிராமத்தைச் சேர்ந்த சபை மூப்பரின் குடும்பத்தில் ராதே, அனிதா மற்றும் தீபக், ஸஸி ஆகியோர் குழந்தை செல்வம் பெற; சம்தார், லெளன் ஆகிய கிராமங்களில் ஆராதனைகள் ஆரம் பிக்கப்பட; விபத்தினால் ஏற்பட்ட காயங்களிலிருந்து நமது சுதேச ஊழியர் பால்பீன் சுகம்பெற. ஷிவ்னி ஆலயத்தின் நிலப்பிரச்சனை விரை வாக நல்ல முடிவுக்கு வர ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

செல்வி. சுசித்ரா லிம்மா

கைம்கஞ்ச்:

எபநேசர் ஜி. சாம் & ஜெபராணி

துதிக்க: புதிதாக இரண்டு கிராமங்கள் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டன. அஜம்பூர், பக்லோபூர், ஜயப்பூர், ல்ஜோரே, கம்பிலானட், பைத்தான் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற சிறுவர் ஊழியம் ஆசீர்வதிக்கப்பட்டதற்காக; ராமாபூர், டாபீர் கிராமங்களில் வேதபாட வகுப்பு துவங்கப்பட்டதற்காக; நமது விசுவாசிகள் ல்ஜோரை சேர்ந்த கைலா, பர்புராவைச் சேர்ந்த பிஸாம்போ, கம்பீலை சேர்ந்த ராகேஷ், ப்ரித்வி தர்வாஜாவை சேர்ந்த ராணி ஆகியோர் தங்களது உறவினர்களுடன் சுவி சேஷத்தைப் பகிர்ந்துக் கொள்கின்றதற் காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பட்பூரா கிராமத்தை சேர்ந்த மானிக் சண்ட், நோய்டாலை சேர்ந்த குடி, ஃபத்தேகர், பிரதாப், ஹானு, ரோஷ்னி ஷிதல், ஷாலினி, குலாப்ஸ்ரீ ஆகியோர் அசுத்த ஆவியிலிருந்து விடுதலை அடைய; அஜம்பூர் கிராமத் தைச் சேர்ந்த சர்வேஷ் யாதவ், கைலா கிராமத்தைச் சேர்ந்த சஞ்ஜீவ் ஆகியோர் பக்கவாதத்திலிருந்தும் நோய்டா கிராமத்தைச் சேர்ந்த குலாப்ஷ்ரீ நீண்ட நாள் தலைவலியிலிருந்தும், சிலாகா கிராமத்தைச் சேர்ந்த ஷானு, நாக்லா, உமித் கிராமத்தைச் சேர்ந்த மோம்ராஜ், பாஹலோபூரை சேர்ந்த பிரேம் சந்த், அஜம்பூரை சேர்ந்த ஓம் ஷரன் ஆகியோர் குடிப்பழக்கத்திலிருந்தும் விடுதலைப் பெற ஜெபிப்போம்.

காட்டம்பூர்:

ஜங்கோலுன் தெளதாங் & தியான்சிங் ஹெளசல்

துதிக்க: ஏழு நபர்கள் இயேசுகிறிஸ்து வின் மேல் விசுவாசம் வைத்துள்ளனர். 7 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. நம் விசுவாசிகள் வீட்டில் வசிக்கின்ற விசுவாசியல்லா தோருக்கு தனிப்பட்ட விதத்தில் சுவிசேஷம் அறிவிக்க வாய்ப்பு அளித்தார். பவன் கிராம பூஜாவும், பங்கி கிராம பூஜாவும் ஜெபத்தின் விளைவாக மகவுகளைப் பெற்றெடுத்துள்ளனர். நமது விசுவாசியாகிய சபையின் மூப்பர் அநேகரை கிறிஸ்தேசுவுக்குள் வழிநடத்தியுள்ளார். கர்த்தர் சீதாவை பக்கவாதத்திலிருந்தும், ராதாவை இரத்த சோகையிலிருந்தும் சுகமாக்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை பகிரங்கமாய் அறிக்கையிட; ரவி, சாஜன் இருவரும் கிறிஸ்தேசுவில் வளர; சாரதா, கான்தி ஆகியோரின் சுக பிரசவத்திற்காக ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. லிடியா சுதர்சன் தாமஸ்
திருமதி. அகோனி குட்டோய் அச்சுமி
திரு. கிறிஸ்டியன் பிரகாஷ் S.
திருமதி. ஜெபமலர் ராஜன்

பர்த்தனா:

சுரேஷ் மால்தோ & பிரேம்லதா

துதிக்க: புதிதாக 9 நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். புதிதாக 6 கிராமங்களில் சுவிசேஷம் பகரப்பட்டுள்ளது. தர்வா கிராமத்தைச் சார்ந்த நமது விசுவாசி நிஷாவிற்கு தேவன் சுகப்பிரசவத்தைக் கட்டளையிட்டார். குணாலி கிராமத்தைச் சார்ந்த சாஷி சாஹர் குடும்பம் புதிதாக ஆலய ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். ஹிர்தாரி கிராம ஆவ்தேஷ் தனது வியாபாரத்திற்கென்று டெம்போ ஒன்று வாங்க தேவன் உதவிச் செய்தார். ஜெபத்தின் மூலம் முர்சா கிராம ஆகாஷ் நாத் மனநோயிலிருந்தும், காரோலி கிராம ரமேஷ்வாக் தண்டுவடப் பிரச்சனையிலிருந்தும் சுகம் பெற்றனர். வைசோலி கிராமத்தைச் சார்ந்த சத்தியவதி, அச்சல்டா கிராம கலேஷி, மற்றும் ராம் நரேஷ் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலைப் பெற தேவன் கிருபை பாராட்டினார்.

ஜெபிக்க: பாகேஸ்வர் பகுதியில் இருக்கும் நமது விசுவாசிகள் துன்புறுத்துதலின் பயத்திலிருந்து வெளிவர; புதிய தொடர்பாளர்களான நவின் மால்கோசி கத்மாவ், குசுமா ஆகியோர் தைரியமாக கிறிஸ்துவை அறிக்கையிட; நடைபெற விருக்கும் தேர்வில் நமது விசுவாசிகளின் பிள்ளைகள் நல்ல மதிப்பெண் எடுப்பதற்கு தேவன் நல்ல ஞானத்தையும், அறிவையும் கட்டளையிட ஜெபிப்போம்.

நேண்ட்லா:

வசாவா பச்சியாபாய் & சவிதாபேன்

துதிக்க: ஒரு நபர் புது வாழ்விற்குள் வந்துள்ளார். 2 கிராமங்களில் நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. நாக்லா கல்யாண் கிராமத்தில் புதிய விசுவாசிகளுக்கென்று பயிற்சியும், தானுமை கிராமத்தில் ஆத்தும ஆதாயப் பயிற்சியும், ஃபிரோஷபாத் பகுதியில் பெண்கள் கூடுகையும் ஆசீர்வாதமாக நடைபெற்றது. நாக்லா கல்யாண், தான்மை, ஃபிரோஷபாத், தாயுராசி ஆகிய கிராமங்களில் நடத்தப்பட்ட வேதபாட வகுப்பின் மூலம் நமது விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுரேலா, நாக்லா பாரி, நாக்லா நத்துவா ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் உருவாக; நாக்லா கல்யாண் கிராமத்தில் சஞ்ஞெய், பூபேந்திரா, பாரத் சிங் ஆகிய குடும்பத்தினர்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்க; ஹல்புரா, காயமை, துண்ட்லா ஆகிய கிராமங்களில் நடைபெற்று வரும் சிறுக்குழுவில் கலந்து கொள்ளும் அங்கத்தினர்கள் கிறிஸ்தவ வாழ்வில் முன்னேறிச் செல்ல தேவன் உதவிச் செய்ய ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. ஹெப்சிபா ஜேக்கப் பிரதீப் குமார்
திருமதி. ராஜம் பால் சம்பத்
திருமதி. கண்மணி ராஜாசிங்

மோட்: திலக் & எமிமாள்

துதிக்க: சமுத்தர் கிராமத்தில் மீண்டும் ஆராதனையைத் தொடங்க தேவன் உதவினார். நமது சுதேச ஊழியர் பாபாசீன் பெரிய விபத்தினின்று பாது காக்கப்பட்டார். பக்கவாத நோயிலிருந்து ராஜ்குமாரியை சுகப்படுத்தியதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அலகபாத் சென்ற நம் விசுவாசி ஆனந்த் இரண்டு மாதங்களாக தன் குடும்பத்தினருடன் தொடர்பு கொள்ளாமல் இருக்கும் நிலையை தேவன் மாற்றி, மீண்டும் தன் குடும்பத்தாருடன் தொடர்பு கொள்ள; தீயப் பழக்க வழக்கங்களி லிருக்கும் ராம் கோபால் மனந்திரும்ப; ஜோதி குடும்பத்தில் தேவ சமாதானம் ஆளுகைச் செய்ய; பட்கோரி, ஷிர்காவ், பூஞ்மோர் ஆகிய இன மக்கள் மத்தியில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் உருவாக; இப்பணித்தளத்தில் பணிச் செய்ய அர்ப்பணமுள்ள சுதேச ஊழியர் கிடைக்க தேவன் கிருபை பாராட்ட ஜெபிப்போம்

மத்தியப் பிரதேசம்

நிவாலி:

சன்னமல்லப்பா & ரூபா ஏலவாகி

துதிக்க: புதிதாக 3 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. பால்சாமூட், திவ்யங்கா, பிச்சோடி ஆகிய கிராமங்களில் நடைபெற்ற வெளிப்புற சந்திப்பு ஊழியத்தை தேவன் ஆசீர் வதித்துத் தந்தார். கோல்யபாணி கிராமத்தில் ஆலயக் கட்டுமானப்பணி ஆரம்பிக்கப்பட்டது. பின்னாலி கிராமத்தில் நடைபெற்ற பெண்கள் மேளாவில் 45-க்கும் அதிகமான பெண்கள் கலந்து கொண்டு ஆசீர்வதிக்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புலம் பெயர்ந்த விசுவாசிகள் கிறிஸ்துவுக்குள் தங்கள் விசுவாசத்தில் நிலைத்திருக்க; சாட்டலி, கோட்லயபாணி ஆகிய கிராமங்களில் நடத்தவிருக்கும் விசுவாசிகளின் பயிற்சி ஆசீர்வாதமாக நடைபெற; காம்பனி, பிச்சோடி, வான்காட் ஆகிய கிராமங்களில் கிறிஸ்துவை அறிக்கையிட ஆயத்தமாயிருப்போரின் ஆவிக்குரிய வாழ்விற்காக; சாட்டலி கிராமத்தில் ஆலயம் கட்டத் தேவையான நிலம் கிடைக்க; நமது சுதேச ஊழியர் ஸ்ரீராம் ஒழுங்கு முறைகளை திறம்பட கடைப்பித்து ஊழியத்தைச் செய்ய தேவ ஒத்தாசை கிடைக்க ஜெபிப்போம்.

குஷ்டரோகி சுகமானான்

மத்தியப் பிரதேசத்திலுள்ள துல்கோட் பணித்தளத்தில், பிப்லி கிராமத்தை சேர்ந்த ஜீனு என்பவர் 5 வருடமாக குஷ்ட சரும நோயினால் அவதியுற்றிருந்தார். அவளது கைகளும் கால்களும் அழுகி நாற்றம் அடித்தது. அவளது குடும்பத்தினர் அநேக யுக்திகளைக் கையாண்டு அவளை குணப்படுத்த முயன்றும் முடியாத நிலை ஏற்பட்ட நிலையில் நமது மிஷனெரிகள் சென்று ஜெபிக்க அற்புத சுகம் பெற்று முற்றும் குணமடைந்தார். இதன் மூலம் தேவனின் அன்பு வெளிப்பட்டது.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பாசுதேவ் மால்தோ
திருமதி. ஜெபா தெபொராள் வேதமாணிக்கம்

டப்ரா:

சத்திகந்த் பரிச்சா & சகரிகா

துதிக்க: புதிதாக 7 நபர்கள் கிறிஸ்துவின் அன்பை விசுவாசத்துடன் ருசிக்க ஆரம்பித்துள்ளனர். 3 புதிய கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்ப்புக்களின் மத்தியிலும் நமது சுதேச ஊழியர்கள் மற்றும் விசுவாசிகள் விசுவாசத்தில் நிலைத்திருக்கின்றனர். பிரேம் நகரில் ஆலயக் கட்டுமானப் பணி அதிக சவால்களின் மத்தியில் நடைபெற்று வருகிறது. புதிய தொடர்பாளர்களான பாந்தி, ஊர்மிளா, சர்தார், ராஜேஷ், துருதேவ் ஆகியோர் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டுகின்றனர். வாலிப விசுவாசிகள் ஆலய நிகழ்ச்சிகளில் உற்சாகமாக கலந்து கொள்வதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது விசுவாசிகளான அணில் & ரேகா, தீபக் & சாசி ஆகிய தம்பதியர்கள் கர்ப்பத்தின் கனியால் ஆசீர்வதிக்கப்பட; மது அருந்தி விட்டு தன் குடும்பத்தாரை ஆலய ஆராதனைக்கு வரவிடாமல் தடை செய்யும் கஜராஜ் மனந்திரும்ப; சிம்ரியா சபையைச் சேர்ந்த ஆலய மூப்பர் ராஜ்குமார் இறந்துவிட்டதால் தன் மூன்று குழந்தைகளுடன் வாழ்வாதாரத்திற்காக ஏதாவது வழிகளை கண்டுபிடிக்க வேண்டுமென்ற நிலையில் இருக்கும் இவரது மனைவிக்கு தேவன் கிருபையாய் இரங்கி உதவிச் செய்ய ஜெபிப்போம்.

நேப்பாநகர்:

ஜுபராஜ் பர்தன் & ஷீபா ஜாஸ்மின்

துதிக்க: நான்கு பேர்கள் தேவனை அறியும் அறிவிற்குள் வந்துள்ளனர். 8 கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் பறைசாற்றப்பட்டுள்ளது. வயலில் கரும்பு வெட்டும் போது நம் விசுவாசிகளான அணில் மற்றும் ரூபாவை ஒரு பெரிய விபத்திலிருந்தும், குஸ்மா பாயை கருச்சிதைவிலிருந்தும் தேவன் காப்பாற்றினார். சிவால் கிராமத்தைச் சேர்ந்த சித்த பாயை அறியப்படாத நோயிலிருந்தும், பம்லாபட் கிராமத்தைச் சேர்ந்த யுவராஜை வயிற்றுக் கோளாறிலிருந்தும் தேவன் குணப்படுத்தினார். பட்னாபூர் கிராமத்தில் ராக்ஷா பாய் தீய ஆவிகளின் பிடியிலிருந்து ஜெபத்தின் மூலம் விடுதலை கொடுத்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது விசுவாசியான ஹீரா லால் & ஜுனாபாய் குழந்தைச் செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; முன்பு சில கருச்சிதைவுப் பிரச்சனை இருந்த கமலா பாயின் சுகப் பிரசவத்திற்காக; மஜியோஜ் தாகிஸ் கிராம பாலிராம் பாயிக்கு விபத்துக் காரணமாக தலையில் அடிப்பட்டிருக்கும் காயத்தை தேவன் சுகமாக்க; வேலை தேடி பல்வேறு நகரங்களுக்கு புலம் பெயர்ந்து வரும் நமது விசுவாசிகளுக்கு ஏற்படும் துன்புறுத்தல், தவறான நடத்தை, அச்சுறுத்தல், சுரண்டல் போன்றவைகளிலிருந்து தேவன் பாதுகாக்க ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. கிங்ஸ்லி ஜசக் ஜாண்சன் M.
திருமதி. அமுதா குமார் பால்
திரு. ஸ்ரீனிவாசன் J., திரு. டென்சிங் R.
திரு. அஸ்தபான் ஆதித்ய குமார் லிம்மா

பீஹார்

கிழக்கு கங்கை பிராந்தியம்:

பாபு புஷ்பராஜ் & ரேச்சல் ஜாய்ஸ்

துதிக்க: பிச்சல்பாடா, ஜட்டாகுந்தி ஆகிய கிராமங்களில் ஆலயக்கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. ஊழியர் ரவி ராத்தோட் குடும்பத்தை பிள்ளைப்பேற்றினால் தேவன் ஆசீர்வதித்தார். நமது விசுவாசியான ஜோகேந்திரன் தேவன் மீது கொண்ட நம்பிக்கைக்காக தனது குடும்ப உறுப்பினர்களின் எதிர்ப்பை சமாளிக்க தேவன் கிருபை நல்கினார். அசுத்த ஆவியின் பிடியிலிருந்து தீபக் குடும்பம் விடுதலைப் பெற்றனர். பரிகாரி, சின்ஜியா, கபேயா, பிபிகன்ஞ்ச், கோட்டா பிபிகஞ்ச், ஷக்ஸிமோல்மாரி, மாஸ்திரிபாரா, அஸ்ராம்பூர், பஸ்கார்பரா ஆகிய கிராமங்களை சுவிசேஷத்தினால் சந்திக்க தேவன் உதவியதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஜோரடல்லா, கஜால், திகி, டெட்டுலா, தடியால், சிமோல்டலி, ஈச்சகர், பகுடோல், புலா டூங்கா, கண்டகார், பாரத்பூர், சுகன்திகி, குமார்பூர் ஆகிய கிராமங்களில் இருக்கும் மக்களின் இரட்சிப்பிற்காக; மஸ்கான் கிராமத்தில் ஆலய ஆராதனை நடத்தும் போது இடையூறுகளை விளைவிக்கும் எதிர்ப்பாளர்களின் மனந்திரும்புதலுக்காக; திரிவேணிகஞ்ச் மற்றும் பிபாரா கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல்கள் உருவாக ஜெபிப்போம்.

ஜார்க்கண்ட்

தல்பும்கட் விடுதி:

வகேரா பிரமோத் குமார் & ஜஷோதாபேன்

துதிக்க: சுவிசேஷத்தினால் புதிதாக 5 கிராமங்கள் சந்திக்கப்பட்டுள்ளன. ஜெபத்திற்குப் பின் நம் விசுவாசிகளில் பலர் பல வியாதிகளிலிருந்து சுகம் பெற்றுள்ளனர். வெளிப்புற சந்திப்பு ஊழியத்தில் நமது சுதேச ஊழியர்களும், தன்னார்வ ஊழியர்களும் பங்கு கொள்கின்றனர். பக்ராகோச்சா பகுதியிலுள்ள நமது ஆலய கட்டுமான பணி மிக நேர்த்தியாக விரைகின்றதற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: நம்முடன் முன்னர் பணிபுரிந்த சுதேச ஊழியர்களாகிய சுனில் கிஸ்கு, அனில் கிஸ்கு, ஸோமே பாங்கே, ஸோமே ஷன்ஸ்தா ஆகியோர் நமது பணிகளுக்கு இடையூறாக இருப்பதிலிருந்து மனம்மாற; துப்பா கிஸ்கு, கன்த்ரா ஹன்ஸ்தா, தோர்பா பேஸ்ரா ஆகியோர் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டுகின்றனர். மஷ்டான் ஸோரேன் குருட்டிலிருந்தும், பாருடி கிராமத்தைச் சேர்ந்த ரகுநாத் ஹன்ஸ்தா கால் பெலவீனத்திலிருந்தும் சுகம் பெற; சுந்தர்டிக் பகுதியில் சுதேச ஊழியர் பணியில் அமர்த்தப்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பிரபாகர சாரதி, திரு. பாபு P.
திருமதி. மேரி ஜான்சி ராணி பென்ஹர்

பர்ஹர்வா:

கிரிஷான் குமார் & சாந்திலால்

துதிக்க: பாட்டாசி தேவி, ஜோஷ்னா தேவி ஆகியோர் பற்பல வியாதியிலிருந்து சுகம் பெற்றனர். ரவீந்திரா என்பவரின் வீட்டில் ஞாயிறு ஆராதனை நடத்த இடம் கிடைத்தது. வெளிப்புற சந்திப்பு ஊழியத்தின் மூலம் புட்டாலா கிராமத்தை சந்திக்க தேவன் உதவிச் செய்தார் சுதேச ஊழியர்களுக்கும், தன்னார்வ ஊழியர்களுக்கும் ஆவிக்குரிய கூடுகைகள் நடத்தப்பட்டதில் அநேகர் ஆசீர்வதிக்கப்பட்டதினால் தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மெயின் குமாரி, சுதிர் ரவிதாஸ், மால்தி தேவி, பட்டாசி தேவி, கார்த்திக் ரவிதாஸ், மனோஞ் ரவிதாஸ், பிரமிளா, ஜகர்நாத் சண்ட், சிட்கிநாத் சண்ட், சீமா ஆகிய புதிய தொடர்பாளர்கள் கிறிஸ்துவை விசுவாசித்து மனந்திரும்ப; தாஸ் சமுதாயத்தில் நற்செய்தியின் மூலம் முன்னேற்றம் உருவாக; நீரூ காதுப் பிரச்சனையிலிருந்தும், நிர்மலா தேவி ஆஸ்துமாவிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

பாக்கூர்: சந்தால் சீஷத்துவ பயிற்சி ஊழியம்: சுதாகரன் & ஃப்ளாரன்ஸ்

துதிக்க: நமது விசுவாசிகளாக இருந்து, பின்னர் நம் மிஷனெரிகளாக மாறிய லூபின் மூர்மு & சலோமி ஹன்ஸ்தக் ஆகியோரின் திருமணம் தேவ நாம மகிமைக்காக நடைபெற தேவன் உதவிச் செய்தார். ராஜ்மஹால் பிராந்திய சுதேச ஊழியர்களை தேவன் ஆசீர் வதித்தார். அநேக திருச்சபைகளில் வேத பாடவகுப்புகள் வெற்றிகர மாக நடந்து வருகிறதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: விசுவாசிகளுக்கென்று நடத்தப்படவிருக்கும் கன்வென்ஷன் கூடுகை ஆசீர்வாதமாக நடந்தேற; விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர; வேத பாட வகுப்புகள் தடையின்றி நடத்தப்பட தேவன் கிருபை பாராட்ட ஜெபிப்போம்.

இறுக்கமடைந்த கைகள் வாகனத்தை ஓட்ட முடியுமா?

ஹிமாச்சல் பிரதேசத்திலுள்ள ராம்பூர் பணித்தளத்தில், நமது விசுவாசி அமன் தனது சம்மந்தகாரரைச் சந்தித்து விட்டு வீடு திரும்பும் வழியில் 7 கி.மீ. தாண்டிய பிறகு, திடீரென்று அவரது கால்களும் கைகளும் இறுக்கிக் கொண்டது. அவரது நிலையைக் கண்ட மனைவி சிறிது அலறினாலும், உடனே ஜெபம் செய்ததின் விளைவாக வண்டி தானாகவே அந்த பயங்கரமான சரிக்கும் வளைவில் நகர்ந்து சென்றது. எதிரேயிருந்து வந்த வாகனத்தின் மேல் மோதியும் எவ்வித பாதிப்பும் ஏற்படாமல் தங்களது இருப்பிடமாகிய ஜியோரி மட்டும் வந்து சேர்ந்தனர். வழியில் அவர் தலைசுற்றி அவதிப்பட்டாலும் சுகமாக வீடு வந்தடைந்தார். அசம்பாவிதம் ஏற்படாமல் காத்த தேவனுக்கு நன்றி கூறுவோம். மிகவும் சறுக்கலான அந்த மலைப் பாதையில் தேவனது வலுமை யான கரம் அழகாக வாகனத்தை ஓட்டி சென்றது அவரது அற்புதமே!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ரூபன் சாமுவேல் J.
திருமதி. லிஸி வாவச்சன்
திருமதி. பிரிசில்லாள் ரமேஷ் வேல்ராஜ்
திருமதி. கீதாஞ்சலி நாயக்
திரு. ஜாண் டேவிட்சன் செல்வராஜ்

மண்ட்ரோ: மிர்ஜியோ கிஸ்கு & செலினா ஹன்ஸ்தக்

துதிக்க: மூன்று நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 9 கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் பகரப் பட்டுள்ளது. போர்மேசோல் ஹன்ஸ்தா மஞ்சள்காமாலை நோயிலிருந்தும், பவுலோஸ் ஹெம்ரோம் மார்பு வலியி லிருந்தும், ஹேபோ மாய் மாண்டி மூளை மலேரியாவிலிருந்தும், மாசிலால் சோரேன் காச நோயிலிருந்தும் சுகம் பெற்றதற்காக; கன்வென்ஷன் கூட்டத் திற்காக போரிஜோரே பகுதியில் இருந்து நமது விசுவாசிகள் காட்டிலிருந்து மூன்று டிராக்டர் விறகுகளை எடுத்து வந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது சுதேச ஊழியர்களுக்கும், ஆலய மூப்பர்களுக்கும் வேத பாட வகுப்புகள் தவறாமல் நடைபெற; ஹரியலா கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலயக் கட்டுமானப் பணி விரைவில் கட்டி முடிக்கப்பட; விசுவாசிகளின் பிள்ளைகள் ஊழியத்தில் இணைவதற்கு முன் வர; மோகன் பெஸ்ரா காச நோயிலிருந்தும், தலாபிதி டுடு வலிப்பு நோயிலிருந்தும், லோகன் ஹன்ஸ்தா பக்கவாத நோயிலிருந்தும், கண் தெரியாமல் கஷ்டப்படும் சுர்தானி கிஸ்குவும் சுகம் பெற; மதுப் பழக்கத்திற்கு அடிமைப் படுத்தப்பட்டிருக்கும் தினேஷ் சந்திரா ஹெம்ரோம், பினோத் மராண்டி ஆகியோரை தேவன் விடுவிக்கும்படியாக ஜெபிப்போம்.

பகையா & தீன்பஹாட்: ஜெபக்குமார் & பொன்லதா

துதிக்க: புதிதாக 12 நபர்கள் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வந்துள்ளனர். மாத்தான் சாகி கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலயத்திற்குத் தேவையான தண்ணீரை தேவன் கிடைக்கச் செய்தார். விசுவாசிகள் திரைப்பட நிகழ்ச்சிகளில் தீவிரமாக ஈடுபட்டு பலரை கிறிஸ்துவிடம் வழி நடத்தி வருகிறார்கள். ஓராவன் சமிதி துணைத் தலைவர் சதீஷ் ஆலயம் கட்டுவதற்கென்று ரூ.12 இலட்சம் மதிப்புள்ள நிலத்தை நன்கொடையாக வழங்கியுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தீன்பஹார் பணித்தள மிஷனெரி மணீஷ் மற்றும் ராணி அவர் களுக்கென்று நியமிக்கும் இடத்தில் தேவப் பணியைச் செய்ய; இப்பணித்தளத்தில் புதிதாக திருமணமான மிஷனெரிகள் நெகேமியா மற்றும் அனாமிகா தம்பதியர் விரைவில் மொழியைக் கற்றுக்கொள்ள தேவன் ஞானத்தைத் தரும்படியாக; புதிய தொடர்பாளர்களான வாலிபர்கள் நிரஞ்சன், அரவிந்த், பிரதீப், ராம் ஆகியோர் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தோங்க; இளம் விசுவாசிகளின் திருமணம் கிறிஸ்தவ முறைப்படி நடத்தப் பட; பாடாலா, குருபதி, கெரோந்தி ஆகிய பகுதிகளில் ஆராதனை நடத்து வதற்கென்று தற்காலிக கொட்டகைகள் கட்ட எடுக்கும் முயற்சியில் தேவனுடைய கரம் கூட இருக்க வேண்டுமென்று ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. மெயின்ராஜ் I.
திருமதி. சுவர்ணலதா சஞ்சீப் ஆன்ட்ரப்

மேற்கு வங்காளம்

பாக்குவாஹாட்: ராமகிருஷ்ண அகிபாடா & அஞ்சலி தேவி

துதிக்க: நிம்தாங்கா கிராமத்தில் 15 நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். 10 கிராமங்களில் நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. வெளிப்புற சந்திப்பு ஊழியத்தில் பலர் வாஞ்சை காட்டியுள்ளனர். எதிர்ப்பின் மத்தியிலும், ஊழியத்தில் முன்னேற தேவன் தந்த கிருபைக்காக; நோமிட்டா முர்முவிற்கு ஜெபத்தினால் நல்ல சுகப் பிரசவம் ஏற்பட்டது. டுனுக் கிஸ்குவை அசுத்த ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சமீபத்தில் மரணமடைந்த ஸஃபல் ஹன்ஸ்தக் குடும்பத்தினர் ஆறுதலடைய; பல இடங்களுக்கு வேலைக்குச் சென்றிருக்கின்ற உத்தர் கர்மா கிராமத்தைச் சேர்ந்த பாப்பி முர்மு, நிம்பாரியை சேர்ந்த சுஜோன் ஹன்ஸ்தா, நிம்தாங்காவை சேர்ந்த கோமல் முர்மு, சல்போனா கிராமத்தைச் சேர்ந்த நிம்மை டுடு மற்றும் சீட்டா டுடு, முட்ருடாங்கா கிராமத்தைச் சேர்ந்த ஸோய்லென் டுடு ஆகியோர் ஆவிக்குரிய வாழ்க்கையில் வளம் பெற; குட்கு மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த நமது விசுவாசிகள் எதிர்ப்பின் மத்தியிலும் விசுவாசத்தில் உறுதியாக நிலைப்பதற்காக; சுனிலால் டுடு வலிப்பு வியாதியிலிருந்தும், குக்கு கிராமத்தைச் சேர்ந்த ஸோனோட்டி முர்மு கர்ப்பப்பை தொற்றிலிருந்தும் விரைவில் குண மடைய; நமது தொடர்பாளர்களான லோட்குண்டி கிராமத்தைச் சேர்ந்த கரோன் ஹன்ஸ்தக், மன்டாலுவைச் சேர்ந்த பாஸு டுடு, ஸோர்பட்டிபூரிலுள்ள ஜுன்டுக் ராஜப், ரங்கா மாட்டியாவைச் சேர்ந்த நரேஷ் முர்மு, லோட்குன்டியைச் சேர்ந்த ராஜா ஹன்ஸ்தக், குட்குவை சேர்ந்த மொங்கள் டுடு, மாணிக்பூரை சேர்ந்த ஸ்ரீநாத் மார்டி, உலத்பூர் கிராமத்தைச் சேர்ந்த ஸ்ரீநாத் முர்மு ஆகியோர் தைரியமாக விசுவாசத்தை அறிக்கையிட ஜெபிப்போம்.

தபன்:

ஆர். கிங்ஸ்லி லிவிங்ஸ்டன் & டெல்ஃபின்

துதிக்க: புதிதாக 9 நபர்கள் கிறிஸ்தேசு வின் மந்தையில் இணைந்துள்ளனர். ஜோபோடோலா, அம்தாபூர், முல்கிராம், டோர்கட்டோலா ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்க தந்த திறந்த வாசலுக்காக; நமது விசுவாசிகள் ராபின் மராண்டி, தனாய் முர்மு, டிலிப் முர்மு, சுப்போல் சோரேன், சபினா டுடு, பிலேமோன் ஹஷ்தக் ஆகியோர் பற்பல வியாதியிலிருந்து சுகம் பெற்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஜும்ரி ஹெம்ரோம், பகா மார்டி, சுதிர் சோரேன், பரிமல் சோரேன், சிந்தா மார்டி, லக்கிடா மார்டி, பட்டி மார்டி குடும்பத்தினர் ஆகியோர் சுவிசேஷத் திற்கு வாஞ்சை காட்ட; பாசபாடா, நூரூல் ஆகிய கிராமங்களில் சிறிய ஆலயங்கள் கட்டப்பட; புலம் பெயர்ந்து தொழில் செய்யும் நம் விசுவாசிகள் விசுவாசத்தில் தளராமல் இருக்க ஜெபிப்போம்.



உபவாச ஜெபநாள்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. சாந்தா வினயராஜ்
திருமதி. லைசம்மா பாபு
திரு. ஜாஹர் சாய் பன்னா

சத்தீஸ்கட்

சம்ப்பா:

வினோத்குமார் சிங் & பிரவதிமணி

துதிக்க: சம்பா பணித்தளத்தை பொறுப்பேற்க தேவன் உதவினதற்காக; ஒரியன் கிராமத்தில் நடைபெற்ற பயிற்சி விசுவாசிகளை விசுவாசத்தில் பெலபடச் செய்துள்ளதற்காகத் தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: குடிப்பழக்கத்திற்கு அடிமைப்பட்டிருக்கின்ற சத்னாம் மக்கள் கூட்டத்தைச் சேர்ந்த ஆண் மக்களின் இரட்சிப்பிற்காக; சுவிசேஷத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்ற வீரா கிராமத்தைச் சேர்ந்த மயலால், ஷயவ், நாராயன் கேஷோல், மனந்திரும்ப; நமது விசுவாசியின் மகள் சுஜாதாவிற்கு மருத்துவத்துறையில் நல்ல தொரு வேலை கிடைக்க; காலெலும்பு முறிவிலிருந்து தேவ் பிரகாஷ் குணமடைய; ஸ்ரீராம் பக்கவாதத்திலிருந்தும், புகராம் தைராய்டு பிரச்சனையிலிருந்தும் குணமடைய ஜெபிப்போம்.

பாலோடா பஜார்:

ரமேஷ்வர் தயாள் நிர்மல் & மதுகலா

துதிக்க: சுய்யா, பன்தாகோன் ஆகிய கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. இந்தப் பணித்தளத்திற்கு மாற்றப்பட்டு புதிதாக பொறுப்பெடுக்க தேவன் தந்த கிருபைக்காக; மூப்பர்களின் கூட்டம் அநேகருக்கு ஆசீர்வாதமாக அமைந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டுகின்ற சத்நாமி, சாகு, பைநிகொ, யாதவ், நிசாத், பட்டேல், சபரியா, டங்சாகா, கும்ஹார் காஹார், டோபி, நய், வேர், சார்தி, கோர்வா டேமார், சிகாரி, லெர்மா ஆகிய இன மக்கள் மத்தியில் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட; தேவைப்படும் இரண்டு சுதேச ஊழியர்களுக்காக; நவ்டா ராமாயனா, சொவ்கா ஆகியோரின் இரட்சிப்பிற்காக; சிறுவர் திருமணம், மது அருந்துவது, திருமண முறிவு போன்ற தீயப் பழக்கங்கள் வேரோடு பிடுங்கப்பட ஜெபிப்போம்.

பையாதன் – 2:

தாங் சின் லியான் & உங் தியான்சிங்

துதிக்க: புதியதோர் கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. புல்பூர் கிராமத்திலிருந்து நமது ஊழியத்திற்கு ஒரு தன்னார்வ ஊழியர் தினேஷ் குமார் கின்டோவை கண்டுபிடிக்க உதவினார். சிர்குடா, புல்பூர் ஆகிய கிராமங்களில் ஆராதனை குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: சிர்குடாவின் விஜய் என்னும் நம் விசுவாசி தவறாக குற்றஞ்சாட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளதற்காக; புல்பூர் கிராமத்தில் தாதேராம் பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டுள்ளதற்காக; பிப்ரா கிராமத்தில் மதுப்பழக்கத்திற்கு அடிமையான தூப்ரஷ் விடுதலைபெற ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. அருள்மணி R.
திரு. தியாகராஜன் P.
திரு. அரவிந்த் குமார் M.

குஜராத்

செலம்பா: ஏசுபாபு & உஷா

துதிக்க: கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை அறிக்கையிட 5 நபர்கள் முன்வந்துள்ளனர். சும்மன் கிராமத்திலுள்ள எதிர்ப்பாளர் ஒருவர் நமது சுதேச ஊழியரை ஜெபிக்கும்படி வேண்டியுள்ளார். பெரும் விபத்திலிருந்து நமது சுதேச ஊழியர் ஜெய்சிங் பாயை தேவன் பாதுகாத்துள்ளார். சித்பூர் கிராமத்திலுள்ள விசுவாசியல்லாத ஒருவர் ஜெபத்தினால் வியாதியிலிருந்து குணமடைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: நமது ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்ற சீஸேகுட்டா கிராமத்திலுள்ள நமது பஞ்சாயத்து தலைவர் மனமாற; கோமாபாய் வியாதியிலிருந்து குணமடைய; முர்கி கிராமத்தைச் சேர்ந்த புதிய தொடர்பாளர் பர்சிங்பாய் குடும்பம் குழந்தை பாக்கியத்தை அடைய ஜெபிப்போம்.

அஹ்வா & டாங்ஸ் வெளிப்புற சந்திப்பு ஊழியம்:

பிதுஷ் குமார் நாயக் & பிரீத்திபாலா

துதிக்க: சாய்மால் மாலகா, அம்சர் பாடா கிராமங்களைச் சேர்ந்த 3 குடும்பங்கள் தேவ மந்தையில் இணைந்துள்ளனர். அம்சர்வன் கிராமத்தின் அறுப்பின் பண்டிகையும், ஸன்தா கிராமத்தில் நடைபெற்ற நன்றி நவிலல் ஆராதனையும் அநேகருக்கு ஆசீர்வாதமாக அமைந்தது. விஷ பாம்பின் கடியிலிருந்து வைடியலன் கிராமத்திலுள்ள கண்பத்தாயை தேவன் பாதுகாத்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கோவிட்-19 தொற்றுநோயின் அறிகுறியினால் அநேக விசுவாசிகள் அவதியுறுகின்றனர். மோட்டா சர்யா, வாஜர்னா கிராமங்களிலுள்ள நமது விசுவாசிகள் தேர்தலின் நிமித்தம் இரு பிரிவாகியுள்ளனர். ஹர்பாடா கிராமத்திலுள்ள ஜெயேஷ்பாய் நீரிழிவு நோயிலிருந்தும், அதே கிராமத்தைச் சேர்ந்த ஜக்தீஷ் மனநோயிலிருந்தும், மால்கா கிராமத்திலுள்ள பாண்டுபாய் பக்கவாதத்திலிருந்தும் குணமடைய ஜெபிப்போம்

பிரச்சனையின் மத்தியிலும் விசுவாசத்தின் வளர்ச்சி

மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள முக்காடா பணித்தளத்தில் மொரான்டா கிராமத்தைச் சேர்ந்த சங்கீதா நமது ஊழியத்தில் ஒரு விசுவாசி இவர். கிறிஸ்தேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட பின்னர் தோல் வியாதி, விபத்து, குடும்பத்தில் எதிர்ப்பு போன்றவைகளை சந்திக்க நேரிட்டும் தனது விசுவாசத்தில் உறுதியுடன் இருந்து தனது வாழ்க்கை, ஜெப ஜீவியம், சுவிசேஷம் அறிவித்தல் மூலம் தேவ வார்த்தையை எளிதாகப் பகிர்ந்துக் கொள்கிறார். அதன் விளைவாக அவளது குடும்பத்தில் அநேக நபரும், அயலகத்தாரும் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். அல்லேலூயா!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. டேவிட் நிக்கல்சன்
திருமதி. ஜெப ரோஸ் விஜயன்
திருமதி. பிது காந்தி லிமா ஸ்ரீதர் மொபிடெனி
திருமதி. ஹட்நெய்கிம் லெட்கோலுன் பய்ட்டே

சூரத்:

மாதவராய் & ஜெபதங்கம்

துதிக்க: சுவிசேஷத்தினால் புதியதோர் கிராமம் சந்திக்கப்பட்டது. கௌதம் பகுதியிலும், ஸச்சின் பகுதியிலும் நடைபெற்ற பெண்கள் கூட்டத்தை கர்த்தர் ஆசீர்வதித்தார். ஸச்சின் பகுதியில் புதிய தொடர்பாளர்களான சிந்து, குஷ் ஆகியோர் கிரமமாக ஆலய ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். சகுந்தலா, ரூபாலி ஆகிய இருவரும் ஜெபத்தின் மூலம் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து மீட்கப்பட்டனர். ஷிவானி, விந்தியா சகோதரிகளை கர்ப்பப்பை பிரச்சனையிலிருந்து நிவாரணம் அளித்தார். சமீர்பாய் கட்டிகளிலிருந்தும் சுரேஷ்பாயை வயிற்று வலியிலிருந்தும் சுகம் பெற செய்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஆலயம் கட்டுவதற்கான நிலத்திற்கு அனுமதி பெற எதிர்ப்பின் மத்தியிலும் பவானி நகர் விசுவாசிகள் ஸ்திரமாக நிற்க; உஷா நிர்மலா, சகுந்தலா, விந்தியா, ரூபாலி பெண்கள் மீது ஏவிவிடப்பட்ட தீய சக்திகள் தங்கள் செயல்திறனை இழக்க; எல்லா மையங்களிலும் ஞாயிறு பள்ளி கிரமமாக நடைபெற. இளம் விசுவாசிகளுக்குத் தகுதியான வாழ்க்கை துணைவர்கள் அமைய; நமது விசுவாசியின் மகன் கொரிந்துக்கு சிறுநீரகப் பிரச்சனையிலிருந்து சுகம் கிடைக்க ஜெபிப்போம்.

ஜாவ்டா – தூய தாமஸ் ஆங்கிலப்பள்ளி & விடுதி:

புஷ்பராஜ் & ஜோதி நிர்மலா, ஹரிபாபு & பங்கஜம், பொன் அகஸ்டின் & ஜாய்ஸ் ஷோபனா, பிஜுலால் & ஸ்டெஃபி, சதீஷ் & கிறிஸ்டி ஜெயந்தி, அல்போன்ஸ் & ஷைனி சினேகா வர்கீஸ், ஏஞ்சல்ராஜ், காயத்ரி, மைனா, ரூத்

துதிக்க: லாக்டவுனுக்கு பிறகு விடுதி சிறுவர்கள் அனைவரும் விடுதி திரும்பினர். பயிற்சி அளிக்கும் ஆசிரியராக மைனா, ரூத் இணைந்துள்ளனர். பிரைமறி பகுதி பள்ளியில் ஆய்வு முடிக்க தேவன் உதவி செய்தார். ஜெபத்திற்குப் பின்னர் சுகவீனமடைந்த மாணவிகள் சுகம் பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: 10,12 போர்டு தேர்வுக்கு ஆயத்தமாகும் மாணவ மாணவிகளுக்காக; இப்பள்ளியிலிருந்து தேர்வு பெற்றவர்கள் தாங்கள் வேலை செய்யும் இடங்களில் சாட்சியாக இருக்க; தங்களதுப் பிள்ளைகளை தொடர்ந்து பயிற்றுவிக்க, பெற்றோர்களின் வருமானத்திற்காக ஜெபிப்போம்.



கடோத்: ராம்சிங்பாய் வசாவா & ஊர்மிளாபேன்

துதிக்க: மாகய் கிராமத்தில் 5 நபர்கள் விசுவாசத்தில் வந்திருக்கின்றனர். இரண்டு கிராமத்தில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. மான்சட் கிராமத்தில் சுவிசேஷத்திற்கு அநேகர் ஆர்வம் காட்டுகின்றனர். ராம்புரா கிராமத்தில் ஆராதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பார்டி கிராமத்தில் புதிதாக 3 நபர் ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். பபாலி, ரேகா, வீர்சிங் ஆகியோர் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டுகின்றனர். நமது சுவிசேஷகன் சன்ஜய் ஜெபித்ததற்குப் பிறகு ஹமன்பாய் சுகம் பெற்றுள்ளதற்காகக் கர்த்தரைத் துதிப்போம்.

ஜெபிக்க: கன்னார்கே கிராமத்தில் வெளிப்புற சந்திப்பு பெருமளவில் நடைபெற்றது. மதுபேன், ரீனாபேன், சங்கிதா பேன், மோஹித்பாய் தீருபாய் மற்றும் ஜசுபாய் புதிய தொடர்பாளர்களாகிய இவர்களின் இரட்சிப்பிற்காக; விகான், மகட் கிராமங்களில் நமது ஊழியத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் துரேஷ்பாய், அதூல்பாய், சேத்தன்பாய் ஆகியோர் மனம்மாற ஜெபிப்போம்.

மாண்சா:

செல்லதுரை & கனகநேசம்

துதிக்க: தான்டுசன், தமான்வா கிராமங்களில் நடைபெறும் தொடர் ஊழியங்களை தேவன் ஆசீர்வதித்தார். போர்ஜி கிராமத்தில் தாகூர் கிராமத்தினர் சுவிசேஷத்திற்கு வாஞ்சை காட்டுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: மகேஷ்பாய், நபூபாய், பல்தேவ் பாய், தினேஷ்பாய் துரேஷ்பாய் இவர்களின் இரட்சிப்பிற்காக; தாமேடா, உனவா ஆகிய கிராமங்களில் ஆலயம் கட்ட நிலங்கள் கிடைக்க; கர்ப்பப்பை புற்று நோயினால் கஷ்டப்படும் பாவனாபேனும், இழுப்பு நோயிலிருந்து ராகேஷ் என்பவரும், புற்று நோயிலிருந்து ரிதிராஜும், மனோதத்துவ ரீதியானப் பிரச்சனையிலிருந்து ரஞ்சித் ஆகியோரும் பரிபூரண சுகத்தைப் பெற்றுக் கொள்ள ஜெபிப்போம்.

விஜயநகர்: விஜய் குமார் & சுஷீலா

துதிக்க: சம்பலயிபன்லா கிராமத்தில் வசிக்கும் காத்தோடி மக்கள் மத்தியில் செய்யப்பட்ட வெளிப்புற சந்திப்பு பெருமளவு தொடர் பணியை தேவன் ஆசீர்வதித்தார். சம்பலயிபன்லா கிராம உர்ஜா பையா ஜெபத்தின் விளைவாக வயிற்றுபாகத்தில் வீக்கம் கண்டிருந்ததிலிருந்து சுகம் பெற்றார். இதனால் 25 நபர்கள் ஆராதனையில் கலந்து கொண்டனர். வாபூர் கிராமத்தில் ஜான்ஸ் என்பவரை அசுத்த ஆவியின் பிடியிலிருந்து தேவன் விடுவித்தார். சந்திரகலா, நிர்மலா தேவி, கமலா, நாவ்டா ராம், ஜீட்டு அனைவரும் ஞாயிறு ஆராதனையில் கலந்து கொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தேவ ஊழியத்தை பரிசுத்த ஆவியின் பெலத்தினால் நமது தன்னார்வ ஊழியர் பிரகாஷ், நானலா பய்யா, புல்சந்த் பய்யா ஆகியோரை தேவன் நிறைத்து பயன்படுத்த; சிகிரி, சம்பலயிபன்லா ஆகிய பகுதிகளில் ஆலயங்கள் கட்டப்பட; கோகிலா, காச நோயிலிருந்தும், அஜய் எரிகின்ற உணர்விலும், பாய்சா கிராமத்தில் ஹாலு என்பவர் கண்நோயிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஜாண்சன் தமிழ்செல்வன்
திருமதி. சூசன் தாமஸ் மேத்யூ
திரு. சாவ் புன்யா

தாத்ரா மற்றும் நகர் ஹவேலி

கான்வேல்: அருள் ஆசீர் & சுகுணா

துதிக்க: ஒருவர் கிறிஸ்தேசுவை பின்பற்றுகிறார். நமது விசுவாசிகளுடைய பிள்ளைகளின் திருமணங்கள், குடி, நடனம் ஆகியவை நீக்கப்பட்டு கிறிஸ்தவ முறைப்படி நடைபெற்றன. நாருபாய் என்ற தொடர்பாளர் ஞாயிறு ஆராதனையில் கிரமமாகப் பங்கு பெறுகிறார். மொட்காம், கட்சின்சிலா, தஸ்லோனா ஆகிய கிராமங்களில் பெண்கள் ஜெப குழுக்கள் துவங்க உதவி செய்துள்ளார். உமர்வானி ஆலயத்தில் குஸும்பேன், அனில் பாய், மன முறிவிலிருந்தும், ராகுல்பாயை அலர்ஜியிலிருந்தும் தேவன் சுகமாக்கின தற்காகத் துதிப்போம்.

ஜெபிக்க: காவல்துறையில் நடத்தப்படும் தேர்வில் நம் விசுவாசி எழுதி வெற்றி பெற; பின்னடைவு அடைந்த நமது விசுவாசிகள், மறுபடியும் மறுமலர்ச்சிப் பெற; சிக்தாலா கிராமத்தில் தோல் அலர்ஜியினால் அவதியுறும் சகுனிப்பேனும், நிலேஷ் பாயின் தந்தை மனநோயிலிருந்தும், தஸ்லோன கிராமத்தில் காசநோயினால் அவதியுறும் பவுனிபேன் அனைவரும் சுகம் பெற ஜெபிப்போம்.

மகாராஷ்டிரா

தலாசரி: விஜய்பாபு & தேவ கிருபை

துதிக்க: கிறிஸ்தேசுவின் விசுவாசத்தில் 3 நபர்கள் வந்துள்ளனர். 4 கிராமங்கள் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளன. முதன் முறையாக 600 நபர்களை சுவிசேஷத்தினால் சந்திக்க பாலகட் மற்றும் விக்கரம்கட் பகுதிகளில் தேவன் உதவிச் செய்தார். பின்மாற்றமடைந்த 5 நபர்கள் மீண்டும் மறுமலர்ச்சிப் பெற தேவன் உதவினார். ஜெபத்திற்குப் பதிலாக மதுபாய் தனது வியாபாரத்தை நடத்த ஒரு வாகனம் வாங்க தேவன் உதவினார். விலாஸ்பாய், சந்தோஷ்பாய் ஆகியோரை விபத்திலிருந்து பாதுகாத்த தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: 111 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட. யோகத்தாபேன் பக்க வாதத்திலிருந்தும், ருச்சிக்காபேன் தொழு நோயிலிருந்தும், வாய் புற்றுநோயி லிருந்து ஆம்ருத்பாயையும் தேவன் சுகமாக்க; ராஜேஷ்பாய், கிஷான்பாய் ஆகியோரை தேவன் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்க; விக்கரம்கட் தாலுக்காவில் செய்யப்பட்ட பணி ஆசீர் வாதமாக அமைய ஜெபிப்போம்.

18 வருடங்களுக்குப் பிறகு

ராஜஸ்தானிலுள்ள ஹனுமான்கட் பணித் தளத்தில் சுரேஷ்தியா கிராமத்தைச் சேர்ந்த கிரன் நமது ஆலய ஆராதனையில் கடந்த 10 வருடங்களாக கிரமமாக பங்குப் பெற்று வருவதுடன் ஒரு குழந்தை பாக்கியத்திற்காக ஜெபித்தும் வந்தார். மற்ற விசுவாசிகள் இவளது விடாப்பிடியான ஜெபத்தைக் கண்டு வியப்புற்றனர். தேவன் அவளது ஜெபத்தை கனம்பண்ணி ஒரு குழந்தையைத் தந்துள்ளார். தேவனுக்கே மகிமை!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. பெஞ்சமின் B.
திரு. பிரதீப் முஷாஹரி
திருமதி. ஜெபஜோதி பால்ராஜ்
திரு. ஜெருயேல் பானி
திருமதி. மதுகலா ரமேஷ்வர் நிர்மல்
திருமதி. ஏமி பாக்யா

பிம்பள்நேர்: பாபுராஜ் & மேபல்

துதிக்க: மோகனே, மலாச்சபாடா, ஹர்பாடா, ஹெர்பானே, ஹேக்லாரி, சேவடிபாடா ஆகிய 5 கிராமங்களையும் சுவிசேஷத்தினால் சந்திக்க தேவன் உதவிச் செய்தார். அநேக கிராமங்களில் கரும்பு சாகுபடி செய்யும் அநேகருக்கு பாடல்களின் மூலம் சுவிசேஷம் அறிவிக்க தேவன் உதவினார். வெளிப்புற சந்திப்பு ஊழியம் மூலமாக 383 நபர்களுக்கு முதன்முறையாக சுவிசேஷத்தின் மூலம் கிறிஸ்தேசுவை அறிந்து கொண்டனர். ஆலய ஆராதனையில் சில குடும்பங்கள் புதிதாகக் கலந்து கொள்கின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: விஜய்பூர் கிராமத்திலுள்ள யோவான், யேலு, ராணி ஆகியோருக்கு தகுதியான வாழ்க்கைத் துணைகள் அமைய; விஜய்பூர் கிராமத்திலுள்ள பின்டு அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட; மரத்திலிருந்து விழுந்த தினால் கடந்த இரண்டு வருடங்களாக நடக்க இயலாதிருக்கும் பாவாபூர் கிராமத்திலுள்ள ரோகிதாஸ் நடப்பதற்கு தேவன் உதவிசெய்ய; ஆத்துமாக்களைக் குறித்த பாரத்தை நம் சுதேச ஊழியர்கள் பெறவும்; வெளிப்புற சந்திப்பு ஊழியத்தில் நம் விசுவாசிகள் இணைந்து செயல்படவும் ஜெபிப்போம்.

முக்காடா: நாகராஜன் & திலகவதி

துதிக்க: புதியதோர் கிராமம் சுவிசேஷத் தினால் சந்திக்கப்பட்டது. ஹிராபாடா கிராமத்தில் ஒரு புதிய ஆராதனைக் குழு ஆரம்பிக்கப்படவும், அநேகர் கலந்து கொள்ளவும் தேவன் உதவி செய்தார். நன்டுகாவ் கிராமத்தில் பாலோப் மூச்சு விடும் பிரச்சனை நீங்க தேவன் உதவினார். நன்டுகால் கிராமத்திலுள்ள பாபு இருதய வலியிலிருந்தும், நிகித்தா ரேதலேயை காதுப் பிரச்சனையிலிருந்தும் சுகமாக்கியமைக்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஸுமேனின் மகளை இழந்து வேதனையில் இருக்கும் அக்குடும்பம் ஆறுதலடைய. ஹேரேபாடா கிராமத்திலுள்ள மிர்கான் சிறுநீரகக் கல் பிரச்சனையிலிருந்தும், நன்டுகாவ் கிராமத்திலுள்ள மங்கேஸ் பரம் அலர்ஜியிலிருந்தும், கோஜ் கிராமத்திலுள்ள பிரபாகர் இருதய வலியிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.

கர்த்தர் வாயைத் திறந்தார்!

சுர்கானா பணித்தளத்திலுள்ள பத்தார்டி கிராமத்தைச் சேர்ந்த சந்திரபாய் என்பவர் 4 மாதங்களாக பேச இயலாமலிருந்தார். எங்கெங்கோ முயற்சி செய்தும், தோல்வியுற்ற நிலையில், நம் சுதேச ஊழியர் அவரைச் சந்தித்து ஜெபித்தார். அந்நாள் முதல் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து தனது சுகவீனத்திற்காக ஜெபித்துக் கொண்டிருந்தார். ஒருநாள் அவர் வாய் திறக்கப்பட்டு பேசும் ஆற்றலை திரும்பப் பெற்றார். தேவனுக்கே மகிமையுண்டாவதாக!



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. கனகநேசம் செல்லத்துரை
திரு. பொன் அகஸ்டின் E.
திரு. சிவகுமார் C., செல்வி. காயத்ரி C.

எட்டப்பள்ளி:

வசாவா அரவிந்த் குல்சிங் & எஜு

துதிக்க: புதிதாக 8 நபர்கள் கிறிஸ்துவின் மந்தையில் இணைந்துள்ளனர். பந்தேகாகி, பாரெல்கோன்டி ஆகிய கிராமங்களில் நடைபெற்ற விசுவாசிகளின் முகாம்களை தேவன் ஆசீர்வதித்துள்ளார். எட்டப்பள்ளி, போலேப்பள்ளி ஆகிய கிராமங்களில் நடைபெற்ற அறுப்பின் பண்டிகை அநேகருக்கு ஆசீர்வாதமாக அமைந்தது. எதிர்ப்பின் மத்தியிலும் நமது விசுவாசிகள் ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்து வருகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: அனைத்துப் பகுதிகளிலும் நடைபெறும் பயிற்சி வகுப்புக்களின் ஆசீர்வாதங்களுக்காக; நமது ஊழியங்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அட்லே, காடோ, ராஜீ கோமாடி, சுதாக்கர் கோட்டா, சைனு கோட்டா ஆகியோர் மனம்மாற; நமது சுதேச ஊழியர்கள் ஆத்தும பாரத்துடன் பணியாற்ற; மடியா மக்கள் கூட்டத்தினர் மனம்மாற ஜெபிப்போம்.

வடாலி: மூர்த்தி & பாரதி

துதிக்க: அன்ட்ராத் கிராமத்தில் ஒருவர் இயேசுவின் அடியவராக மாறினார். சுவிசேஷத்தினால் டோன்கார்கோன் ராஹவாட், ஏய்சலெட், டான்ட்ரா ஆகிய கிராமங்கள் சந்திக்கப்பட்டுள்ளன. வட்சில், உபாடகெட் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற சிறுவர் கூட்டங்களைக் கர்த்தர் ஆசீர்வதித்தார். அந்தராபாரி கிராமத்தில் சுனில் என்பவர் குடிப்பழக்கத்திலிருந்து விடுதலை பெற்றுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: வெளிப்புற சந்திப்பு ஊழியங்களில் திரையிடப்பட்ட 'இயேசு' படத்தை வாஞ்சையுடன் பார்த்த மக்களின் இரட்சிப்பிற்காக; நமது விசுவாசிகள் ராகேஷ், சஞ்சய் ஆகியோருக்கு வேலைகள் கிடைக்கவும், ராகேஷுக்கு தகுந்த வாழ்க்கைத் துணை அமையவும்; ரவீந்திர பாய்க்கு இருக்கும் கட்டியிலிருந்து சுகம் பெறவும் ஜெபிப்போம்.

நர்மதா, மொல்கி & வத்ஃபாலி:

பரணிதரன் & செல்வராணி

துதிக்க: புதிதாக ஒரு நபர் சுவிசேஷத்தினால் சந்திக்கப்பட்டுள்ளார். 2 கிராமங்களில் நற்செய்தி அறிவிக்கப்பட்டுள்ளன. தேல், மட்டியா பாரி, தல்பாடா, வெல்காடி, கிக்தா, சகிபா, பார்குண்ட் ஆகிய கிராமங்களில் நடைபெற்ற பெண்கள் கூடுகைகளைக் கர்த்தர் ஆசீர்வதித்துள்ளார். தேல், மட்டியாபாரி, தல்பாடா ஆகிய கிராமங்களில் ஜெபக்குழுக்கள் மீண்டும் தொடங்கப்பட்டுள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: கிஷ்சான், அனிதா, ரைத்திபாய், டாப்பிபாய், போண்டு ஆகியோரின் குடும்பங்களும் மற்றும் காய் கிராமத்தலைவரின் இரட்சிப்பிற்காக; சாக் திவாரி சபையை தொல்லைப்படுத்துகின்ற சுவிசேஷத்தின் எதிர்ப்பாளர்கள் மனந்திரும்ப; வலிப்பு நோயிலிருந்து வான்சிங், மனநோயிலிருந்து ரோதுவிபாய், நர்பாசிங் மற்றும் காந்திபாய் ஆகியோரும், வயிற்று வலியிலிருந்து தலைபாடா கிராம காலிபாயும் சுகம் பெற ஜெபிப்போம்.

போய்சர்:



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திரு. ஆசீர் மோசஸ் தியாகராஜ் S.
திருமதி. ஜோதிமணி மனோஜ்
திருமதி. இடிகினலா மௌனிகா காடிசெலா

பசவராஜா & சன்மதா

துதிக்க: பாய்ன்ட்ஸ் என்ற கிராமம் சுவிசேஷத்தால் சந்திக்கப்பட்டது. கோலா, ஸெகிலாபாடா, ஆகார், தலாலலி, நலலிகோடா ஆகிய கிராமங்களில் சுவிசேஷப் பிரதிகள் விநியோகிக்கவும், சுக்கேல்பாடா கிராமத்தில் வெளிப்புற சந்திப்பு ஊழியத்தையும் தேவன் ஆசீர்வதித்து தந்தார். காரே கிராமத்தில் கொடுக்கப்பட்டப் பயிற்சியினால் அநேக விசுவாசிகள் பிரயோஜனப்பட்டமைக்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தலாலலி கிராமத்திலுள்ள நம்மை எதிர்க்கின்ற துவிஸா கோட்டே மனம் மாற; பரன்கே மக்கள் கூட்டத்தினருக்கு நமது ஊழியத்தைக் குறித்துக் காணப்படும் தவறான புரிந்து கொள்ளுதல் மாறி, அவர்கள் கிறிஸ்துவின் அன்பினால் தொடப்பட; வசஞ்த், கைலாஷ் ஆகிய நமது விசுவாசிகளின் குடும்பம் குழந்தைச் செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்படவும் ஜெபிப்போம்.

காண்ட் பாரா:

பாலாஜி நெட்டாலம் & ஜெகதீஷ்வரி

துதிக்க: புதிதாக 8 நபர்கள் கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டுள்ளனர். 3 கிராமங்களில் புதிதாக நற்செய்தி பறைசாற்றப்பட்டுள்ளது. பிகான்சி குடும்பத்தினர் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். பிஜாகோன் கிராமத்தில் ஜெபக்கூடுகை நடத்தப்பட தேவன் திறந்த வாசலைத் தந்துள்ளார். பிஜாகோன் கிராமத்தில் நடத்தப்படும் ஆராதனையில் மூன்று குடும்பங்கள் கலந்து கொள்கின்றனர். ஹாகல்பாடா கிராமத்தில் சிறுவர் கூடுகை ஆரம்பிக்கப் பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: தீனா பேன், பார்கு தாதா, பங்காள் பேன், சுரேஷ் தாதா ஆகியோர் மலர்ச்சிப் பெற்ற வாழ்விற்குள் வர; டோங்க் கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஆலயக்கட்டுமானப் பணி சுமூகமாகக் கட்டி முடிக்கப்பட; விசுவாசத்தில் பின் வாங்கியிருக்கும் கிரன், கைலாஷ், லமுனா ஆகிய குடும்பத்தினர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; காசாரா, ரணாலா, ஹம்சர்பாடா, சகாலி ஆகிய கிராமங்களில் வெளிப்புற சந்திப்பு ஊழியத்திற்கு தேவன் திறந்த வாசலை உருவாக்கித் தர; வாலிபத் தலைவர் களான பிரனீதா, ஏஞ்சல், பிரசாந்த், பிலிப் ஆகியோர் ஊழியத்தில் உற்சாக மாக ஈடுபாடு கொள்ள; நாக்லி, கோல் விகீர், போடா ஆகிய கிராமங்களில் இருக்கும் திருச்சபைகள் மீட்டெடுக்கப்பட; தேவதாஸியை இழந்திருக்கும் குடும் பத்தின் பிள்ளைகளுக்கு தேவன் ஆறுதலையும், சமாதானத்தையும் கட்டளையிட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. வான்மதி மாசிலாமணி

குண்டாமோடி:

பிதுயூத் குமார் சிங்

துதிக்க: மூன்று கிராமங்களில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. நமது விசுவாசி சிவாஜி தாதா ஜெபத்தின் மூலம் தனது ஆழ்துளைக் கிணற்றிலிருந்து தனது சாகுபடிக்காக தண்ணீர் கிடைக்கப் பெற்றுள்ளார். கும்பிப்பாடா கிராமத்தில் நிறுத்தப்பட்ட ஆராதனை மீண்டும் துவங்கப்பட்டதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: விசுவாசத்தில் பின்வாங்கிப் போன அஸ்தம்பா, சேலிபர், பான்கர்பாணி ஆகிய கிராம திருச்சபையினர் மீண்டும் விசுவாசத்திற்குள் வர; அஸ்தம்பா, ஆஸ்லி, பாட்பாரா, குண்டேல் ஆகிய கிராமங்களில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் உருவாக; நாள்பட்ட வயிற்று வலியிலிருந்து பூர்மிலாபாயை தேவன் தொட்டு குணப்படுத்தப்பட ஜெபிப்போம்.

கர்நாடகா

ஷிறஹட்டி:

ஆஷாபிரப்தா பால் &
தீனாகுமாரி பெபர்தா

துதிக்க: புதிதாக மூன்று குடும்பத்தினர் ஆராதனையில் கலந்து கொள்கின்றனர். அசுத்தாவியின் பிடியிலிருந்து நாகம்மா விடுவிக்கப்பட தேவன் கிருபை பாராட்டியதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஸ்ரீமந்தபாடா கிராமத்தின் விசுவாசிகளின் கணவன்மார்கள் தங்கள் மனைவிமார்களை ஆலய ஆராதனையில் கலந்து கொள்ள அனுமதி கொடுக்க; நமது விசுவாசி ரேணுகாவிற்கு ஏற்ற வாழ்க்கைத் துணை அமைய ஜெபிப்போம்.

ஷிக்காவ் & முன்ட்கோட்:

சுனில் குமார் & சங்கீதா

துதிக்க: புதிய தொடர்பாளர்களான மஞ்சுளா மற்றும் ராஜு அதிக சவால்களின் மத்தியில் கிறிஸ்துவை அறிக்கையிட்டுள்ளார்கள். ஜெபத்திற்குப் பின் நமது விசுவாசி ஹன்சின்மனிக்கு அவருடைய குடும்பச் சொத்தில் பங்கு கிடைத்தது. ஷில்பா நாள்பட்ட வயிற்றுவலியிலிருந்து சுகத்தைப் பெற்றுக்கொள்ள தேவன் உதவியதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பிரகாஷ் குடும்பத்தினருக்கு ஆலய ஆராதனையில் கலந்து கொள்ள இருக்கும் தடைகள் மாற; நம் விசுவாசி நிகப்பா கட்டிட ஒப்பந்தத் தொழிலை எந்தத் தடையுமில்லாமல் தொடர தேவன் உதவி செய்ய வேண்டுமென்று ஜெபிப்போம்.

கஜேந்திரகடா:

மஞ்ஜ்யா நாயக் & ரத்னா

துதிக்க: பிசாசின் பிடியிலிருந்து லக்ஷ்மணன் விடுவிக்கப்பட்டார். பக்கவாத நோயிலிருந்து அக்சப்பா ஜெபத்தின் மூலம் சுகம் பெற தேவன் கிருபை ஈந்ததற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: பாசம்மா குடும்பத்தினர் கிறிஸ்துவின் அன்பை அறிந்து கொள்ள, ஹன்ஸம்மா பக்கவாத நோயிலிருந்து குணமாக்கப்பட ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. வீபா G. சந்திரா ஸ்ரீனிவாசன்
திருமதி. செல்வ மொரினா மனாசே டேனியல்
திருமதி. லாம்நெய்டிங் தெளதாங்

கானாப்பூர் (ஹாலியால்):

வினயராஜ் & சாந்தா வினயராஜ்

துதிக்க: முதன்முறையாக புதிதாக 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. அநேக புதிய தொடர்பாளர்கள் சுவிசேஷத்திற்கு ஆர்வம் காட்டுகின்றதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: புதிய தொடர்பாளரான மகாதேவி கர்ப்பத்தின் கனியால் ஆசீர்வதிக்கப்பட; விபத்தில் காயமடைந்திருக்கும் சட்குருவிற்கு தேவன் நல்ல சுகத்தைத் தரும்படியாக ஜெபிப்போம்.

ஆந்திரப் பிரதேசம்

குப்பம்:

பால் குப்புசாமி & சைலா

துதிக்க: இரண்டு நபர்கள் இயேசுவின் மேல் விசுவாசம் வைத்துள்ளனர். அநேக வியாதிகளினால் கஷ்டப்பட்ட அநேகர் சுகம் பெற்றுள்ளனர். மல்லனூர் கிராமத்தைச் சேர்ந்த திலகா ஜெபத்தின் விளைவாக போதிய நிதியுதவி பெற்று வீடு ஒன்றை கட்டியுள்ளார். ஜான்கவி என்ற சகோதரியின் தந்தை தேவன் பேரில் வைத்த விசுவாசத்தினால் மிட்டுபள்ளி ஆராதனையில் கிரமமாக பங்கு பெற்றதின் விளைவாக தனது மகள் வலிப்பு வியாதியிலிருந்து ஆரோக்கியம் பெற தேவன் உதவி புரிந்தார். 5 கிராமங்களில் நடந்த இரவுக் கூட்டங்கள் அநேகருக்கு ஆசீர்வாத மாக அமைந்துள்ளதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: ஸ்ரீனீவாஸ், ஸௌந்தர்யா ஆகிய குடும்பங்களின் இரட்சிப்பிற்காக; மல்லனூர் திருச்சபையின் ஆலய சுற்றுச் சுவர் மறுபடியும் கட்டப்பட; குப்பத்திலுள்ள ஆலயம் புதுப்பிக்கப்பட கிடைக்க வேண்டிய நிதி உதவி கிடைக்க; நமது விசுவாசிகள் கார்த்திக், வர்ஷா, ஆஷா வெண்ணிலா ஆகியோருக்கு தகுதியான வாழ்க்கைத் துணைகள் அமைய; அனிதா & கலைச்செல்வன், பாலாஜி & மாலா, சுப்ரியா & ராகுல் தம்பதியர் குழந்தை செல்வத்தினால் ஆசீர்வதிக்கப்பட; நமது விசுவாசிகள் ஆனந்த், ஷியாமாளா, தேலா ஆகியோருக்கு நிரந்தரமான வேலைக் கிடைக்க. சென்ராயன் மற்றும் சுமதி குடும்பத்தில் சமாதானம் நிலவ; நமது மிஷனெரியின் மகன் பிரானித்க்கு அறுவை சிகிச்சையின் பின்னர் ஏற்பட்ட நோய்தொற்று சுகமடைய; பேசவும், நடக்கவும் முடியாமல் இருக்கும் அமாஹித் சுகமடைய; ஆபிரகாம் காலெலும்பு முறிவிலிருந்தும், சரோஜா முடக்கு வாத வலியிலிருந்தும், கிஷோர் இரத்தத்தில் அமிலத்தின் அதிக எண்ணிக்கையிலிருந்தும் சுகம் பெற ஜெபிப்போம்.



பிறந்தநாள் வாழ்த்துக்கள்

திருமதி. நகோமி மேத்யூ ஜெபராஜ்
திரு. ஏசு பாபு A.
திரு. நிரஞ்சன் பால் L.

மதனபள்ளி:

வெங்கடேசன் & சசிகலா

துதிக்க: டொன்டோலுரு கிராம புருஷோத்தம் என்பவர் விசுவாசியல் லாதவர், இவர் ஆராதனை நடத்துவதற் கென்று தன்னுடைய வீட்டை திறந்து தந்துள்ளார். சிங்கிரிகுந்தா கிராமத்தைச் சார்ந்த மராக்கா என்பவர் அசுத்த ஆவியின் பிடியிலிருந்து விடுதலை பெற்றதினால் தவறாமல்ஜெபக்கூட்டம் நடத்துவதற்கு தன்னுடைய வீட்டைத் திறந்துக் கொடுத்திருக்கிறார். நமது விசுவாசி சந்தியாவிற்கு ஜெபத்தின் மூலம் சுகமான பிரசவமாக தேவன் உதவிச் செய்தார். விசுவாசத்தில் பின் மாற்றமடைந்திருந்த விசுவாசிகள் ஈஸ்வரம்மா, லட்சுமி தேவம்மா ஆகியோர் மீண்டும் விசுவாசத்திற்குள் வந்துள்ளனர். குவ்குந்தா கிராமத்தில் புதிதாக சுவிசேஷம் அறிவிக்கப்பட்டது. தேவன் வெங்கடேசனை கடுமையான நோயிலிருந்தும், பாரதியை தூக்க மின்மையிலிருந்தும் குணப்படுத்தி யதற்காக தேவனைத் துதிப்போம்.

ஜெபிக்க: டென்டுலுரு, சின்கிரிதுந்தா, தெகுலப்பள்ளி, அம்மாசெருவுமிட்டா ஆகிய கிராமங்களிலிருக்கும் அனைத்து மக்களும் கூடி தேவனை ஆராதிப் பதற்கான பொதுவான இடம் கிடைக்க; கலாவதி பிசாசின் பிடியிலிருந்து முழுவதுமாக விடுவிக்கப்பட; சங்கதி குந்தா கிராமத்தில் சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் உருவாக; சுவிசேஷத்திற்கு திறந்த வாசல் இருக்கும் இடங்களில் சுவிசேஷம் அறிவிக்கத் தேவையான மிஷனெரிகள், சுதேச ஊழியர்கள், தன்னார்வ ஊழியர்கள் பணியமர்த்தப்பட ஜெபிப்போம்.

குடும்ப ஜெபத்தின் வல்லமை!

மகாராஷ்டிரா மாநிலம் தலாசரி பணித் தளத்திலுள்ள பிலாட்பாடா கிராமத்தைச் சேர்ந்த விஜய்பாய் தனது குடும்பத்துடன் செங்கல் செய்யும் பணிக்குத் தொழிலாளி களாகச் சென்றிருந்தார்கள். அவரது முதலாளி கிறிஸ்துவை அறியாதவர். அனுதினம் வேலைக்கு செல்லும் முன்னர், இவர்கள் குடும்பமாக தேவனை ஆராதிப் பதை கவனித்துக் கொண்டே இருந்தார். அந்த முதலாளி சில நாட்களுக்குப் பின்னர் சுகவீனமடைந்து, நடக்க இயலாமல் போன நிலையில் மருத்துவமனை மற்றும் மந்திரவாதிகளை அணுகி சுக மடையாததால் விஜய்பாயை ஜெபிக்க அழைத்து, ஜெபத்தின் விளைவாக சுக மடைந்தார். பத்து நாட்களுக்குப் பிறகு தனது செங்கல் சூளையிலிருந்து தரமற்ற கருகிப்போன செங்கல்கள் வருவ தாக ஒரு கெட்ட கனவு கண்டு தொழிலாளி விஜய்பாயை ஜெபிக்க கேட்டுக் கொண்டார். தேவன் நமது விசுவாசியின் ஜெபத்தைக் கேட்டு, மிகுந்த சிகப்பு நிறம் கொண்ட தரமான செங்கல்கள் உருவாகி யிருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைந்தார். இதன் விளைவாக, அவரும் இயேசு கிறிஸ்துவை பின்பற்றி வருகிறார்.

மிஷனெரி ஆல்பம்

374

தமிழ்நாடு, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம், மாஞ்சோலை எஸ்டேட்டில் வாழும் கிறிஸ்தவ பெற்றோரான திரு. மணி & திருமதி. எலிசபெத் ஆகியோருக்கு மூத்த மகனாகச் சகோ. ஜாண் தினேஷ் 26.01.1982-ல் பிறந்தார். இவரது பெற்றோருக்குத் திருமணமாகி 5 வருடங்கள் பிள்ளை யில்லாமல் இருந்ததினால், இவர் பிறப்பதற்கு முன்னதாகவே அவர்கள் தங்களுக்குப் பிறக்கும் குழந்தையை தேவ ஊழியராக ஒப்புக்கொடுத்துவிட்டனர். இவர் பிறந்தபிறகு, இவரைப் பலவிதங்களில் இவரது பெற்றோர்கள் ஆவிக்குரிய வாழ்வில் நன்கு வளர்த்தனர். ஆனால், இவர் ஒரு கம்பெனியில் மேலாளராகப் பணிபுரிய விருப்பப்பட்டு, B.Com., & M.B.A., போன்ற பட்டப்படிப்புகளை முடித்தார். அத்தகைய வேலைக்கு முயற்சியெடுக்கும்போது, எரே.1:5-ன்படி, தேவன் இவரிடம் இடைப்பட்டார். கர்த்தருடைய அழைப்பிற்குக் கீழ்ப்படியும் பொருட்டு, இவர் தன்னை தேவபணிக்கென முழுநேர ஊழியராக அர்ப்பணித்தார். பின்பு இவர் உபதேசியராகச் சண்முகபுரத்தைச் சார்ந்த போதன்புரத்திலும், விக்கிரமசிங்கபுரத்திலும், துணை இயக்குனராகத் திருநெல்வேலி பேராயத்தில் ஆண்கள் பிரிவிலும் பணிசெய்தார். அச்சமயத்தில், FMPB பணித்தள விஜயம் செய்யும் வாய்ப்பு இவருக்குக் கிட்டியது. அங்கே டாக்டர். எமில் ஜெபசிங் எழுதிய 'மந்தையில் சேரா ஆடுகளே' என்ற பாடலின் மூலம் உள்ளத்தில் அதிகம் தொடப்பட்டார். எனவே, நமது இயக்கத்தில் முழுநேர ஊழியராக இணைந்து, நமது சென்னை, தலைமைச் செயலகத்தில் நிதிப்பிரிவில் ஒருவருடம் பணிசெய்தார். பின்பு உத்தரப்பிரதேசத்திலுள்ள NIM-ல் ஒருவருட மிஷனெரிப்பயிற்சிக்காக அனுப்பப்பட்டார்.

ஈரோடு, ஆசிரியர் காலனி, பெருந்துறையில் வாழும் கிறிஸ்தவ பெற்றோரான திரு. சமாதானராஜ் & திருமதி. ராஜாத்தி ஆகியோருக்கு மூத்த மகளாகச் சகோதரி. பின்னி ஞானம் 08.04.1980-ல் பிறந்தார். இவர் சிறுவயதிலிருந்தே தனது பெற்றோரால் ஆவிக்குரிய வாழ்வில் சிறப்பாக வளர்க்கப்பட்டார். சேலம், டேனிஷ்பேட்டையில் நடைபெறும் நமது மாநில முகாமில் பங்குப்பெறுவது இவரது வழக்கம். திருச்சியிலுள்ள பிஷப் ஹீபர் கல்லூரியில் M.Sc., வேதியியல் பட்டப்படிப்பு படித்துக்கொண்டிருக்கும்போது, முழுநேர ஊழியத்திற்கான தேவ அழைப்பைப் பெற்றார். தேவன் தமது அழைப்பை யோ. 15:16ன்படி இவருக்கு உறுதிப்படுத்தினார். தேவஅழைப்பிற்கு இணங்கி, இவர் 2003-ல் நமது இயக்கத்தில் வந்து இணைந்தார். பின்பு ஒருவருட மிஷனெரிப்பயிற்சியை NIM-ல் முடித்துவிட்டு, ஜார்க்கண்ட், பந்தேனியிலுள்ள நமது புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளியில் மிஷனெரி ஆசிரியையாக நமது மால்தோ விசுவாசிகளின் பிள்ளைகளுக்குக் கல்வியறிவு புகட்டும் பணியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

சகோ. ஜாண் தினேஷும், திருமதி. பின்னி ஞானமும் கர்த்தருடைய திருவுளசித்தப்படி, 30.01.2008-ல் திருமணபந்தத்தின் மூலம் இணைந்தனர். பின்பு குஜராத், ஜாவ்டாவிலுள்ள நமது புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளியில் மிஷனெரி ஆசிரியர்களாகப் பணியாற்றினர். பின்பு மீண்டும் 2009-லிருந்து 2013 வரை ஜார்க்கண்ட், பந்தேனியிலுள்ள நமது புனித தாமஸ் ஆங்கிலப்பள்ளியில் பணிபுரிந்தனர். பின்னர் 2013-லிருந்து ஜார்க்கண்ட்டிலுள்ள சித்துரியா, பாதர்காரா ஆகிய பணித்தளங்களில் முன்னோடி மிஷனெரிகளாகப் புதிய திருச் சபைகளை ஸ்தாபிக்கவும், மொழியிலக்கியப் பிரிவில் ஜுவாங் இன மக்கள் மத்தியில் மிஷனெரிப்பணியாற்றியும் வருகின்றனர்.



திரு. G. M. ஜாண் தினேஷ் & திருமதி. பின்னி ஞானம் குடும்பம்

கர்த்தர் இவர்களுக்கு இருமகள்களைத் தந்து ஆசீர்வதித்துள்ளார். மூத்தமகள் J. ஆட்லின் பிளஸ்ஸி (D.O.B. 28.01.2009) 8-ம் வகுப்பும், இளைய மகள் J. ஆல்வினா (D.O.B. 23.10.2012) 4-ம் வகுப்பும் என டோனாவூர், சந்தோஷ வித்யாலயாவில் படித்து வருகின்றனர். இம்மிஷனெரிக் குடும்பத்தைத் தினமும் நமது ஜெபங்களில் நினைத்துக்கொள்வோம்.

Regd. Newspaper for India No.17759/69



Published by: S. Sutharsan Thomas Jeyaraj on behalf of Friends Missionary Prayer Band from 29, High School Road, Ambattur, Chennai 600 053. Tel. 044-2657 0404 E-mail: info@fmpb.org ***Printed by:*** Rasi Graphics Private Limited 69-71-A, Sidco Industrial Estate, Thirumalisai - 600124. ***Editor: S. Sutharsan Thomas Jeyaraj***